ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா | வெளிநாடு 1½ அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	—	ரூ 3—0
6 மாத சந்தா ,,	—	,, 1 12
வெளிநாட்டிற்கு ,,	—	,, 4—0

வாரப்பதிப்பு

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில ஹு புரட்டாசி மீ 7உ (22—9—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 20

இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும் முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்கபதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் டி. சி. சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற மருந்துகள்.

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவமுறைப்படி தயார் செய்யப்படுவது.)

ஆச்சரியமாய் அநேக நோய்களை குணம் செய்கிறது.

மஹா சந்தன தைலம்

உலகப் பிரசித்தி பெற்றது

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்

கண் எரிச்சல்	வெட்டை சூடு
கண் சிகப்பு	காது நோய்
கண்ணில் நீர் வடிதல்	மண்டை இடி
கண் அரிப்பு	பீனிசம்
கண் பார்வைக்குறைவு	தலைமயக்கம்
கண் கூச்சம்	தலைப்பொடுகு
கண்ணில் பீளைசாருதல்	சொறி சிரங்கு
மேகநீர், வெள்ளெழுத்து	தலைமயிர் உதிர்தல்
ஒருத்தலை நோய்	நாள்பட்ட தலைநோய்
கைகால் எரிச்சல்	முதலிய பல வியாதிகளை
மூலச்சூடு	ஆச்சரியமாய் குணம் செய்யும்
அஸ்திகாங்கை	

சாலாமி சிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து!

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தை சாப்பிட்டு வந்தால் கைகால் அசதி, இடுப்பு வலி, பலக்குறைவு, ஆயாசம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கி குறைந்த ஆண் தன்மையை அதிகரிக்கச்செய்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, வீரியத்தை விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. பத்தியமில்லை.

ஒருசேர் டப்பி விலை ரூ. 2—8—0

சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஒரு முறை இத்தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிக்ஷித்துப்பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0 12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

(38)

பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடி அரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம் :— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

மதன லீலா படங்கள்

64 வகை சிற்றின்ப ரகசிய உருவ ஒரிஜனல் மாதர் போட்டோ படங்கள்

ஆல்பம் உள்பட விலை ரூ. 5.

K. G. STORES, VEPERY, MADRAS.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும் அயக்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்று மில்லை

விளம்பரம்

இதைக் கண்ணுறும் கனவான்களே!



இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரங்களால்

நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலை ரோகம், குன்மரோகம், பித்தப்பாண்டு, கைகால் முடக்கு, ஓவோய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையின்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி புண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும் தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபீஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பல மிழந்தவர்கள் எண்ணிக்கையாக மேற்படி லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்த மடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட சூப்பு. இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவர வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பல காராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவோரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனவசியம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1 12 0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1 12 0 தபாற் கூலி ரூபா 1 4 0

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5—8—0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

(51) விலாசம்:— **கருணாநிதி டிப்போ,** 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.

எந்தத்தலைவரைக் கூட்டிவந்தாலும் உள்ளதை மறைப்பதெப்படி? நம்வேலையை நாம் செய்வோம்

(கைவல்யம்)

நமது நாட்டில் பண்டு ஜீவனுக்கு சுதந்திரத்தைக் கொடுத்து சரீரத்தை எல்லாப் பந்தங்கட்கும் உட்படுத்தினர். அதனால் நம் மதம் வளர்ந்தது, ஜன சமூகம் வளரவில்லை. அதற்குச் சிறிது காலத்திற்குப் பின் ஜீவர்களின் பக்குவமென்றும், ஆன்மாக்களின் உயர்வென்றும், ஒவ்வொரு படியென்றும், ஜாதியென்றும், இன்னின்ன ஜாதியார்தான் இன்னின்ன மத சாஸ்திரங்கள் படிக்கலாமென்றும், சிலர் சாஸ்திரங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும், சிலர் கேட்கவே கூடாதென்றும், சிலர் சாஸ்திரம் படித்தவனுக்கு ஊழியம் செய்தால் போதுமென்றும், அதுவே அவனுக்கு மோட்சமென்றும், சமய உண்மைகளை மறைத்து பல சாத்திரங்களை அவரவர்கள் அவசியத்தில் மனங்கொண்டவாறெழுதி அது கடவுள் வாக்கென்றும், கடவுள் அருள் பெற்றவர்களின் மொழியென்றும், அவ்வழியில் நில்லாதவர்கள் நாத்திகர்களென்றும், நரகமடைவார்களென்றும், கடவுளுக்குப் பாவியாவார்களென்றும், அதற்குப் பின்னுமெழுதி கொடுமையான ராஜ தண்டனையும் அதில் சேர்த்து அதை மீட்டு விலகினவர்களைப் பயங்கரமான தண்டனைகளுக்குட்படுத்தி அதனால் ஜன சமூகம் பயந்து பொதுச் சமய அறிவும் தடைப்பட்டு போலி சாத்திரங்களையேபடித்து வயிற்றுப் பிழைப்பிற்கே சமயத்தை உபயோகப்படுத்தி வந்ததினால், நமது உண்மைச்சமயமும்பரவாமல் நம்மத வளர்ச்சியும் அற்றுப் போய் சன சமூகமும் வளரவேயில்லை.

மேல் நாடுகளில் விஷயம் நேர் எதிரிடையானது, சன சமூகத்திற்கு சகல சுதந்திரமும் உண்டு; மதத்திற்கு ஒன்றுமில்லை அதனால் அவர்களின் சன சமூகம் வளர்ந்து நம்மையும் அடிமைப்படுத்தி உலக போகங்களை யெல்லாம் அனுபவிக்கிறார்கள், நாமும் அவர்களைப்போல சுதந்திரமடைந்து நமது நாட்டில் மேம்பாடடைந்து உலக போகங்களை அனுபவிக்க ஆசைப்படுகிறோம். அந்த ஆசை, பூரணப்பட வேண்டுமானால் மதத்திலுள்ள நிர்ப்பந்தங்களையெல்லாம் விட்டு மதங்களில் எல்லோருக்கும் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டுமென்கிறோம். இதில் ஞாயக் குறையிருப்பதாக எந்த நாட்டானாலும் எப்படிச் சொல்ல முடியும்?

சுதந்திரமே ஜீவித காலத்திற்கும், வளர்ச்சிக்கும், சுக வாழ்விற்கும் இலட்சணமாகும். இது எங்கு இல்லையோ அங்கு ஜாதி சன சமூகமெல்லாம் கீழே போகத்தான் வேண்டும். ஒருவனுடைய சுதந்திரத்தைத் தடுப்பதற்கு எந்த மனிதனாவது, வகுப்பாவது, ஜாதியாவது, ஜனசமூகமாவது ஏற்பாடாவது, முயற்சித்தால் அப்படித் தடுப்பவர்கள் பேய்க் குணமுள்ளவர்களாக விருக்கிறார்கள் என்று சொன்னது வடதேசத்து விவேகானந்த சுவாமிகளல்லவோ!

இவ்வுலகில் புத்திசாலியின் தந்திரம் புத்தியிருக்கும் யதார்த்த குணமுள்ளவனைக்கூட ஏமாற்றித் தன் காரியத்திற்கு உபயோகப்படும்படி செய்து விடுகிறது. இந்த தந்திரத்தில் பண்டுகால முதற்கொண்டே பார்ப்பனன் பழக்கப்பட்டிருப்பதால் இப்பொழுதும் அவர்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த அதற்கு அநுகூலமான காரியங்களை எவ்வழியிலும் செய்வதற்கு, அவர்கள் சௌகரிய சாமர்த்தியங்களோடு நம்மவர்களின் உதவியையும் சம்பாதித்துத் தங்களின் சௌகரியங்களை நிலை நிறுத்திக் கொள்ளப் பிரயத்தனப்படுகிறார்கள். அது சமய உண்மைக்கு விரோதமாயும், இராச்சிய நீதிக்கு ஒத்ததல்லாதாயும் சனசமூக வளர்ச்சிக்குத் தடையாயும் இருப்பதால் நாம் அவ்வழிகளைக் குற்றம் சொல்லுகிறோம். உயர்ந்த ஜாதி இந்துக்கள் சனசமூகங்களுக்குச் செய்து வரும் காரியங்களிலுள்ள அநியாயங்களையும் ஏற்பாடுகளையும் சனங்கள் தெரிந்துகொண்டால் உயர்ந்த ஜாதியார்கள் பற்றிக் கொண்டிருக்கும் வழிமாய்ந்து போகுமென்று நாம் நினைப்பதால் அதற்காக நாம் செய்ய வேண்டுவதென்ன?

தன்காசு பிறன்காசு என்று தெரியாமல் நன்மை செய்ய முயல்பவர்கள் பேரில் காரியத்தை புணராமல் பாய்வதற்கே எப்பொழுதும் தயாராகவிருக்கும் சமயவாதி என்ற உயிரற்ற கூட்டத்திற்குள் உயிரைச் செலுத்தவேண்டும் எதுவரினும்பின்வாங்காமல் நாம் க்ஷேமப்படுவதற்கு எளியவர்களிடத் திரக்கம், அவர்கள் பசித்தவயிற்றுக்கு ஆகாரம், பொது சனங்களுக்கு அறிவையளித்தல், சமயத்தாலும் சாத்திரத்தாலும் நமது முன்னோர்களின் கொடுமையாலும் கஷ்டமடைந்திருப்பவர்களை மனிதர்களாக்குதல் முதலியவற்றை தைரியமாய் முயற்சி செய்ய வேண்டும் சுய நன்மையற்ற மனமிரக்கமுடையவர்கள் யாரிருந்தாலும் அவர்கள் மீது நாம் துவேஷம் கொள்ள வேண்டாம். தலைமைவகிக்கும் ஆசையைவிட்டுஊழியம்செய்யும்கடமையை மேற்கொண்டு தாழ்ந்தவர்கள். இறந்துபோன தற்பெருமையை எடுத்துச் சொல்லுங்கள். சமயத்தின் உண்மை தத்துவங்களை மாற்றிச் சமயப் பெரியார்கள் சொன்னதாகப் போலிச் சமய ஏற்பாட்டையும் வைதிக அதிகாரம் அநேக வருஷங்களாக சன சமூகங்களைக் கீழே போட்டு மிதிப்பதையும் சொல்லி, அவர்களைச் சுற்றி உலகில் என்ன நடந்து கொண்டிருக்கின்றனவென்பதையும் காட்டி, பார்ப்பான் சாஸ்திரத்தை மற்றவர்களுக்குக் காட்டிவிட்டுத் தான்மாத்திரம் சாஸ்திரவழியினைத்தையும் தள்ளிப் பண வரவாய்க்கேபாடுபடுவது அனைத்தையும்சொல்லிஒவ்வொருவருடையவாசலுக்கும் சிறந்த அபிப்பிராயங்களைச் செலுத்திவிட்டோமானால், பின் அவரவர்கள் காரியங்களை அவரவர்களே செய்து கொள்ளுவார்கள். அப்பொழுது நாமும் நலமடையும்; நீங்களும் கீர்த்தியுடையவராவீர்கள்.

வடதேசத்திலிருந்து யார் வந்து பாப்பாரல்லாத கட்சியைக் குற்றம் சொன்னாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. தென் தேசத்தில் நடக்கும் தீண்டாமை அநீதியும், மலையாளத்தில் நடக்கும் அக்கிரமமும், மிஸ் மேயோ குப்பையை விட நமக்கு அபகீர்த்தியைக் கொடுக்கக்கூடிய குப்பையாக விருக்கிறது என்று வல்லபாய் படேல் சொன்னதே தேசிய வாதிகளுக்குப் போதுமானது. அந்தக் குப்பையைக் கூட்டி அபகீர்த்தியைப் போக்காமல் போவார்களானால் தேசிய வாதிகளின் உடல்சுமையேயாம். உபசரணைக் கமிட்டித் தலைவர் கனம் மருதவாணம் பிள்ளையவர்கள் பெரிய காங்கிரஸ் வாதியும் மிராசுதாருமாவார். வல்லபாய் படேலால் சொல்லப்பட்ட ஆலய சமத்துவம் கொடுக்காத அபகீர்த்தியைப் பிள்ளையவர்கள் அகற்றிவிட்டால் இவருக்கும் புண்ணியம் லபிக்காது. எப்படியெனில் நம்மவர்களை நாமே தெய்வ சந்நிதி நுழையத் தடுத்தால் அந்தக் கோயிலில் தெய்வம் நுழைய மாட்டாதென்று திரு. வல்லபாய் படேல் சொன்னார். இவர் மருதவாணம் பிள்ளையாலும் அவர் சகாக்களாலும் அவர் குருநாதன் மார்களாலும் மதிக்கப்பட்டுத் தலைவராக்கப்பட்டவர் அவர் வார்த்தையில் பிள்ளையவர்க்கு நம்பிக்கை இருக்கும். இதுவரையிலும் அநேக பொருட் செலவுசெய்து கோயில்களில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறது. படேல் சொன்னபடி இதுவரையிலும் தெய்வம் கோயிலுக்குள் நுழையவில்லை. தெய்வத்தைக் கோயிலில் நுழையவைத்து பெரும் புண்ணியமடைய வேண்டுமானால், படேல் சொல்லுகிறபடி கேட்டு பிள்ளையவர்கள் எல்லாருக்கும் தெய்வ சாந்நியால்சமத்துவம் கொடுத்துக் கொடுக்கப் பாடுபட்டு பல கும்பாபிஷேகம் பண்ணின புண்ணியத்தை யடையட்டும்; பார்ப்பனருக்கு புண்ணியம் வேண்டுவதில்லை. தெய்வம் கோயிலுக்குள் நுழைகிறதென்கிற நம்பிக்கை அவர்கட்குமில்லை, அவர்கள் கும்பாபிஷேகம் செய்து வைப்பதுமில்லை; எல்லாம் நமக்குத்தான் வேண்டியிருக்கிறது.

இன்னுமொரு முக்கிய விஷயத்தை நாம் கவனிக்கவேண்டியவர்களாக விருக்கிறோம். சைவப் பண்டிதப் பெரியார்களுக்கும் நமக்கும் சில மாறுபாடான அபிப்பிராய வித்தியாசங்களை அகற்றுவதில் அலட்சியம் கூடாது; அவர்களிடம் குற்றமில்லை; அவர்கள் படித்த படிப்பு அவர்களை அவ்வழியில் பதித்துவிட்டது; அவர்கள் மேலெழும்பத்தான் முயற்சிக்கிறார்கள் படித்த புராணம் மேலெழும்ப விடுவதில்லை. புராணம் தவிர மற்ற படிப்புகள் நமது நாட்டில் பல காரணங்களால் சுருங்கிப் போயிற்று உள்ளதைத் தானே படிக்க வேண்டும். நமக்குச் சாத்திரமென்று சொல்லுவதிலும் சமய வழிபாட்டுத் துதிகளிலும் புராணக் கதைகளே நிறைந்திருக்கின்றன. அதனாலேயே நமது பண்டிதர்களின் அபூர்வமான புத்திவன்மையும் தன்னல மறுப்பும் தாங்கள் படித்த சாத்திர ஆராய்ச்சியும் அதன் உழைப்புகளுமான அறிவின் செல்வங்களெல்லாம், அவரவர்களைச்சுற்றிக்கொண்டு நின்றதேயல்லாமல் அந்நாட்டில் விலைபோவதில்லை. ஆலயம் உலம் வருவதற்குள் அநேக கவி சொல்லும் திரு. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் புத்தியின் ஞாபகம் ஸ்தல புராணம் சொல்லப் பயன்பட்டதேயன்றி, ஒரு தத்துவத்திற்கேனும் பயன்படவில்லை அவர்களைப் போன்ற வித்வான்கள் பலர் இலக்கணம்செய்வதிலும், இலக்கியம் ஒத்துப் பார்ப்பதிலும் காலத்தைப் போக்கி விட்டார்கள். அந்த இலக்கணங்களைப் பற்றின சண்டை இனியும் ஒழிந்தபாடில்லை. யாப்பைப் பற்றிய இலக்கணங்கள் பலவற்றை உணர்த்தும் நூல் பாட்டியலென்றும் இவ்விலக்கண நூலில்பழமையானது முன்னோரால் இயற்றப்பட்டவிலக்கண நூலில் பாட்டியல் பன்னிரண்டென்றும், ஈதன்றிவெண்பாகலித்துறை விருத்தம் முதலாக வெவ்வேறு பாக்களில் இயற்றப்பட்ட பாக்களும் வழங்குகின்றன வென்பர். பண்டிதர்கள் அதில் விருத்தமாய் வழங்குவது சிதம்பரப் பாட்டியல். இது பாடும் முறைமைக்குப் பன்னு தமிழ் தெளிக—கூறும் பனுவதற்குச் சொற்பொருள்கள்-காடுதற்கும் இந்நூல் விசேடப்பட்டதென்றும், காப்போடு ஆரம்பிக்கப்பட்டு பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் நான்கு வருணத்திற்கு எழுத்துக்களை நான்கு ஜாதியாகப் பிரித்து சிவன், திருமால், பிரமா, தேவேந்திரன் முதலியவர்கள் ஒவ்வொரு ஜாதிக்கும் எழுத்துச் செய்தார்களென்று முடிகிறது. இதைச் செய்தவர் பரஞ்சோதியார்; இவர் சிவபெருமான் பரஞ்சோதிதானோ வேறு எந்தப் பரஞ்சோதியோ யாமறியோம்.

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

இதிகாசங்கள்

இராமாயணம்—கிட்கிந்தா காண்டம்

(கட்டுரை—5)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கங்கள் 19 முதல் 26 முடிய)

வாலி இறந்ததைக் கேட்டு தாரை அங்கதனுடன் ஓடிவந்தாள். சிலர் அவளை அங்கதனுடன் கிட்கிந்தைக்கு அழைத்தார்கள். அவர்கள், சுக்கிரீவனைச் சேர்ந்தார். அதில் புகுமுன் தாம் புகுந்து அங்கதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்றனர். ஆனால், அவள் மறுத்துரைத்து ஒருபுலிபுலாலுக்காக ஆசைப்பட்டுச் சிங்கத்தைக் கொன்றதுபோல இராமனால் கொல்லப்பட்டுக் கிடந்த வாலியிடம் வந்தாள். இராமனும், தம்பியும், சுக்கிரீவனும் ஒய்யாரமாகநிற்பதைத் கண்டு இவனும் இராமனுக்கு அநுகூலமாக நடந்திருந்தால் இராமன் கொல்வானா? முதல்முறைவாலியைக் கொல்லவில்லையே? என்று எண்ணிக் கொண்டு வாலிமேல் விழுந்து தாரை அழலானாள். அவள், "என்சொல்லைக் கேளாமல் வந்து மடிந்தீரே, தேவமாதரும் உம்மை விரும்புவர். நீர் எங்களைத்தனியே விட்டுப்போனீரே. சுக்கிரீவனுடைய மனைவியைப்பற்றிய பாவம் பலன் தந்தது. சுக்கிரீவன் அங்கதனை என்ன செய்வானோ? சுக்ரீவன் நினைத்ததை முடித்தான்" என்று அலறினாள். வாலியினுடைய ஏனைய மனைவியரும் அழுதனர்.

அநுமான், "அவரவர்கள் கர்மத்தை அவரவர்களே அநுபவிக்கவேண்டும். உயிர்களில் ஒருவர் மற்றொருவரை குறைகூறவோ வருந்தவோ காரணமில்லைவாலிதன்கேடான புண்ணியபலனாசுவர்க்கத்தில் அடையப்போனார். அம்மா! அவருக்காகக்கவலைப்படாதே. அங்கதனுக்குமுடிசூட்டி அவனுக்குத் துணையாயிருந்து அரசாங்க. உன்மகன் அரசாள்வதைக் கண்டால் இத்துக்கத்தை மறப்பாய்" என்று தாரையைத் தேற்றினன். தாரை, "என்மகனைப்பற்றிய கவலை சுக்கிரீவனுக்கே. நான் இனி இவரடியினிலேயே இறப்பேன்" என்றனள். அநுமான் வாலிக்கு உத்தரக்கிரியைகளை விரைவில் நடத்த அவசரப்படுத்தினான்.

வாலி தெய்வபக்தியால் மூர்ச்சை தெளிந்து சுக்கிரீவனை அழைத்து, "நீ அரசாளும் அங்கதனைப் பேணுவாயாக. அவன்பேரில் உனக்கு முன்னணியில் நிற்பான். தாரை யதிவாதியானதால் அவளுடைய பேச்சைக் கேட்டு....தேவேந்திரனால்கொடுக்கப்பட்டுஎனக்குமிருந்த வல்லமையைத் தந்த இந்தத் தங்க மாலையைப்பெற்றுக்கொள்" எனக்கழற்றிக்கொடுத்தான். சுக்கிரீவன் அதைப்பெற்றுக்கொண்டான். வாலி மகிழ்ந்து அங்கதனை நோக்கி, "சுக்கிரீவன் சொற்படி நட; அவன் பகைவரோடு சேராதே" என்று சொல்லிவிட்டு உயிரை விட்டான்.

தாரை, பலவாறு புலம்பி, 'ஐயோ இரத்தத்தில் கிடந்து புரள்கிறீரே. உமது நெஞ்சிலுள்ள அம்பு உம்மைத் தழுவவிடாமல் தடுக்கிறதே.' எனக் கூவினள். நீலன் அவ்வம்பைப் பிடுங்க, தாரை தழுவியழுது அங்கதனை வணங்கச் சொன்னாள். அங்கதன் வாலியை வணங்கினான். தாரை பின்னரும் புலம்பினாள்.

சுக்கிரீவன் இராமனிடம் வந்து, "வாலியைக் கொன்று எனக்கு அரசாட்சியைத் தந்தாய். எல்லாரும் இவ்வாறு வருந்த எனக்கு அரசாட்சி வேண்டாம். வாலி என்னிடம் உன்னைக் 'கொல்லமாட்டேன், உன் கொழுப்பை அடக்கினேன் ஓடிப்போ என்று கூறினன். அத்தகைய அருளுடையோனை நான் கொன்றேனே நான் அடிபட்டு வருந்தும்போது என்னைச் சமாதானஞ் செய்து இனி என்னை எதிர்க்காதே என்று சொல்லிப் போகச் சொல்வானே! நான் இவனைக் கொன்று பாவியானேனே! நான நெருப்பில் விழுந்து இறக்கிறேன்" என்றனன். அதுகண்ட இராமன் தாரையைத் தேற்ற அணுகினான். தாரை, 'உன் பெருமை எனக்குத் தெரியும். நீ காட்டிற்கு வந்து விராதன், கபந்தன், வாலி இவர்களைக் கொன்றாய். நீ தன்னலங் கருதாமல் சுக்கிரீவனுக்காக வாலியைக் கொன்றாய். உனக்கு யாதொரு கேடும் செய்யாத வாலியை உன்நண்பனுக்காகத்தான் கொன்றாய். வாலி வானுலகமாதர் மேல் கொஞ்சமும் ஆசை வையாமல் என்னையே எண்ணுவார். ஆதலின் இராம! என்னைக் கொன்றுவிடு! இது நீ வாலியைக் கொன்றஅதர்மத்திற்கு பிராயச்சித்தமாகும். திருமாலே நீயல்லவா!" என்று புலம்பினாள். இராமன் 'தாரை! வாலியால் உனக்குக் கிடைத்தசுகத்திற்கு இனியுங்குறைவு நேராது. தெய்வச் செயலால் நடந்ததற்கு வருந்தாதே" என்றான். அதனால் தாரை கவலையொழிந்தாள்.

இராமன் வாலியை அடக்கஞ்செய்யக் கட்டளையிட, இலக்குவன் சுக்கிரீவனைப் பல்லக்கில் வாலியை ஏற்றிக் கொண்டுபோய் எரிக்கச் சொன்னான். சுக்கிரீவன் வாலியைப் பல்லக்கில் ஏற்றி "என் அண்ணனுடைய கிரியைகள் குறைவில்லாமல் நடக்கட்டும். நவமணிகளையும், பொன்னையும் வாரியிறையுங்கள்" என்றான். தாரை "யமன் இராமனுடைய ரூபங்கொண்டு தங்களை இழுத்துப் போகின்றானோ? எங்கிருந்தோ இந்தப் பாழுங் காட்டைத் தேடிவந்து எங்களெல்லோரையும் விதவைகளாக்கினானே!" என அழுது புலம்பினாள்.

சவக்கிரியைகளின்பின் நீரிறைத்தார்கள். பின் அனுமான் கூற இராமன் சுக்கிரீவனுக்கு முடிசூட்டஆணை தந்து, மழைக்காலம் கழிந்தவுடன் சீதையைத் தேட வேண்டுமென்று புகன்று காட்டிலேயே தங்கினன். சுக்கிரீவன் வாலியின் அந்தப்புரம் போய் தாரை முதலிய பெண்களைத் தன் வசப்படுத்தி முடி சூட்டிக்கொண்டு அங்கதனைஇளவரசனாக்கினான்; பிராமணர் மகிழப் பொருள்களைத் தந்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்:—

தாரை 'ஒரு புலி புலாலுக்காக ஆசைப்பட்டுச் சிங்கத்தைக் கொன்றது போல இராமனால் கொல்லப்பட்டுக்கிடந்த வாலியிடம்' வந்தாள் என்று வால்மீகி கூறுகிறார். இதனால் வால்மீகிக்கு வாலி சிங்கம்போன்றவனென்பதும், இராமனே ஒரு புலிபோன்றவன் என்பதும், சுயநலத்தால் புலாலை விரும்பிப் புலி அரியேற்றைக் கொன்றது போல இராமன் வாலியைக் கொன்றானென்பதும் கொள்கையாதல் தெளிவாகிறது. இது மிகவும் உண்மையே. எச்சிற் குணத்தாலல்லவா தனக்கு யாதொரு தீமையும் செய்யாத வாலியை இராமன் கொன்றான்.

இராமன் ஒய்யாரமாக நின்றனனாம். இத்தீயவனுக்குஒருஒய்யாரமும் வேண்டுமா? தாரை வாலியைப்பார்த்து, 'இவனும் இராமனுக்குஅநுகூலமாக நடந்திருந்தால் இராமன் கொல்வானா? இராமன் முதன்முறை வாலியைக் கொல்லவில்லையே' என எண்ணினளாம்? இது ஆரியராகிய வால்மீகியது புனைந்துரையாயிருக்கலாம். மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 70ல், "இராமன் இப்படி அநுகூலமாக இருக்க வாலியைக் கேட்டு அவன் மாட்டேனென்றானா?" என்றும், "இதுவாலியை அன்புகருதி முதன்முறை கொல்லாமல் விடுத்தது உண்மையல்ல, இராமன் நேரில் பார்த்தார் இருவருக்கும் பேதங் கண்டுபிடிக்கமுடியாததாலல்லவா விட்டார்? என்றும் எழுதுகிறார். இதனால் தாரை நினைத்ததாகக் கூறுவனவெல்லாம் இடைச் செருகாகவே இருக்கவேண்டும்.

அனுமான் மிகவும் தீயவன். அவன் தாரையைத் தேற்றுகிறான். அவரவருடைய கர்மத்தை அவரவரே அடைய வேண்டுமாம் இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 74ல் பின்வருமாறு எழுதுகிறார்:—'இந்த நியாயத்தையும் உபதேசத்தையும் மாருதி சுக்கிரீவனுக்குச் சொல்லக் கூடாதா? அவன் செய்த முன் வினையால் அவனுக்கு ராஜ்யமும் பாரியையும் போயிற்றென்றும், அதைப் பொறுமையாக அநுபவிக்கவேண்டுமென்றும் சொல்லக்கூடாதா? ராமனைச் சரணமடைந்து அவைகளை மறுபடியும் கைப்பற்ற எண்ணுவது என்ன நியாயம்?" என்றும், "ராமன் தன் பாரியை ராவணனால் அபகரிக்கப்பட்டாளென்று வருந்துவதைக் கேட்ட இதே மாருதி இதே நியாயங்களை அவருக்கு எடுத்துரைத்துக் கர்ம பலனைப் பொறுமையுடன் அநுபவிக்கும்படி உபதேசிக்கவில்லையே" என்றும், அவர் எழுதுகின்றார். இதனால் அநுமான் அயோக்கியர்களில் முதன்மையானவன் என்பதில் என்ன தடையுளது?

அனுமான் தாரையிடம் உன் மகன் அங்கதனுக்கு முடிசூட்டிமகிழ்வாய் என்று கூறுகிறான். வாலியைக் கொன்ற சுக்கிரீவன் முடிசூட்டிக் கொள்ளும் நிலைமையில் அநுமான் இவ்வாறு பேசியது சுய வஞ்சகமல்லவா? இவனைப் போலத் தீயோர் உளரோ? சீனிவாசய்யங்காரும் "சுக்ரீவனுடைய கதி என்ன? ராமனுடைய பிரதிக்ஞைக்கு வழியென்ன என்பதை மாருதி யோசிக்கவில்லையோ" எனப்பக்கம் 74ல்எழுதுகிறார். மூர்ச்சையாகக் கிடக்கும் வாலியை செத்தானெனக் கூறி அவனை எரிக்க அவசரப்பட்ட இவ்வனுமான் எதைத்தான் சொல்லவும் செய்யவும் துணியான்? வாலி அப்போது தெய்வகதியால் மூர்ச்சை தெளிந்தனன் என வால்மீகி கூறுகிறார். இல்லையானால் அவனுடல் அப்போதே அனுமான் முயற்சியால் எரியுண்டிருக்கும்.

வாலி பேசிய பேச்சுக்களையும் செய்த செயல்களையும் நோக்க அவனைப் போலும் உத்தமர் இலர் என்பது தெளிவு இராமனும் அவன் தூசி விலைபெறான்! சுக்கிரீவனே பின்னால் வாலியினுடைய அருள்நிலையை விளக்கிக் கூறுகிறான், அவனை வாலி ஒருபோதும் கொல்ல முயன்றதே கிடையதாம்! சுக்கிரீவன் வருந்தினால் அவனைத் தேற்றியனுப்புவானாம் வாலி! என்னே அவனது அருங்குணம்! இவ்வருளுருவனை மறைந்து நின்று சகோதரத் துரோகியாகிய சுக்கிரீவனுக்காகக் கொன்றானே! வாலியினுடைய பெருமைகளை சீனிவாசய்யங்கார் வாக்கால் கூறுவோம். அவர் பக்கம் 77ல் விரிவாக எழுதுகிறார். சீனிவாசய்யங்கார், "தனக்கு எவ்விதத்திலும் நோல் கெடுதி செய்யாத வாலியை இராமன் சுக்கிரீவனுடைய கட்சியைமாத்திரம் கேட்டு அதர்மமாகக் கொன்றான். தன் ராஜ்யத்தையும் பாரியையும் தானிருக்கும்பொழுதே ஆழ்ந்து யோசிக்காமல் அபகரித்து தன்னைக் கொல்வதற்காக இராமனைச் சரணடைந்து தூண்டிவிட்டுக் கொல்லுவித்த சுக்கிரீவனுடைய குற்றங்களையும் துரோகத்தையும் வாலிமன்னித்

தான். விரோதத்தை மறந்தான். தானிருக்கும்போதே அரசனாக நியமித்தான், தன் சக்திக்கு ஆதாரமான மாலையைக் கொடுத்தான், அவனை நம்பித் தன் பாரியையும் புத்திரனையும் அவன் கையில் ஒப்புவித்தான். தன்னைக்கொன்ற இராமனுடைய காரியத்தை முடித்துக்கொடுக்கும்படி எச்சரித்தான். இதையோசித்தால் மற்றவர்களைக்காட்டிலும் வாலியே உத்தமபுருஷனென்றும்பட்சபாதமில்லாதவர்கள் ஒப்புக்கொள்வார்கள்' என விவரமாகத் தமதுமுடிவை எழுதுகிறார். இதை அறிஞர் மறுபடியும் படித்துச் சிந்தித்து உண்மையுணர வேண்டுகின்றோம். அறிவில்லாதவர்களே அபிமானம்பற்றித் தகாதது பேசுவர்.

சுக்கிரீவன், வாலி தந்த மாலையைக் கூசாமல் வாங்கி யணிகிறான், பின் புலம்புகிறான். இவன்புலம்பலெல்லாம் கள்ளத்தனமே யன்றி உண்மையல்லஇதையேசீனிவாசய்யங்கார் பக்கம் 82ல் "அர்ச்சுனன் கௌரவர்களைக் கொல்வதற்கு முன்னமேயே இப்படி வருந்துகிறான், சுக்கிரீவனோ வாலியைக் கொன்றபிறகு வருந்துகிறான். இது நிஜமான வருத்தமென்று தோன்றவில்லை" என்று எழுதுகிறார். இப்பாவி சுக்கிரீவன் வாலியை எரித்துவிட்டு ஊருக்குப்போய் தாரையையும் வாலியின் பிற மனைவியரையும் கைப்பற்றிக் கொண்டனனும்! சுக்கிரீவன் கவலைப்பட்டதைப்பற்றி மறுபடியும் சீனிவாசய்யங்கார் பக்கம் 84ல் "இப்படியே விபீஷணனும் இராவணன் இறந்தவுடன் துக்கித்தான். பிறகு அவன் துஷ்டனென்றும் அயோக்கியனென்றும் நிந்தித்து அவனுக்கு உத்தரக்கிரியைகளைச் செய்ய மாட்டேனென்றான். காரணமென்ன?" என எழுதுகிறார். காரணம் அவர்களுடைய அயோக்கியத்தனமே யன்றி வேறன்று. இதனைப் பின்னர் ஆராய்வோம்.

வாலி பிற மாதர்மேல் எண்ணம் செலுத்தாத உத்தமன் என்பது தாரையினுடைய புலம்பலால் தெரியவருகிறது. இத்தகைய உத்தமன் பல மனைவியரை வைத்திருந்தானென்று வால்மீகி கூறுவது ஐயமுடைத்து. இது வேண்டுமென்றேஅவரால் ஆரிய நாகரீகத்திற்கேற்ப எழுதி வைத்ததாகவே இருக்க வேண்டும்.

தாரை இராமனைப் பலவாறு புகழ்ந்தனளாம்! உத்தமியாகிய தாரை சுயநலங்கருதிச் சுக்கிரீவனுடன் வந்து குற்றமற்ற வாலியைக் கொன்ற இராமனைப் புகழ்வாளா? இதனைச் சீனிவாசய்யங்கார் பக்கங்கள் 89,90ல் "வாலியைக் காட்டிலும்மகா புத்திசாலியென்று அவனேஒப்புக் கொண்ட தாரை வாலியின் காரணங்களுக்குத் தகுந்த பதில் சொல்லாத இராமனுடைய நடத்தையை ஒப்புக் கொண்டாளென்றும், வாலியைக் குற்றஞ்சாட்டி இராமனை விஷ்ணுவாக அறிந்து துதித்தாளென்றும் காணப்படும் பாகங்கள் நியாயத்திற்கு ஒத்ததில்லையென்று சிலருடைய ஆட்சேபம்' இராமனைக் கேவலம் ஈசுவரனென்றும், அவர் எதைச் செய்தாலும் தர்மமென்றும் எண்ணும் மகாபிமானிகள், அவருடைய மனுஷிய பாவனையை மறந்து தாரை இப்படிச் சொல்லும்படி வாக்கியங்களைப்பிறகு சேர்த்தார்களென்று மேனாட்டுப்பண்டிதர்களின் கொள்கை" என்று எழுதுகிறார்.

ஆனால், தாரை மிகவும் இழிந்த ஒழுக்கமுடையவளாகவே காட்டப்படுகிறாள். இராமன் விதியைப் பற்றித் தாரையிடம் பேசுகிறான். "இவன் இதைத் தன் விஷயத்தில் ஏன் கவனிக்கவில்லை யென்று மொழிபெயர்ப்பாளர் 90ம் பக்கத்தில் வினவுகிறார். இராமன் "தாரை! நீ வாலியிடம் அடைந்த இன்பத்தை இனியும் அடைவாய்" என்றனனும். அதாவது சுக்கிரீவன் இருக்கிறான் உன்னை மனைவியாகக் கொள்ள என்று கூறுகின்றனனும். இதைக் கேட்டுத் தாரை மனக்கவலை தீர்ந்தனளாம்! இதைப்பற்றி சீனிவாசய்யங்கார் பக்கம் 90ல் "இவ்வளவு பேசின தாரையே வாலி இறந்தானென்று நம்பினபொழுதும் உண்மையாக இறந்த பிறகும் சுக்கிரீவனிடத்தில் பிரிய பாரியாக இருந்தாள். இது ஸ்திரீகளின் ஸ்வபாவமென்பதை வால்மீகி இந்த விஷயத்தில் காட்டினாரென்று எண்ணவேண்டும். ஆனால் மண்டோதரி இப்படிச் செய்யவில்லை. மண்டோதரிவிபீஷணனுடன் இணங்கியிருக்கவில்லை. தாரையோ சாதாரண ஸ்திரீ; மண்டோதரியோ விஷ்ணுவால் நிருபிக்கப்பட்டு அவருடைய அம்சத்தால் விளங்கின ஆத்மஞான முடையவள். ஆகையால் பதிவிரதா தர்மத்தைத் தவறவில்லையென்றுசிலருடையகொள்கை" என்று எழுதுகிறார். இதனை ஆராய்வோம்.

மண்டோதரி இராவணனிடத்தில் அளவில்லாத மெய்யன்பு கொண்டிருந்தமையால் அவன் இறந்தவுடன் இறந்தனள். ஆதலின் அவள் மிகவும் சிறந்தவளே. கணவர் இறந்தவுடன் பிள்ளைகளையுடைய பெண்கள் கைம்மை நோற்று நாட்டுக்கு வேண்டிய நலந்தரும் பணிகளைத் தலைமேற் கொண்டொழுகுதல்சிறந்ததொரு கடமைதான். ஆண் மக்களிலும் மனைவியார் இறந்தவுடன் கைம்மை நோற்று நாட்டுக்குப்பாடுபடுவோர் பலர் உளர். ஆனால், கணவனை யிழந்த பெண்டிர் கைம்மை நோற்க விரும்பாது வேறு கணவரை மணக்க விரும்புவரேல் அதில் யாதொரு தடையும் இருத்தல் கூடாது. ஆண் மக்கள் மறு முறை மணக்க; அதிலும் சில சண்டாளர்கள் தமது முதல் மனைவி உயிருடனிருக்கும்போதே, அதிலும் முழு உடல் நலத்துடனிருக்கும் போதே வேறு பெண்டிரை மணக்க உரிமையிருக்க, பெண் பாலருக்குக் கணவன் இறந்த பின்னரும் வேறொருவரை மணந்து கொள்ள உரிமையில்லை யென்பது முறை யாகுமா? முறையில்லை யென்பது அறிவுடையோர்கூற்றே. இம்முறைப்படி தாரை சுக்கிரீவனை மணந்திருக்கலாம். கணவன் இறந்த பின்னர் கள்ளத்தனமாகப் பிள்ளையுண்டாகி அக்கருவை அழிப்பதிலும், உலக மறிய மணந்து இல்லறம் நடத்துவதே அறிவுக்குப் பொருந்தமாக உள்ளது. இதனால் தாரை கடைகெட்டவளாவதெங்ஙனம்?

தாரை "இராம! நீ என்னைக் கொல்வது நீ வாலியைக் கொன்ற அதருமத்திற்குப் பிராயச்சித்தமாகும்" என்றனள். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 89ல் "என்னை நீவாலியைவிட்டுப் பிரித்த பாபம் தீர மறுபடியும் அவருடன் சேர்த்து வைக்கா விட்டால் உன் பார்யை நீ மறுபடியும் அடைந்தாலும் வெகு காலம் அவள் உன்னுடன் இருக்கக் கூடாதென்று சபிப்பேன் (எனத் தாரை கூறினள்) இந்த வாக்கியம் சில மூலங்களில் காணப்படுகிறது. ஆனால்,முன் ஜென்மத்தில் யார் யார் பர்த்தாக்களை அநியாயமாகப் பிரித்த பாவத்திற்காக இப்படிச் சீதையைப் பறிகொடுத்துத் தவிக்கிறாய். (இதை பாலகாண்ட ஆரம்பத்தில் கூறியுள்ளோம்) இப்பொழுதும் அந்தப்பாவத்தைச் செய்தாய். அதற்குப் பயனாக இனியும் அப்படித்தவிப்பாயென்பது கருத்தாகும். இப்படியே இராவணனையும் மண்டோதரியையும் பிரித்ததைக் கவனிக்கலாம். ஆனால் அது சீதையை எடுத்துப் போனதற்குத் தண்டனையென்றால் அதில் மண்டோதரி செய்த குற்றமென்ன? வாலி இராமனுடைய பார்யை இராவணனைப் போல் எடுத்துப் போகவில்லையே?" என்று எழுதுகிறார். இவ்வளவு தூரம் கொடுமையாகப் பேசுகின்ற தாரை இராமனை எவ்வாறு புகழ்ந்திருப்பாள்? இது சிந்திக்கத்தகுந்தது. மேலும் சாபத்தின் பின்சென்ற தாரை இராமனை எமனாக்கூறி இகழ்ந்து புலம்புகிறாள்.

சுக்கிரீவன் வாலியின் ஈமக்கிரியைகளைச் சிறக்கச் செய்தனனும்! நவமணிகளை வாரியிறைத்தனனும்! இதனைச் சிந்தித்தால் தற்காலத்திலும் பலர் தங்கள் தாயார் தந்தையாரை அவர்கள் உயிரோடிருக்கும் போதெல்லாம் படாத பாடுபடுத்தி துன்புறுத்தி அவர்கள் இறந்த பின்னர் நூறுபேர் ஆயிரம் பேர்களுக்கு உணவருத்துகிற செயலைச் செய்வது நினைவுக்கு வருகிறது. தாயார் தந்தையாரைப் பட்டினி போட்டுக்கொன்ற பின்னர் அவர்கள் நினைவுக்காகப் பலருக்கு உண வூட்டுதல் இகழ்ச்சிக் குரித்தான செயலோ, அதைப்போலவே சுக்கிரீவன் தனது மூத்தோனைக் கொன்றுவிட்டு ஈமக்கிரியைகளைச் சிறக்கச்செய்தானென்பது இகழ்ந்து நகையாடற் குரியதே.

சுக்கிரீவன் முடி சூட்டன்று பார்ப்பனர்களுக்கு உணவும் உடையும் பொருளும் கொடுக்கப் பட்டதென வால்மீகி எழுதி வைத்திருக்கிறார். குரங்குகளின் நகரமென வால்மீகி கூறும் கிட்கிந்தையில் பார்ப்பனர் ஏது? அங்குமா தானம் வாங்கப் பார்ப்பனர் புகுந்தனர். இது பொய்மையாவதோடு பார்ப்பனர் தம் நலம் கருதி இடையில் செருகிவைத்ததாக இருக்கவேண்டும் அன்றி, ஆரியராகிய வால்மீகியே தம்மவர் நலங்கருதி இதனைஎழுதிவைத்தவராகவும்வேண்டும். என்னேஇவர் தம்சூழ்ச்சியின்வன்மை! இனிக்கம்பர் போக்கைக் காண்பாம்.

கம்பர் வால்மீகி கூறிய வரலாற்றை மாற்றித் தமது மனம்போல எழுதுகிறார். வாலி மாண்ட இடத்திற்குத் தாரை வந்து புலம்பி இராமனோடு வாதிட்டதையும், இராமனும் அனுமானும் கூறிய தந்திரப்பேச்சுக்களையும் மறைத்து, வாலி சாகவிட்டுத்தான் அங்கதன் வந்து அழுததாகக் கம்பர் கூறுகிறார். வாலி இராமனை நோக்கி 'என் தம்பிமேல் கோபித்து ஒரு காலத்திலும் அம்புவிடாதே. அண்ணனைக் கொல்வித்த பாவி என்று உன் தம்பிமார்கள் சுக்கிரீவனை இகழாதிருப்பார்களாக" எனக் கூறி, சுக்கிரீவனுக்கு நல்ல அறிவுரை கூறுகின்றனனென்றும், பின் அவன் அங்கதனை வரவழைத்து அழுது புலம்பிய அவனை நோக்கி என்னைக் கொன்றவன் சுக்கிரீவனெனப் பகைமை பாராட்டாதே என நல்லறிவுறுத்தி மடிந்தான் என்றும், பின்னரே தாரை வந்து புலம்ப அவளை அனுமான் வீட்டுக் கனுப்பினனென்றும் அவர் எழுதுகிறார். சுக்கிரீவனுக்கு வாலி மாலை தந்ததையும் சுக்கிரீவன் புலம்பியதையும் கம்பர் கூறவில்லை மேலும் இராமன் ஏவலால் சுக்கிரீவன் ஊருக்குப் போய் முடி சூட்டிக் கொண்டனன் என வால்மீகி கூற, கம்பர் இராமன் ஏவ இலக்குவன் சுக்கிரீவனுக்குக் காட்டில் வைத்தே முடிசூட்டி அரசற்குறு நீதியுரைத்தனுப்பினன் எனக் கூறுகின்றனர்.மேலும் சுக்கிரீவனும் அங்கதனும் அனுமனும் தனித்தனி விடைபெற்றுச் சென்றதாகவும், அனுமன் இராமனுடனேயே இருப்பேனென்று கூற, இராமன் அனுமனை நோக்கி "ஒழுங்காக அரசாண்ட ஒருவனுடைய அரசை மற்றொருவன் கைப்பற்றினால் தீமை விளைதலும் கூடும். ஆதலின் நீ சென்று முறைமை நிறுவி என்னிடம் வா" என்று கூறியதாகவும் அவர் கூறுகிறார். இது கம்பருடைய புதுக்கதையே. வால்மீகி தாரையைச் சுக்கிரீவன் வசப்படுத்தினன் என்று கூறக் கம்பர் அவன் தாரையைத் தாய்போல் வணங்கி அரசாண்டனன் என்கிறார். இது சுக்கிரீவனிடத்து ஒழுக்கம் காட்டப் போலும்!

பார்ப்பனருக்குத் தானம் வழங்கியதைக் கம்பர் கூறாது விடுப்பரோ என எண்ணினோம். எண்ணின எம்மை அவர் ஏமாற்றி, "மறையோர் ஆசி வழங்க முடி சூட்டி

(தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

அவர்கள் என்ன பேசுகிறார்கள்?

(அய்யாமுத்து)

சுய நலம்

சுய நலத்தோடு பொதுசேவையில் இறங்கக் கூடாது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். "சுய நலவாதி" என்று பலர் இழிவாகக் கருதப்படுவதையும் யான் பார்த்திருக்கிறேன். இத்தகைய எண்ணம் பெரிய அறிவாளிகள் என்று சொல்லிக்கொள்பவரிடமே தோன்றியிருத்தல் எனக்கு மிகுந்த வியப்பையும், விசனத்தையும் கொடுக்கிறது. சுய நலமில்லாத ஒருவனை மக்கள் சேவைக்கு எதிர்பார்ப்பது எதைப்போல் இருக்கிறதென்றால்; பசியில்லாத ஒருவனை ஒரு பெரிய விருந்தில் கலந்துகொள்ளச் செய்வதுபோலவும், ருசி தெரியாத ஒருவனை சமையல் வேலைக்கு அமர்த்துவது போலவுமாகும். புளியேப்பம் விட்டுக்கொண்டிருப்பவனுக்கு பதார்த்தங்களின் ருசி என்ன தெரியும்? பசிதாகமுள்ளவனுக்கன்றோ விருந்தின் அருமை தெரியும். தனக்குத் தேவையானவைகள் பிறருக்கும் தேவையாகவுள்ளவையென்ற அனுபவ ஞானம் அவனுக்கல்லவோ தெரியும்! சுய நலவாதிகட்கல்லவோ மனிதனுக்கு, மனித சுகத்துக்கு, மனித இன்ப வாழ்க்கைக்கு இன்னதுதான் தேவையென்று தெரியவரும். அவனன்றோ மனித கோரிக்கைகளுக்காகப் பாடுபடத் தகுதியுடையவன். அதுவன்றி எல்லோரும் காந்தியைப் போலவே சுய நலமற்றவர்களாய் இருக்கவேண்டுமென்பது அறிவாளிகள் எனப்படுவோருடையதும், ஜனத்தலைவர்கள் எனப்படுவோருடைய எண்ணமுமானால், காந்தியின் கச்சையும், கைராட்டையும், வேகாத சில கொட்டையும் மட்டும் மனித வர்க்கத்தின் இன்ப வாழ்வுக்குப் போதுமா என்று கேட்கிறேன். மனிதரின் இன்ப வாழ்க்கைக்கு தேவை இன்னவை தான் என்று, எல்லாத் தேவைகளையும் பூரணமாய்ப் பெற்றிட ஆவல்கொண்டிருக்கும், சுய நலவாதிகட்குத்தான் தெரியுமே அல்லாது காந்தியைப்போன்ற பொதுநலக் கோவணாண்டிகளுக்கு ஒன்றுமே தெரியாது. காந்தியார் தன் செலவுக்குத் தினமொன்றுக்கு காலணாவும் அதிகமென்று நினைத்திருக்கும்போது அவர் அதைவிட அதிகமாகப் பிறருக்கு நினைத்திட முடியுமா? மற்றும் "பொது நலம்" என்னும் வார்த்தை மக்களை கடவுள் மதம், தேசியம் என்று ஏய்ப்பதற்காகச்சொல்லப்படும் வார்த்தையென்று எல்லாத் தலைவர்கட்கும் எச்சரிக்கை செய்கிறேன்.

ஒழுக்கம்

மனிதன் தனிமையாக உலகத்தில் வசித்தால் அவன் பரிபூரண சுயேச்சையோடு நடக்கலாம். ஆனால், அவன் தன்னைப்போன்ற பிற மனிதரோடு சேர்ந்து வாழவேண்டியிருப்பதால் அவன் சில ஒழுங்குகளையும், சட்டதிட்டங்களையும் அநுசரிக்க வேண்டுவது நியாயமே. இவ்வொழுங்கிற்கும், சட்ட திட்டங்கட்கும், கடமை என்றோ; தருமம் என்றோ; மதம் என்றோ; கொள்கை என்றோ; அரசாட்சி என்றோ; குடி அரசு என்றோ என்ன பெயர் வேண்டுமானாலும் சூட்டிக்கொள்ளுங்கள். ஆனால், இவ்விதம் ஒரு மனிதனால் அல்லது சில மனிதரால் நிர்ணயிக்கப்பட்ட சட்டம் அவர்கள் இறந்த பின்னருங்கூட எல்லாக் காலத்துக்கும் எல்லா மனிதர்களையும் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொல்லுவது மிகவும் அறியாமையே. ஒவ்வொரு காலத்திலும் அவ்வக்காலத்தில் வாழும் மனிதர்கள் தங்கள் சௌகரியம், சமாதானம் முன்னேற்றம் ஆகியவற்றிற்குப் பாதகமான பல சட்டங்களை விலக்கி சாதகமான பல சட்டங்களை ஏற்படுத்திக்கொள்ள யாதொருவித மன ஆட்சேபனையுமிருக்கலாகாது. அதுவன்றி நமது முன்னோர்கள் நம்மிலும் அறிவுள்ளவர்கள் என்றும், ஆதலால் அவர்கள் நடந்தபடியே நாமும் நடக்கவேண்டுமென்றும் சொல்லுவதால் நம்மை நாம் அறிவற்றவர்களென்றும், நூதனமும் முன்னேற்றமுமான வழிகளைக் கடைப்பிடிக்க அசக்தர்கள் என்றும் காட்டிக்கொள்ளுகிறோம். நம்மை நாம் அவமதித்துக்கொள்வதற்கு இதைவிட வேறு சாட்சி வேண்டுவதில்லை. முன்னோர் சென்றவழி என்று நாம் இன்னமும்கட்டை வண்டியைக்கெட்டியாய்பிடித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் மேனாட்டார் உங்கள் முன்னோர்களாலும், உங்கள் தேவர்களாலும் செய்யப்படாத பல அற்புதங்களைச் செய்து வருகிறார்கள். ஒழுக்கம் ஒழுக்கம் என்று கூறிக்கொண்டு உங்கள் ஒழிந்துபோன சாத்திரப்படியும், மக்கிப்போன மதப்படியும் மக்கள் நடக்கவேண்டுமென்று எதிர்பாராமல் காலத்துக்கேற்ற ஒழுக்கத்தோடு நடப்பதே அறிவுடைமையாகும்.

வஞ்சகம்

உலகப்பற்று அற்றவர்களென்றும் இவ்வநித்யமான உலகில் தாம் எதொன்றையும் மெய்யெனப்பற்றிக் கொள்ளவில்லையென்றும், தாங்கள் லௌகீக உலகத்துக்காகப் பாடுபடாமல் பாரமார்த்திகத்துக்கும், மோட்ச சாதனத்துக்குமே பாடுபடுவதாகவும், இந்த யாக்கையின் பயனே கடவுள் பாதாரவிந்தங்களைச் சேருவதற்கே என்றும் பாசாங்கு செய்து வரும் பண்டிதர்கள் மிகவும் துச்சமான பாதைகளிலும், தெருக்களிலும், குளங்களிலும், கோவில்களிலும் சில மனிதர்களை அணுகவொட்டாமல் தடுப்பது எதுபற்றி? கடவுள் பக்தியில் தோய்ந்த இப்பண்டிதர்களும், பார்ப்பனர்களும் பாமர மக்களை மிகவும் கொடுமையாக வஞ்சிக்கிறார்கள். தாங்கள் மிகவும் ஜீவகாருண்யமுள்ளவர்கள் என்றும், மாமிசத்தைத் தின்று மதுவை வணங்காமல், மரக்கறியுண்டு மகாதேவனை வணங்கும் சாதுக்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். வெய்யிலையும், மழையையும்தாங்கவொண்ணா ஓட்டைக்குடிசைகளிலும், கால் வயிற்றுக் கஞ்சிக்கில்லாமலும், குழந்தைகள் தாய் மூலையில் பாலின்றிப் பசியால் அலறும்போதும் இம்மரக்கறி மகாதேவ பக்தர்கள் தங்கள் கடவுள்களுக்கு பெரிய பெரிய கோவில் கட்டுவதிலும், விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள் சாத்தித் தேர் சிங்காரிப்பதிலும், குடங்குடமாய் பசுவின் பாலை சாக்கடையில் அபிஷேகம் செய்வதிலும் ஆனந்தமாய் இருக்கிறார்கள். இவர்கள் பாமர ஏழைகள் உழைப்பால் கொழுத்து பாமரரை நேசிக்காமல், அவர்களுக்குரிய அன்போடு அவர்கள் கல்விக்கும் கைத்தொழிலுக்கும், சுகாதாரத்துக்கும், மேம்பாட்டுக்கும் உழைக்காமல், தங்கள் கற்பனை கடவுள்களையே (கல்லுச்சாமிகளையே) அதிகமாக நேசிக்கிறார்கள். இக்காரணம் பற்றியே சுயமரியாதைக்காரர்கள் மக்களை நேசிக்கச் செய்யாதிருக்கும், கடவுளும் அதன் வழிபாடும் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள், தனது குடும்பத்தில் கவலையும் கவனமும் செலுத்தாமல் தனது குடும்ப வருவாயைத் தனது வேசி இல்லத்தில் அளித்து அவள் பாதங்களையே வருடிடும் தகப்பனுக்கும் இப்பண்டிதர் எனப்படும் வஞ்சகர்கட்கும் யாதொரு வேற்றுமையுமில்லை.

கடவுள்

கடவுள் எண்ணமும், அதன் வணக்கமும் முதன் முதலாக மனிதனுடைய பயத்தாலும்அறியாமையாலும் சிருஷ்டிக்கப்பட்டவை. சில தந்திரசாலிகளுடைய ஏதேச்சாதிகார வாழ்விற்கு இது பின்னர் துணைபுரிவதாயிற்று உலகத்தில் ஏதேச்சாதிகாரமும் அடிமைத்தனமும்ஏற்படுவதற்கு மூலமும்முதற்காரணமும்இக்கடவுள் வழிபாடொன்றேதான்என்றுதுணிந்து சொல்லமுடியும். தந்திரசாலிகள் சில சட்டங்களை இயற்றி அவற்றை கடவுள் விருப்பமென்றும், கடவுளால் அனுப்பப்பட்ட அவதார புருஷர்கள் தாம் என்றும், அவர்கள் ஆணைப்படி நடப்பதே மதம் என்றும், அதன்படி நடவாவிட்டால் கடவுள் கோபத்துக்குப் பாத்திரமாகவேண்டுமென்றும் பயத்தால் பீடிக்கப்பட்டிருந்த மக்களை ஏமாற்றி வசப்படுத்தினார்கள். உழுதுண்டு வாழ்தலையே தொழிலாகக் கொண்டிருந்த பாமரமக்கள் தங்கள் பயிர்களை நாசம் செய்யும் புழுக்களையும், பூச்சிகளையும், கடுமையான வெய்யிலையும், பெரும் வெள்ளத்தையும் கண்டு நடுநடுங்கினார்கள். பெரிய அம்மை, பிளேக், காலரா ஆகிய நோய்கள் அவர்கள் பயத்தை நாடோறும் அதிகரிக்கச் செய்தது. கடவுள் கோபமுடையும் போதெல்லாம் மேற்சொன்ன விபத்துகள் விளைவதாக அவர்கள் எண்ணினார்கள். ஆதலால் கடவுள் கோபமடையாமலிருக்கும் பொருட்டும், கடவுள்கோபத்தைத் தணிக்கும் பொருட்டும் தங்கள் குருமார்கள் சொல்லியபடி நடந்து வந்தார்கள். காற்றும், மழையும், நோயும் உற்பத்தியாகும் காரணங்களை அவர்கள் அறியாமலிருந்ததே அவர்கள் பயத்துக்கும் அடிமை வாழ்விற்கும் ஆதாரமாயிற்று. ஆனால் இத்தனை கோடி யுகங்களாக இக்கடவுள் வழிபாட்டாலும், இக்குருக்கள் பிரார்த்தனையாலும், கோயிலாலும் உற்சவத்தாலும், பயிர்களை நாசஞ்செய்யும் பூச்சிகளும், பஞ்சமும், நோயும் ஒழிந்தபாடில்லை. "கடவுளுடைய கோபம்" நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமாயிருக்கிறது. ஆனால், விஞ்ஞான சாஸ்திரிகள் தங்கள் அறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து பூச்சிகள் பயிரை நாசம் செய்யாமல் மருந்துகள் கண்டு பிடித்துவிட்டார்கள் வெள்ளத்தால் சேதமேற்படாமல் பெரிய அணைகளும், நல்ல கால்வாய்களும் கட்டிவருகிறார்கள். மழை பெய்யாத ஊரில் ஆகாயக்கப்பல் மூலமாகச்சென்று மேகங்களைக் கலைத்து மழைபெய்யச்செய்கிறார்கள். சரியான சுகாதார முறைகளைக்கொண்டும்வைத்தியமுறைகளைக் கொண்டும் மக்களின் உயிரையும் உடலையும் நோயினின்று காப்பாற்றி வருகிறார்கள். ஆகவே மனிதனுடைய அறிவும் ஆராய்ச்சியும் முயற்சியும் பெருகப்பெருக கடவுளுடைய எண்ணமும் குருக்களுடைய மதக்கட்டுப்பாடும், ஏதேச்சாதிகாரமும் உலகத்திலிருந்து குறைந்துகொண்டுவருவதை கண்ணுள்ளவர்கண்டு வருகிறார்கள். கடவுள் நிலைப்பது இனிக்கடினமே.

இன்பம்

பசியால் வாடும் ஒருவனுக்கு இன்பம் விளைவிக்கவேண்டுமானால்அவன் வயிறு நிறையக் கஞ்சிவார்க்கவேண்டும். அதுவன்றி அவன் காதில் நால்வர் தேவாரத்தை நாளெல்லாம் ஓதினாலும் அவன் துன்பம் அதிகரிக்குமேயன்றி இன்பம் ஏற்படாது. ஆதலால் இதிலிருந்து என்ன காணக்கிடக்கிறது என்றால் நம்முடைய உயர்ந்த மதத் தத்துவங்களும், சாத்திரங்களும் ஒரு பசியோடு கூடிய மனிதனுக்கு இன்பத்தை தர முடியாது என்பதும் கால்படி கஞ்சிக்குள்ள இன்பந்தரும் சக்தி உங்கள் நான்கு வேதங்களுக்கும் இல்லை என்பதுமேயாகும். அப்படியிருக்க வஞ்சகமுள்ள மனிதனே! நீ ஏன் உனது நேரத்தையும் காலத்தையும், செல்வத்தையும், திறனையும், அறிவையும் உனது மதங்களிலும், வேதங்களிலும், சாத்திரங்களிலும், ஸ்மிருதிகளிலும், சுருதிகளிலும், தர்க்கங்களிலும், பாகவதத்திலும், ராமாயணத்திலும், கோயிலிலும், பூஜைகளிலும், ரதங்களிலும், திருவிழாக்களிலும், தாசிகள் நாட்டியத்திலும் செலவுசெய்து கொண்டு இருக்கிறாய்? அடுத்த தேர்

படேல் படலம்

(தமிழ்நாடு எழுதுவது)

சர்தார் வல்லபாய் படேலின் பதட்டமான பேச்சுகளின் பயனாக, தமிழ் மக்களுக்குள் ஏற்பட்டிருக்கும் வருத்தங்களைக் கண்டு அவர் ஆத்திரப்பட்டதாகத் தெரிகிறதேயன்றி, நிதானங் கொண்டதாகத் தெரியவில்லை. சேலத்திலும், பெங்களூரிலும் திரு. படேல் பேசிய பேச்சுக்களை, சென்ற வெள்ளி, சனி 'தமிழ்நாடு' பத்திரிகைகளில் நண்பர்கள் கவனித்துப்படித்திருப்பார்களென்று நம்புகிறோம். தென்னாட்டு விஷயங்களை அறியும் சக்தி தமக்கிருப்பதாக சேலத்தில் சொன்ன சர்தார், அது அவரிடம் போதியளவு இல்லையென்பதைக் காட்டிவிட்டார். சமத்துவம் கோரும் பிராமணரல்லாதாரை மிகவும் கடுமையாக அவர் தாக்கிப் பேசியிருப்பதை நாம்பொறுத்துக்கொள்ள முடியாது. தமிழ் நாட்டில் திரு. படேல் பேசிய ஒவ்வொரு பிரசங்கத்திலும், பிராமணரல்லாதாரைமட்டும் ஓயாமல் தாக்கியிருப்பதுடன், சமூக சீர்திருத்த இயக்கத்தையும் கேலி செய்து விட்டார். "விதவை, கலியாணம்செய்து கொள்ளலாமா கூடாதாவென்ற விஷயம் பசித்த வயிற்றுக்கு சோறு போடுமா" வென்று திரு. படேல் கேட்கிறார். பொறுப்புள்ள ஒரு தலைவர் இவ்வாறு பேசியது கேலிக் கூத்தாகும். சோறுமட்டும் மனிதனுக்கு பிரதானமல்ல; நாயும், கழுதையும் வயிறு வளர்க்கின்றன. அன்பு, ஆண்மை, இன்பம், ஈகை, கௌரவம் போன்ற அரிய குணங்களும், அவைவளர்ச்சி பெறுவதற்கான சந்தர்ப்பங்களும் மனிதனுக்கு மிகவும் அவசியமாகும்.

ஆசார திருத்தப் பிரசாரத்தை திரு. படேல் அலட்சியமாகப் பேசியது தேசியமாகாது.

சர்க்கார் உத்தியோகங்கள் தங்களுக்கும் வேண்டுமென பிராமணரல்லாதார் கேட்டதைப்பற்றி பெங்களூரில் சர்தார் பேசியிருப்பது தென்னிந்தியாவின் பெருமைக்கே உலை வைத்ததற்கொப்பாகும். பிராமணரல்லாதாருக்கு உத்தியோகம் கொடுத்ததின் பயனாக பம்பாய், சென்னை மாகாணங்களில், சர்க்கார் நிர்வாகத்தின் திறமை குறைந்துவிட்டதென்றும், ஒழுக்கமும் கெட்டுவிட்டதென்றும் திரு. படேல் பெங்களூரில் சொல்லியதுடன்; சுயராஜ்யம் கிடைத்தாலும்கூட, சர்க்கார் நிர்வாகம்கெடாமல்பார்த்துக்கொள்ளத் தாம் தயாராயிருப்பதாக மார்தட்டி பேசியிருக்கிறார் அன்னிய ஆட்சிக்கு அடிமைப்பட்டிருக்கும் இந்த நாட்டிலே, உத்தியோகங்களைப்பற்றி பிரமாதப்படுத்த வேண்டியதில்லையென்ற கொள்கையை நாம் கொண்டிருப்பதால்தான் அடிக்கடி ஜஸ்டிஸ் கட்சியாருடன் முரண்பட நேர்ந்து விடுகிறது. ஆனால், உத்தியோகக் கூச்சலை படேல் கண்டிப்பதன் காரணம், பிராமணரல்லாத மற்றெல்லா மக்களையும் மானபங்கப் படுத்துவதாகும். யோக்கியதையை கவனிக்காமல் பிராமணரல்லாதாருக்கு உத்தியோகம் கொடுப்பதால், சர்க்கார் நிர்வாகம் சீர்கெட்டுப் போகுமென்ற; அடிக்கடி திரு. படேல் பெங்களூரில் எடுத்துச் சொல்லியிருப்பது காரியப் பைத்தியமென்றே நினைக்கவேண்டியிருக்கின்றது. இதுவரையில் இந்தியாவை அரசாண்டவர்களும், அவதார புருஷர்களும் பிராமணரல்லாதாரென்பதை திரு. படேல் மறந்து விட்டார் போலும். சேர, சோழ, பாண்டியர்களும், நாயுடுகளும், முஸ்லீம்களும் பிராமணர்கள் அல்லவென்பதை அவர் அறியவில்லை. கிரேக்க மன்னர் அலக்சாண்டரை எதிர்த்த புருரவனும், பிரிட்டிஷாரை ஆட்டிவைத்த கட்டபொம்மு நாயக்கரும், திப்பு சுல்தானும், சிவாஜியும் யார் என்று திரு. படேலைக் கேட்கிறோம். தென்னாட்டுக் கவி சிரேஷ்டர்களைக் குறித்து அவர் கேட்டதுண்டா?

பாழான பரீட்சைப் படிப்புகள் ஏற்படும் வரையில்—சென்ற முப்பது வருஷங்கள் வரையில்—சகல உத்தியோகங்களும் பிராமணரல்லாதாரே வகித்திருந்தார்கள் என்பதை திரு. படேலுக்கு வணக்கமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பாரம்பரையாக—தலைமுறை தத்துவமாக ஆட்சிபுரிவதும், அரசு நடத்துவதுமாயிருந்த ஆண்மையுள்ளவர்களுக்கு, சர்க்கார் நிர்வாகம் வகிக்க, இப்போது திறமையில்லாமற் போய்விடுமானால், ஆற்றங்கரையில் உட்கார்ந்து, அன்றாடம் பிச்சை எடுத்து சாப்பிடுவதே, உத்தம வாழ்க்கையென்றிருந்த பிராமணர் சந்ததியில் உதித்தவர்களுக்கு மட்டும், திறமை எப்படி வந்துவிட்டதென்று சர்தார் பட்டேல் கவனிக்கவேண்டியது அவசியமாகும். உத்தியோகமே யாருக்கும் வேண்டாம், சுயராஜ்யத்திற்காக மட்டும் பாடுபடுவோம் என்று அவர் சொல்வாராயின், அதை ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். ஆனால் பிராமணரல்லாதாருக்கு அமுல் வந்தால் அரசியல் கெட்டுப் போகுமென்று அவர் சொல்வதை நாம் கண்டிக்காமலிருக்கமுடியாது. அவரைச் சுற்றிக்கொண்டிருந்த ஒரு சில பிராமணர்கள் திரு.படேல் மனதில் எவ்வளவு தப்பு எண்ணங்களை உண்டுபண்ணியிருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக் காட்டுவதில் அவசியமில்லை. தென்னாட்டு விவகாரத்தை வட நாட்டார் அறிய முடியாதென்று கூறியதை சேலத்தில் மறுத்துப்பேசிய படேல் சர்தார் வெறும் ஆத்திரக்காரரென்பதை பெங்களூரில் பகிரங்கப்படுத்திவிட்டு பம்பாய் பக்கம் போய்விட்டார். படேல் படலமும் முடிந்தது.

தனுக்கு மதத்தையும் கடவுளையும் முன்னிருத்தி ஓட்டு வாங்கப் பேசுவதாய் மதம்பிடித்த மட—அதிபதிகளை ஏமாற்றிப் பணம் பிடுங்கி ஓட்டல் பசோட்டாவில் செலவு செய்கிறாய். இந்த அயோக்யத்தனத்தை மக்கள் அறியவில்லையென்று நீ இன்னும் கனவு காண்பது என்னே! உன் அறியாமைக்கு நான் இரக்குகின்றேன். இனியாவது மக்களை ஏமாற்றாமல் மக்கள் செல்வத்தையும், இன்பத்தையும் கொள்ளை கொள்ளும் கடவுளையும், மதத்தையும், கோயில்களையும், உற்சவங்களையும், தாசிகளையும், அவர்களுடைய அர்ச்சகப் பார்ப்பனத் தரகர்களையும் புறக்கணித்து; அவைகளுக்காக விரயமாகும் பணத்தால் பசியால் வாடும் ஏழைக்கு நல்ல உணவும், ஆடையும் குடிசையும், கல்வியும், கைத்தொழிலும் தந்து அவன் இன்பத்தைப் பெருக்குவேன் என்று சொல்லி ஓட்டுக்கேட்டு, சொன்னபடி பாடுபடு. அப்போதுதான் நீ சொல்லும் 'பரிபூரண சுதந்தரம்' என்றஇன்பம் ஏற்படும். சர்தார் வல்லபாய் படேல் நிலவரிப் பளு அதிகமென்கிறார். ஆனல் கடவுள் வரியும், மதவரியும், கோயில் வரியும், குருக்கள் வரியும், பார்ப்பனவரியும், தாசிகள்வரியும், உற்சவ வரியும், புராணப் புத்தக விற்பனை வரியும், தீர்த்த யாத்திரை வரியும்குறைந்துவிட்டால்இந்தியாவைப் போன்ற இன்னும் ஆயிரம் இந்தியாவிலுள்ள நிலங்களுக்கு இந்தியர் நிலவரி கொடுத்தாலும் இன்பத்தோடு வாழ முடியும் என்றசேதியை உன்னுடைய வல்லபாய் படேலுக்குச் சொல்லி அவரை சோத்தில் மூட்டை முடிச்சுடன் ரயிலேறிப் போகுமாறு சொல்லு,

---

துருக்கியின் முன்னேற்றம். முக்கிய மாறுதல்கள்

துருக்கி கெமால் பாஷா தலைமையின்கீழ் வெகு வேகமாக முன்னேற்றமடைந்திருக்கிறது. சென்ற எழு வருடங்களில் அங்கு ஏற்பட்டிருக்கும் முக்கியமாறுதல்களை சர்வமத பத்திரிகையில் லிவிருமன் என்பவர்கீழ்வருமாறு எழுதியிருக்கிறார்:—

1. தனி அரசு நாடாயிருந்த துருக்கி சுல்தானை விலக்கிவிட்டுகுடியரசு நாடாய் மாறியது.

2. மதகுரு ஸ்தானமும் விலக்கப்பட்டது.

3 மசூதிகளில் உள்ள மதப்பள்ளிக்கூடங்கள் எடுபட்டு விட்டன இவைகளுக்கு பதிலாய் பொதுப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

4. அங்குள்ள மடங்களுக்கு எல்லாம் அதிகாரம் போய்விட்டது. மடங்களின் சொத்துக்கள் எல்லாம் அரசாங்கத்தைச் சேர்ந்துவிட்டது.

5. தருமங்களெல்லாம் ஒரு வகுப்பினருக்கு மட்டுமல்லாது எல்லோருக்கும் பொதுவாக செலவாக்கப்பட்டு வருகிறது.

6. முன் துருக்கர் அணிந்த குல்லாய்க்கு பதில் ஆங்கில தொப்பிகள் காணப்படுகின்றன.

7, ஹிஜிரா மத பஞ்சாங்கத்திற்கு பதில் ஆங்கில பஞ்சாங்கமே அனுஷ்டானத்திலிருக்கிறது.

8. மகமதிய எண்களுக்கு பதில் ஐரோப்பிய எண்களே உபயோகிக்கப்படுகின்றன.

9. முஸ்லீம் ஷெரியட் சட்டத்திற்கு பதிலாக மூன்று புதிய சட்டங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியை ஒட்டி வியாபார சட்டமும், இத்தாலியாவை ஒட்டி பீனல் கோடும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன

10. பலதாரமணம் சட்ட மூலமாக விலக்கப்பட்டது. ஸ்திரீகளை அந்தப்புரத்தில் வைத்து அடிமைகளாய் நடத்துவது விலக்கப்பட்டுவிட்டது.

11. ஆண்பெண் இருபாலரும் பள்ளிக்குச் சென்று சேர்ந்து கல்வி கற்கலாம்

12 விவசாய அபிவிருத்தி, அனேக ரயில் பாதைகள் கவர்ன்மெண்டாரால் நிறுவப்படுகின்றன. வியாபாரக் கப்பல்களும் செய்யப்படுகின்றன.

15. துருக்கியின் மதம் இஸ்லாம் என்பது நீக்கப்பட்டுவிட்டது. அங்கு மதக்கட்டுப்பாடு ஒன்றுமே இல்லை.

16. அரபு எழுத்துக்களுக்கு பதிலாக லத்தீன எழுத்துக்கள் உபயோகிக்கப்படுகின்றன.

17. கல்வி அறிவில்லாமல் இருப்பதைத் தடுக்க முதியோர்களும் கட்டாயம் கல்வி கற்கவேண்டுமென்று ஒரு புதியசட்டம்அமுலுக்கு வந்திருக்கிறது. (சென்னை வர்த்தமானி)

ஈரோடு டி. மு. கோர்ட்டு

1929-ம் வருஷத்திய அசல் நெ. 465.

ஈரோடு இரத்தின தீப நிதி லிமிடெட் beg its செக்ரடரி ஆர். சதாசிவம் செட்டியார். } வாதி.

கஸ்பா ஈரோடு டவுனிலிருக்கும் அங்கப்பன் மகன் சின்னான் 1, மேற்படி யூரிலிருக்கும் மாரியப்பன் மகன் பழனியப்பன் பாஸ்கரதாஸ் 2. } பிரதிவாதிகள்

மேற்படி நெம்பர் 1-ம் பிரதிவாதி சின்னானுக்கு வாதிக்காக வக்கீல் இ. வி. நஞ்சப்ப செட்டியார் தெரிவிக்கிறதாவது.

நீரும், 2-ம் பிரதிவாதியும் சேர்ந்து வாதிக்கு 25-7-26ந் தேதியில் எழுதிக் கொடுத்திருக்கும், பிராமிசரி நோட்டுப்படி ரூ. 100-0-0 கிடைக்க வேணுமாய் தாவாசெய்து 30-9-29ந் தேதிவாய்தா போடப்பட்டிருக்கிறது. மேற்படி தேதி நீர் ஆஜராகத் தவறினால் ஒரு தலைப்பாய் தீர்ப்பளிக்கப்படும்.

இ. வி. நஞ்சப்ப செட்டியார்,
ஈரோடு, | வாதி வக்கீல்.
18-9-29. |

நாங்கள் சொல்வதிற் குற்றமென்ன?

தேவகோட்டை அ. சோமசுந்தரம்

உலகில் நல்லியக்கம் ஒன்று தோன்றுமானால் அநேகமாக அதற்கு எதிர்ப்புகள் தோன்றியே தீருகிறது. புத்தர், ராஜாராம் மோகன்ராய் முதலிய சீர்திருத்தப் பெரியார்கள் காலத்தில் கூட அவர்கள் கொண்டுள்ள உயரிய நோக்கத்திற்கும் முற்போக்கான வேலைகளுக்கும் வைதீகப்பித்தம் கொண்டவர்கள் ஊறு விளைவித்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். அதுபோலவே நமது பெரியாரால் காணப்பெற்ற இப்புனிதமான சுயமரியாதை இயக்கத்திற்கும் வைதீக எதிர்ப்புக்கள் தோன்றியிருக்கிறது. இத்தகைய போலி எதிர்ப்புக்கள் நீர்க்குமிழி போல் விரைவில் அழிந்துபடுமேயன்றி நீடித்து நிற்காதென்பது உறுதி என்றாலும் அத்தகையோர் நிலைமைக்குச் சுயமரியாதைக்காரர்கள் பச்சாதாபப்படாமலிருக்க முடியவில்லை. கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும், வேதத்தின் பெயராலும், புராணத்தின் பெயராலும், தீர்த்தத்தின் பெயராலும், நதியின் பெயராலும், குட்டையின் பெயராலும், குளத்தின் பெயராலும், சில்லரைத்தேவதைகளின் பெயராலும், பிள்ளைவாத்தின் பெயராலும், சோடாங்கியின் பெயராலும், இன்னோரன்ன பல மூட நம்பிக்கைகளின் பெயராலும் வருந்தித்தேடிய பொருளைக் கண் மூடிப்பழக்கங்களுக்கு வாரி இறைக்காதீர்களென்றால் தேசத் தலைவரெனப்படுபவர்களுக்கும் புராணப் பிரசங்கிகளுக்கும் வேதாந்திகளுக்கும் இன்னும் மோட்சத்தை எட்டிப்பிடிக்க முயலும் ஆஸ்திகரெனும் வாயாடிகளுக்கும் சுயமரியாதைக் காரர்களைக் கண்டு சீற்றம் வரவேண்டிய காரணமென்ன? உள்ளதைச் சொல்லுமிடத்து பொறுமை கொள்ளுவதாய் எங்கள் சுயமரியாதை இயக்கம் தனது வேலையை தீவிரமாகப் பிரசாரம் செய்யுமேயன்றித் தடைப்பட்டுவிட மாட்டாது. இது நிற்க,

கணவனை யிழந்த இளங்கன்னிகைகளை மொட்டையிட்டு நகைகளைப் பிடுங்கி வீட்டில் வைத்துப்பூட்டி அவ்விளம் பெண்கள் விரக வேதனையால் வாடி எவ்வுருவானேனும் நின்று மீட்டி தக்க வரனைத் தேடி மறுமணம் முடித்தல் வேண்டும் என்று கூறும் சுயமரியாதைக் காரர்களை வைதீகர்கள் குற்றம் சொல்வதால் நெறி தவறி நடக்கும் விதவைப் பெண்கள் எப்படித் தங்கள் குற்றத்தை உணர்ந்து நன்னெறி ஓம்ப முடியும்? மறுமணம் முடிப்பதால் பெண்கள் தம்இச்சையை இழிவானதுறைகளில் கீர்த்தித்துக்கொள்ளமாட்டார்களன்றோ என்பதை சிறிது நிதானபுத்தியுடன் ஆலோசித்துப் பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்கலாகும். மனைவியை இழந்த ஆடவன் மறுமணம் புரிந்துகொள்ள சுதந்தரமிருக்க கணவனிழந்த கன்னிகை மட்டும் மறுமணம் புரிந்துகொள்ளக் கூடாதென்று தடுத்து நெய்யைப் பூசிக்கொண்டு விபசாரம் செய்யலாமென்று வேதங்களே சொல்லுகிறது. ஓ! எங்கள் பேரில் பழிபோடும் பண்டிதர்களே! நீங்கள் எங்களைப் பின்பற்றுங்கள், இல்லையேல்மேற்சொன்ன வேதத்தையும், திருவிளையாடற் புராணத்தையும், பெரிய புராணத்தையும், இன்னும் மற்ற கதைகளில் சொல்லப்பட்டவைகளையும், அது காட்டும் வழிகளையும் நம்பி அதன்படி நடவுங்கள் அப்பொழுதுதான் நீங்கள் கற்ற கல்விக்குப் பெருமை ஏற்படும்; உங்களுக்கும் உலகம் நன்மதிப்புக் காட்டும்; ஏனென்றால், பிறந்த குடிப் பெருமையை உடன் பிறந்தாருடன் கூறுதற்கொப்ப உங்களைப்போன்றே படித்தும் கேட்டுமிருக்கும் சுயமரியாதைக்காரர்களிடம் காவிய அழகையும் ஓவியச் சிறப்பையும் கூறுவதால் அவர்கள் சமத்துவம், சகோதரத்வம், முன்னேற்றம், சுதந்திரம் முதலிய உயரிய லட்சியங்களை எப்படி அடைய முடியும்? இது நிற்க

சுயமரியாதைக் காரர்களுக்கு உடம்பாடாயுள்ள முக்கியமான நோக்கங்களிற் சிலவாகிய தீண்டாமை விலக்கு, பெண்கள் முன்னேற்றம், விதவா விவாகம், பெண்ணுரிமை, மதுவிலக்கு, கலப்பு மணம் முதலியவற்றில் திரு. வி. க அவர்கள் மிகுந்த பற்றுடையவர். அவர் பெண்களின் பெருமையைப் பற்றிக் கூறப் போந்த ஓர் நூலில் தீண்டாமையைக் குறித்துப் பேசுங்கால் கடவுள் படைப்புக்குட்பட்ட மக்களுள் தீண்டாமையாண்டிருந்து முளைத்ததோ தெரியவில்லை. எங்கணும் நீக்கமற நிறைந்துள்ள ஆண்டவன் உறையும் திருக்கோயில்களாகிய ஏழை மக்கள் உடலில் தீண்டாமை ஏது? என வினவும் திரு. முதலியாரவர்கள் இன்று தீண்டாமை விலக்கலுக்கும் மற்றும் தம் உண்மை நோக்கத்திற்கும் என்ன பிரசாரம் செய்துவருகிறார்? புராணங்களைப் படியுங்கள், இதிகாசங்களை நோக்குங்கள் என்று கூறும் திரு. முதலியாரவர்களுக்கு தாயைப் புணர்ந்து மோட்சம் பெறச் சொல்லும் புராணத்தையும், மனைவியைக் கூட்டிக்கொடுத்து மோட்சம் அடையும்படி கூறும் புராணத்தையும், இறைவனை நினைத்தால் தலையை வெட்டு என்று கட்டளையிடும் இதிகாசத்தையும் படித்து இன்ப வாழ்வைக் கெடுத்து துன்பமடையாதீர்களென்றே நாங்கள் கூறுகிறோம்.

தீண்டாதார் வேற்றி.

(சென்னை வர்த்தமானி)

பம்பாயில் தீண்டாதார் முன்னேற்றத்திற்காக "சமாஜசமதைசங்கம்" என்னும் பெயரால் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு கொஞ்ச காலமாக உழைத்துவருகிறது. டாக்டர் அம்பெட்கார், டாக்டர் பிரதான், திரு. பிரதான், திரு கிருஷ்ணய்யர், திரு. வ எச். குலரினி முதலியோர் அச்சங்க நிருவாகஸ்தர்களில் முக்கியஸ்தர்கள். தாதார் கணபதி கோயிலில் விநாயகர் சதுர்த்தியன்று திருவிழா நடைபெற்ற காலத்து தீண்டாதாருக்கும் வைதீகருக்கும் சச்சரவு உண்டாவது வழக்கமாக இருக்கிறது. சென்ற வருஷ விநாயகர் சதுர்த்தியன்றும் ஒரு சச்சரவு ஏற்பட்டது. சீர்திருத்தக் கட்சியார் முயற்சியினால் தீண்டாதார் ஆலயப் பிரவேசம் செய்து கணபதியை வணங்கினர். அத்துடன் தீண்டாதார்—வைதீகர் சண்டை ஒழிந்தது என்று சீர்திருத்தக்காரர் எண்ணியிருந்தனர். வைதிகர் குறும்பு சாமானியமானதா? சென்ற சனியன்று விநாயகர்சதுர்த்தி தினத்தில் தீண்டாதார் கணபதி தரிசனம் செய்யச் சென்றபோது வைதிகத்தலைவரான டாக்டர் ஜால்வி தீண்டாதாருக்குப் பிரவேச மளிக்க மறுத்துவிட்டார். டாக்டர் அம்பெட்கர் முதலியோர் எவ்வளவோ கெஞ்சியும் வைதிகர் மனம் கனியவில்லை கடைசியில் தீண்டாதார்சுமார் 1 000 பேர் பலாத்காரமாக கோயிலில் பிரவேசிப்பது என்று முடிவுசெய்தவுடன், வைதிகர் விட்டுக் கொடுக்கும்படி நேர்ந்தது. தீண்டாதாரும் கணபதி தரிசனம் செய்து சந்தோஷமாக மீண்டனர்.

இந்த இருபதாவது நூற்றாண்டிலும் வைதிகர்கட்கு நற்புத்தி தோன்றாதிருப்பது பரிதபிக்கத்தக்கதே. சென்ற வருஷம் தீண்டாதார் ஆலயத்தில் பிரவேசித்து கணபதியை தரிசனம் செய்ததினால் கணபதிக்கோ வைதிகர்களுக்கோ ஹிந்து மதத்துக்கோ எத்தகைய ஆபத்தும் உண்டாய்விடவில்லை. எனவே இவ்வருஷத்தில் வைதிகர்கள் முட்டுக்கட்டைபோட காரணம் என்ன? எள்ளளவு பகுத்தறிவாவது உள்ளவர் சுவாமி தரிசனம் செய்யவரும் ஏழை மக்களைத் தடை செய்வார்களா? தீண்டாதார் விழிப்புற்று பல இடங்களில் ஆலயப் பிரவேச உரிமையை நிலை நாட்டி வருவதை இவர்கள் அறியார்களா? இந்துக்களுக்குள்ள உரிமைகள் எல்லாம் மறுக்கப்பட்டிருந்தும் பிற மதம் புகாமல் 'நாங்களும் இந்துக்களே, நாங்களும் ஆலயதரிசனம் செய்யவேண்டும்' என்று உரிமை பாராட்டும் சாதுக்களை தடுப்பதைவிட தெய்வத் துரோகம் வேறுண்டா?

ஐக்கிய மாகாண வாலிபர் மகாநாடு

'பழைய பழக்க வழக்கங்களைப் புதைக்கவேண்டும்'

சீர்திருத்தத் தீர்மானங்கள்

லக்னோவில் செப்டம்பர் 16-ந் தேதியன்று ஐக்கியமாகாணவாலிபர் மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்வரும் முக்கிய தீர்மானம் பண்டித ஜவகர்லால் நேருவால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது:—இம்மகாநாடு ஒரு தொகுதியினர் மற்றொரு தொகுதியினரையும், ஒருவர் மற்றொருவரையும் கொள்ளையடிப்பதானது முற்றும் நீங்க, பொதுஜன நன்மைக்காக பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில் புதிய சமூதாய அமைப்பு ஏற்பட்டால்தான் இந்திய மக்கள் விடுதலையடையமுடியுமென்று அபிப்பிராயப்படுகிறது. புதிய சமூதாய அமைப்பு ஏற்படும்பொருட்டு, பயனற்றதும், இதுபோது நாட்டினரின் ஆண்மையைக் குலைத்து வருவதும், தேச மக்கள் முன்னேற்றவண்ணம் தடைசெய்து வருவதுமான பழைய சமூதாய மத மூடப்பழக்க வழக்கங்கள் முற்றும் களையப்படவேண்டும். சிறப்பாக இம்மகாநாடு (அ) வயலிலோ, பாக்டரியிலோ, மற்றெந்தவிடத்திலோ அறிவின் மூலமாகவோ அல்லது தேக முயற்சியாலோ கஷ்டப்படுகிறவர்களது பயன்கள் முதலாளிகளால் கொள்ளையடிக்கப்படுவதையும் பறிக்கப்படுவதையும், (ஆ) பிறப்பின் அடிப்படையால் இந்த சமூகத்தில் வேரூன்றி நிற்பதும் அநேகப்பல பிரிவுகளாக்குவதுமான சாதிக்கட்டுப்பாட்டையும், (இ) தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறவர்களிருப்பதையும் கொடூரமானதும் சமூதாயத்திற்கு விரோதமானதுமான தீண்டாமை என்னும் வழக்கத்தையும், (ஈ) வகுப்பின் சமூதாய வாழ்க்கையில் ஈடுபட சமூதாய மூலமாகவும் சாஸ்திர மூலமாகவும் சட்ட மூலமாகவும் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் தடைகளையும், (உ) பெரும் செலவையும் சேதத்தையும் உண்டுபண்ணுகின்ற மணச்சட்டத்தையும் மணச்சடங்குகளையும் கண்டனஞ் செய்கிறது. இத்தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

திரிசை தெய்வேந்திரகுல வெள்ளாளர் 2—வது மகாநாடு.

29-9-29 ல் திரு. ஈ வெ. ராமசாமியார் தலைமையில் முனிசிபல் பப்ளிக் ஹாலில் கூடும். டாக்டர் சுப்பராயன் மாகாநாட்டை திறந்துவைப்பார்; திரு ஜே. எஸ். கண்ணப்பர் கொடியேற்றுவார்.

கற்பகத் தைலம்

இஃது குழந்தைகள் வியாதிகளுக்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய அவசியம்.

புட்டியின் விலை ரூபாய் 1.

உபயோகிக்கும் முறை புட்டியிலடக்கம். முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

மற்ற வியாதிகளுக்கும் தகுந்த ஒளஷதம் கிடைக்கும்.

விலாசம்: —

ப. அங்கமுத்து முதலியார்,
சிகிச்சாஞான பண்டிதர்,
சத்தியமங்கலம்.
(கோயமுத்தூர் ஜில்லா.)

(56)

சாரதாமசோதாவால் மதம் போய்விடுமா?

(சிக்கில்நாயக்கன்பேட்டை
கி. ரா. குப்புசாமி)

இந்திய சட்டசபையில் திரு. சாரதாவால் கொண்டுவந்திருக்கும் பால்ய விவாகத் தடை மசோதாவால் மதம் போய்விட்டதாய் பார்ப்பனர்கள் கூட்டும் கூட்டத்திற்கும், கத்தும் பேச்சுக்கும் கணக்கில்லை. குழந்தை கல்யாணத்தால் காப்பாற்றப்படும் மதமும் வயதுவந்து கணவனைத் தேடி காதலிக்கும் கல்யாணத்தால் அழிந்துவிடும் மதமும் இருந்தென்ன? அந்த மதத்தையும் அதைக் காப்பாற்றும் கனவான்களையும் நாகரிகம் படைத்த நாட்டாரென்பார் நகையார்களா?

எலும்பு முதிராத இளங்குழந்தை கல்யாணத்திற்கு கூட்டம்போடும் வைதிகர்களே! உங்கள் மூளைக்கு எட்டாத உண்மை விஷயங்களை சொன்ன மேயோவை ஏன் குறை கூறுகிறீர்கள். இம்மாதிரி உள்ளதைச் சொன்னால் ஒப்பாரி வைத்து ஓலமிடுவதால் ஆவதில்லை. மசோதா சட்டமாவது திண்ணம். பால் மணம் மாறாத கல்யாணத்திற்கு பல்லைக்காட்டிப் பக்குவமடைந்த மணத்திற்கு படபடத்து சாஸ்திரப் பிரமாணம் காட்டும் பார்ப்பனர்களே! உங்கள் அசட்டுத் தனத்துக்கு நாம் இரங்காமலிருக்க முடியவில்லை.

மதம் போய்விட்டது, சாத்திரம் போய்விட்டது, நாத்திகம் வளர்ந்துவிட்டது என்று கூச்சலிடுகிற வைதிகர்களே! மற்ற விஷயங்களுக்கும் அப்படியே செய்வீர்களா? அன்னிய அரசாங்கத்தின் உத்தியோகமும் தோல்கிடங்குகளில் வேலையும் தாழ்ந்த ஜாதியார் என்று சொல்லுகிறவர்களுக்கு ஆப்ரேஷன் (சத்திரம்) செய்யும்படியும் வாரத்திற்கு இருமுறை முகக்ஷவரம் செய்துகொள்ளும்படியும் மத அனுஷ்டானத்திற்கு முரணாய் வயிற்றுச் சோற்றுக்காக பலவீனத் தொழிலை செய்யும்படியாய் உங்கள் தரும சாத்திரங்கள் சொல்லுகிறதா?

அல்லது பிராமணர்கள் சாதம் விற்கும்படியும், தட்சிணை வாங்கும்படியும், சந்தியா வந்தனத்திற்கு பதிலாய் கட்சிக்காரர்களிடம் சமாதானம் சொல்லும்படியும், கடல் தாண்டக் கூடாதென்றதற்காக பர்மா, மலாய் செய்கோன் மற்ற தீவுகளுக்குப் போகும்படியும் மனுஸ்மிருதி சொல்லுகிறதா? ஒருவர் கடல் தாண்டக் கூடாதென்ற காரணத்திற்காக கப்பல் ஏறினார்கள் போலும்! மதம் போய் விட்டதாய் கூட்டம் போட்டு தீர்மானங்கள் நிறைவேற்றும் வைதிகர்கள் இதை ஏன் மறக்கக்கூடாது? அவர்கள் (பார்ப்பனர்கள்) சாதம் விற்றும், வாதம் புரிந்தும், கப்பல் ஏறியும், கடவுளுக்குப் பலம் தேடுகிறார்களென்று நினைத்தார்கள் போலும்! இதுவெல்லாம் இவர்கள் வயிற்றுப் பிழைப்பிற்கும் பெண்ஜாதி பிள்ளைகளுடன் மோட்டார் வாகனத்தில் உல்லாசமாய் செல்லவும், பையன் பட்டப் பரீட்சைக்கு சீமைக்குப் போகவும், இவர்கள் காட்டும் சாத்திரத்திற்கு முரண்பாடாய் உள்ள காரியங்களை செய்யத் துணிந்தவர்கள்; சாத்திரப்படி குழந்தை கலியாணத்தை ஒழிக்கச் செய்யும் முயற்சிக்கு ஏன் எதிரிடை செய்யவேண்டும்? அநுபோகப் படியும், வைத்திய நூல்களின்படியும் புத்தியின்படியும் பால்ய விவாகம் கெடுதலென்று தெரிந்தும் அதை கெடுக்க கூட்டங்கள் கூட்டுவானேன்? இவ்விடத்தில் சங்கராச்சாரியின் திருக்கூட்டத்தாரையும், எம். கே. ஆச்சாரியாரையும் நினைக்காமலிருக்க முடியவில்லை. நன்மை தீமைகளைக் கடந்து நேரே பிரமத்தை அடையப்போகிற சோம்பேறிகளுக்கு குழந்தை கல்யாணத்தால் நன்மையா தீமையாவென்பது தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்த பரிகாரம் தேட முற்படுவதற்கு முடியாததைப்பற்றி வருந்துகிறேன். ஞானத்தை அடையப் போவதாய் சொல்லுகிறவர்களுக்கு நன்மைதீமைகள் புலப்படாததாயிருக்கலாம். ஆனால், திரு. எம். கே. ஆச்சாரியாரோ இகத்தின் இச்சையை ஆசைப்பட்டவரானதால், சங்கராச்சாரி சுவாமிகளைவிட ஒருபடி மேலே செல்லுகிறார். வைதிகத்தைவிட்டு மிலேச்ச பாஷையென்று சொல்லும் ஆங்கிலம் படித்து பட்டம் வாங்கி வாதம் புரிபவர் கூட்டத்தில் சேர்ந்தவராயிருந்தும் கோயில் நுழைந்தவுடன் பார்ப்பான் என்னும் செருக்கால் அவர்படும் துன்பத்திற்கு அளவில்லை. பிரஸ்தாப மசோதா இந்திய பார்லிமெண்டில் விவாதத்திற்கு வரப்போவதை உத்தேசித்து மேற்கண்ட மசோதாவுக்கு சென்னை மாகாணத்தில் எதிர்ப்பு அதிகமாய் இருப்பதால் ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. ஆச்சாரியார் சொன்னதாய்த் தெரிகிறது. இவர் போக்கின் வன்மையென்ன? சென்னை மாகாணத்தில் எந்தெந்த வகுப்பார்கள் பால்ய விவாக மசோதாவிற்கு எதிரிடையாய் சாட்சி சொன்னவர்கள்? இரண்டொரு வைதிக கோடரிக் காம்புகளும் இரண்டொரு அனுமதேய கூட்டங்களைத் தவிர சுயமதிப்புடைய ஒருவராவது எதிர்த்திருக்கிறார்களா? திரு: ஆச்சாரியார் ஆழம் தெரியாது காலை விடுவார்போல் தெரிகிறது. பிராமணப் பையன் சாப்பிடும்போது பிராமணரல்லாத குழந்தை பார்த்துவிட்டால் ஒரு மாதம் பட்டினிகிடப்பேன் என்று சொல்லி சிரழிந்தது போல் தேர்தல் நெருங்கும் சமயம் சென்னை மாகாணத்தில் பிரஸ்தாப மசோதாவுக்கு எதிர்ப்பு யென்று சொல்லி வீண்வாதம் பேசி, கண்டோர் நகைக்கும்படி காட்டை காட்டிக்கொடுத்து நடு ஆற்றில் நிற்கவேண்டாம். ஆச்சாரியார் எதிர்ப்புக்கு திரு. கிரிராஜர் அளித்த பதிலே போதிய சான்றாகும். நல்ல சமயத்தில் புத்தி புகட்டிய இந்திய சட்டசபை உள்நாட்டு மந்திரி திரு. கிரிராஜருக்கு நம் மனமார்ந்த நன்றியை செலுத்தவேண்டியிருக்கின்றது.

குறிப்பு

பெரிய இடத்துத் திருமணம்

மதுரை உத்தமபாளையம் ஜமீன்தார் காலஞ்சென்ற திரு. எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் குமாரர் திரு. ஷண்முகவேல் ராஜத்திற்கும், செங்கற்பட்டு ஜில்லா குணம்பேட்டை ஜமீந்தார் திவான்பகதூர் அருணாசல முதலியார் அவர்கள் குமாரத்தி திரு. பத்மாவதிக்கும் 6-9-29ந் தேதி குணம்பேட்டை மணமகன் இல்லத்தில் திருமணம் வெகு ஆடம்பரமாக நடந்தேறியது. சென்னையிலிருந்தும், மற்றும் வெளிஇடங்களில் இருந்தும் ஆயிரக்கணக்காக ஜனங்கள் வந்ததும், கலியாணத்தில் பதினாயிரக் கணக்கான மக்களுக்கு சாதிவாரியாகப் பிரித்து பிரித்து சாப்பாடு முதலியவைகள் நடந்ததும் மிகவும் குறிப்பிடத்தக்கதேயாகும். என்றாலும் குணம்பேட்டையில் கலியாணச் சடங்குகள் முழுவதும், சாப்பாடு முழுவதும் பார்ப்பன மயமாகவும், சாதிவித்தியாச கண்காட்சியாகவும் இருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அதே மணமக்கள் 13ந் தேதி மதுரைக்கு அழைத்து வந்து மணமகன் இல்லமாகிய திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வீட்டில் 2, 3 நாள் எவ்வித பார்ப்பனச் சடங்கும் இல்லாமல் பார்ப்பனரல்லாத சமையல்காரரைக் கொண்டே சமையல் முதலியவைகள் செய்யப்பட்டு சமபந்தி போசனம் நடத்தப்பட்டதுடன் ஊர்வலம் முதலிய காட்சிகள் மதுரையில் ஒரு பெரிய உற்சவகாலம்போல் நடந்தேறின. ஊர்வலத்தில் வழிநெடுக மாலைகளும் சந்தனம் தாம்பூலங்களும் வழங்கப்பட்டன. கடை கடைக்கு அத்தர் பன்னீர்கள் குடம் குடமாய் வாரி வழங்கப்பட்டன. திரு. பொன்னுசாமி அவர்கள் மேளமும், மற்றும் பாண்டும் இசைத்தன. சுமார் பதினாயிரம் பேருக்கு மேலாகவே ஜமீன்தார்கள் முதல் சாதாரண மக்கள்வரை எல்லோரும் ஊர்வலத்திற்கு வந்திருந்தார்கள். 15ந் தேதி இரவு தல்லாக்குளம் "உத்தமபாளையம்ஹவுசில்" திருவாளர்கள் எம். டி. சோமசுந்தர முதலியார், பி. டி. ராஜன் ஆகியவர்களால் ஒரு தோட்டவிருந்து செய்யப்பட்டது. அவ்விருந்துக்கு அழைத்ததற்கு மேலாக, எதிர்பார்த்ததற்கு பன்மடங்கு மேலாக ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். பங்களா தோட்டம் முழுவதும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மரங்களில் எல்லாம் விளக்குகள் கட்டி தொங்க விடப்பட்டிருந்தன. எட்டியாபுரம் ராஜா வடகரை ஜமீன்தார் முதலியவர்களும், மற்றும் மதுரை ராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லா அதிகாரிகளும், சட்டசபைமெம்பர்களும், வியாபாரிகளும், நாட்டுக்கோட்டை நகர கனவான்களும், ரயில்வே அதிகாரிகளும், அநேக முக்கிய பிரமுகர்களும் வந்திருந்தார்கள். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், கிறிஸ்துவர்கள், மகமதியர்கள், ஆதிதிராவிடர்கள், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் எல்லோரும் யாதொரு வித்தியாசமுமில்லாமல் சமபந்தியாய் இருந்து சாப்பிட்டார்கள். இக்காட்சியானது குணம்பேட்டை ஜமீன்தாரரான சம்பந்தியார் காரியத்திற்கு நேர் விரோதமாக வேண்டுமென்றே செய்ததுபோல் இருந்தது! விருந்து ஆனதும் இந்துஸ்தானி சங்கீதக் கச்சேரி சிறிது நேரம் நடந்தது. கடைசியாக இரவு 11 மணிக்கு திரு. ஈ. வெ. ராமசாமியார் மணமக்களை வாழ்த்தி மணமக்களுக்கு மாலையிடப்பட்டது. பிறகு திரு. எம். டி. சோமசுந்திர முதலியார் அவர்களால் விருந்துக்கு வந்தவர்களுக்கு வந்தனம் கூறப்பட்டு திருவாளர்கள் பி. டி. ராஜன், எஸ். டி. ராஜன் (அய்யாத்துரை) ஆகியவர்களால் வந்திருந்தவர்களுக்கெல்லாம் மாலை போடப்பட்டு இரவு 12-மணிக்கு கூட்டம் கலைந்தது.

அதி நூதனம்! மிக ஆச்சரியம்!!

மாதம் 100 ரூபா முதல்
500 ரூபா வரை
சம்பாதிக்கக்கூடிய

சிறிய சைஸ்

தையல் இயந்திரம்



இது சாதாரண மெஷின்களைப் போலவே மேஜையின் பேரில் முடுக்கி, தையல் வேலை செய்பவர்களும், பெண்களும், குழந்தைகளும், எல்லா தையல் வேலையும், சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியவை தைக்கலாம் இதைச்சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் பாக்கிங் செய்தனுப்பப்படும்.

5 வருட கியாரண்டியுள்ளது.

விலை ரு. 3—14—0.

பினாங், சிங்கப்பூர் முதலிய மலாய் நாடுகளுக்கு பாக்கிங் ரூ. 5—4—0. உள்பட முன் பணம் அனுப்பவேண்டும்.

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி,
தங்கசாலை, மதராஸ்.



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

சென்னை 1929 செப்டம்பர் 22ஓ

நெல்லூர் மகாநாடு

—0—

தென் இந்திய நல உரிமைச் சங்க, அதாவது ஜஸ்டிஸ் கட்சி மாகாண மகாநாடு அடுத்த மாதம் முதல் வாரத்தில் (அக்டோபர் மாதம் 5, 6 தேதிகளில் சனி, ஞாயிறு கிழமைகளில்) நெல்லூரில் நடத்தப்படப் போகின்றது. இம் மகாநாடானது 1927-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் மதுரையில் கூட்டப்பட்ட பிறகும், அதே வருஷம் மத்தியில் கோயமுத்தூரில் விசேஷமகாநாடாகக்கூட்டப்பட்டபிறகும், சுமார் இரண்டு வருஷம் கழித்து இப்போது கூட்டப்படுகின்ற தென்றாலும், இவ்வியக்கத் தலைவர் திரு: பானகல் அரசர் காலமாகி சுமார் 9 மாதத்திற்குப்பிறகுதலைவர் தேர்தலையே முக்கிய காரியமாய்க்கொண்டு கூட்டப்படுகின்றதாகும். தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்னும் ஜஸ்டிஸ் இயக்கமானது ஆதியில் மக்களின் எல்லா சமூக சமத்துவத்தையும், சம உரிமையையும் சம சந்தர்ப்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு துவக்கப்பட்டது என்பது யாவருக்கும் தெரியும். எனினும் இவ்வியக்கம் வெற்றிபெற்றால் இந்தியாவில் சமூகத் துறையிலும், அரசியல் துறையிலும் உயர்வுபெற்று ஏகபோக ஆதிக்கம் செலுத்தி வரும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆபத்து வந்துவிடுமே என்ற ஆத்திரத்தால் பார்ப்பனர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இவ்வியக்கத்தின் கொள்கைகளை திரித்துக்கூறி, இவ்வியக்கத்தினிடம் பாமர மக்களுக்கு துவேஷமும் வெறுப்பும் உண்டாகும்படி செய்து, இவ்வியக்கத்தலைவர்களுக்கும் பலவித தீங்குகள் செய்து, மிக்கத்தொல்லைவிளைவித்து வந்தார்கள்; வருகிறார்கள்; ஆனபோதிலும் இவ்வியக்கத் தலைவர்கள் எதற்கும் பயப்படாமல் உறுதியுடன் நின்று இயக்கத்தை அழிய விடாமல் காப்பாற்றி வந்ததுடன், அதன் மூலம் மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியையும் ஊட்டி வந்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வியக்கம் வெறும் அரசாங்க உத்தியோகத்தை மாத்திரம் கைப்பற்றுவதற்காக ஏற்பட்டஉத்தியோக வேட்டை இயக்கம் என்றும், தேசத்துரோகஇயக்கம் என்றும், சர்க்கார் தாசர்கள் இயக்கம்என்றும் எவ்வளவோ தூற்றப்பட்டும், தென் இந்தியாவிலுள்ள பாமர மக்களினுடையவும் மற்றும் பொது ஜனங்களுடையவும் செல்வாக்கையும் மதிப்பையும் பின்பற்றுதலையும் பெற்று விளங்கி வருகின்றது. இதற்கு உதாரணம் வேண்டுமானால் தென்னாட்டில் சட்ட சபை மந்திரிகள் முதல் ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள் தலைவர்கள் ஆகியவர்களும், கிராமப் பஞ்சாயத்து கூட்டுறவு முதலிய சாதாரண ஸ்தாபனங்களும் இவ்வியக்கம் ஏற்படுத்தப் படுவதற்கு முன் எல்லாம் பார்ப்பன மயமாகவே இருந்ததானது, இப்போது இவ்வியக்கத்திற்குப் பிறகு பார்ப்பனரல்லாதார்கள் அதாவது மகமதியர்கள் கிறிஸ்துவர்கள் ஆதிதிராவிடர்கள் ஆகிய எல்லோரும் அவரவர்கள் ஜனத்தொகை விகிதாச்சாரப்படிக்கு இல்லையானாலும் சற்றேறக்குறைய வாவது பங்கு பெற்று ஆதிக்கம் பெற்றிருப்பதே போதுமானதாகும். இதிலிருந்து அரசாங்க தயவிலேயே இந்த இயக்கம் இருப்பதாக நமது எதிரிகள் சொல்லுவது எவ்வளவு புரட்டு என்பது இனிது விளங்கும்.

எப்படியெனில், அரசாங்கத் தயவால் அரசாங்க உத்தியோகம் மாத்திரம்தான் கிடைக்குமே ஒழிய தேர்தலில் பொது ஜன ஓட்டுகள் பெற்று அடையும்படியான பதவிகள் பெற ஒருக்காலமும் முடியவே முடியாது. அன்றியும் இவைகள் தாராளமான பொதுஜன ஆதரவும் அனுதாபமும் இருந்தால் தான் கிடைக்கும் எனவே இவ்வியக்கம் இப்படிப்பட்ட பொதுஜன தேர்தல் ஸ்தாபனங்களைப் பெற்று அந்த ஸ்தாபனங்களை யெல்லாம் கைப்பற்றி இருப்பதிலிருந்தே பொதுஜன ஆதரவு முழுவதும் இவ்வியக்கத்திற்கு இருப்பது தானாக விளங்கும். ஆகவே ஜஸ்டிஸ் இயக்கம் அதன் எதிரிகள் சொல்வதுபோல் சர்க்கார் தாசர் இயக்கமாயிருந்தால் இவ்வித பொதுஜன ஆதரவு கிடைத்திருக்குமா என்பதையும் இவ்வளவு பொது ஸ்தாபனங்களைக் கைப்பற்றி இருக்குமா என்பதையும் யோசித்தால் அறிவாளிகளும் யோக்கியர்களும் இதை சர்க்கார் தாசர் இயக்கம் என்று சொல்ல ஒருபோதும் முன்வரமாட்டார்கள். சென்னை மாகாணத்து 25 ஜில்லா போர்டுகளில் உள்ள 25 ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளும் இது சமயம் பார்ப்பனரல்லாதார்களாகவேஇருக்கின்றார்கள். நூற்றுக்குதொண்ணூறுதாலூக்காபோர்டு பிரசிடெண்டுகளும் நூற்றுக்கு தொண்ணூறு முனிசிபல் சேர்மென்களும், நூற்றுக்குதொண்ணூறு மேல்கண்ட ஸ்தாபன அங்கத்தினர்களும் பார்ப்பனரல்லாதார்களாகவே இருக்கின்றார்கள். பார்ப்பனரல்லதார் என்பதிலும் இவ்வியக்கத்தின் கொள்கைப்படி இந்துக்கள், கிறிஸ்துவர்கள், முகமதியர்கள், ஆதிதிராவிடர்கள், ஐரோப்பியர்கள் ஆகிய எல்லா மத வகுப்புப் பிரிவுகளும் சற்று ஏறக்குறைய எல்லாவற்றிலும் பிரதிநிதித்துவம் பெற்றும் இருக்கின்றார்கள். இவ்வியக்கத்திற்குப் பிறகு ஆதிதிராவிடர்களும் மற்றும் பிற்பட்ட வகுப்பார்களும் குறிப்பிடத் தகுந்த அளவு அரசியலிலும் சமுதாயத்திலும் முன்வந்திருப்பதையும் யாராலும் மறுக்க முடியாது. மற்றும் இவ்வியக்கம் தோன்றி பார்ப்பனரல்லாத மக்களைத் தட்டி எழுப்பி அவர்களது சுயமரியாதை உணர்ச்சியை கிளப்பிவிட்டிருக்காதிருந்தால், சமத்துவத்திற்கும் முன்னேற்றத்திற்கும் மக்களை ஊக்கப்படுத்தாமல் இருந்தால், இன்றைய தினம் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் நான்கு கனவான்களும் சென்னை சர்க்கார் நிர்வாக சபையில் இரண்டு கனவான்களும், மந்திரிகளில் இரண்டு கனவான்களும், ரெவினியூ போர்ட் மெம்பர்களில் ஒருகனவானும், இடம் பெற்று இருக்க முடியுமா என்பதை யோசித்தால் இவ்வியக்கத்தின் பலன் இனிது விளங்கும். மேலும் இவ்வியக்கமானது சர்க்காரிடம் அரசியல் சுதந்திரம் கேட்பதிலும், அதன் மூலம் கிடைத்ததைப்பெற்று அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் திருப்தியுண்டாகும்படி அவைகளை நடத்திக் காட்டி மேற்கொண்டும் சுதந்திரம் கேட்பதிலும் இந்தியாவில் வேறு எந்த மாகாணத்திற்கும் சமூகத்திற்கும், இயக்கத்திற்கும் இவ்வியக்கம் எந்த விதத்திலும் பிற்பட்டதல்லவென்றே சொல்லுவோம். மற்றும் வெள்ளைக்கார அரசாங்க மேற்பட்டு 150 வருஷகாலத்தில் நமது பார்ப்பனரல்லாத மக்களில் எவ்வளவு பேர் படித்திருந்தார்களோ அந்த எண்ணிக்கையை ஒருபத்துவருஷத்தில் நமது இயக்கம் இரட்டிப்பாக்கி இருக்கின்றது. பெண்கள் விஷயத்திலும் அதுபோலவே கல்வி விஷயத்தில் பன்மடங்கு அதிகமாக்கி இருக்கின்றது. இவைகள் மற்றெல்லாவற்றையும் விட முக்கியமானதாகும் இவ்வியக்கமானது ஏற்பட்டு 10 வருஷகாலத்திற்குள் இவ்வளவு பலனையும், சகல துறைகளிலும் முன்னேற்றத்தையும் கொடுத்து எவ்விதத்திலும் அசைக்க முடியாமல் மேற்போய்க்கொண்டிருப்பதற்கு எவ்வளவோ காரணங்கள் இருந்தாலும், மற்ற காரணங்கள் எல்லாவற்றையும்விட ஒரே ஒரு காரணம்தான் மிக மிக முக்கியமானதாகும் என்போம். அதென்னவெனில் இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டகாலம் முதல் இதுவரை பார்ப்பனர்களை இவ்வியக்கத்தில் சேரவிடாமல் வெகுஜாக்கிரதையாக கவனித்துபாதுகாத்துக்கொண்டு வந்ததும்; பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று இவ்வியக்க விதிகளில் ஒரு விதியை முக்கிய விதியாக ஏற்படுத்திக் கொண்டிருப்பதுவுமேயாகும். இவ்வியக்கம் தோற்றுவித்த தலைவர்களை இவ்வியக்க சம்பந்தமாக எதற்காகப் போற்ற வேண்டுமென்றால், இவ்வியக்கம் ஆரம்பித்த போதே பார்ப்பனர்களை இதில் சேர்க்கக் கூடாதென்று கருதியதற்கும் எந்தக் காரணத்தை முன்னிட்டும்சேர்த்துக்கொள்ளாதிருக்கும்படி சட்டம்செய்ததற்கும் தான் முக்கியமாய் போற்றிப் பாராட்ட வேண்டும். இப்படிப்பட்ட அருமையான ஒரு காரியம் இப்போது சில தலைவர்கள் என்பவர்களால் மாற்றப்படப் போவதாகத் தெரிய வருவதைக் கண்டு நாம் மிகவும் வருந்துகின்றோம்.

இவ்வளவு காலம் இவ்வளவு எதிர்ப்பையும் சமாளித்து நிலைத்து இவ்வளவு உச்சஸ்தானம பெற்று முற்போக்கடைந்து

வரும் இவ்வியக்கத்திற்கு இப்போது பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன வந்தது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தத் தலைவர்கள் என்பவர்கள் வேறு எந்தக் காரணத்தைக்கொண்டு பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாக சொல்ல வந்தாலும், பார்ப்பனர்களைதென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளுவது என்கின்ற முடிவுக்கு வந்தால் அன்றே இந்த இயக்கம் தோல்வி அடைந்துவிட்டது, செத்துப் போய்விட்டது என்பதைமாத்திரம் ஒவ்வொருவரும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நமது நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்கு இப்போது இந்த மகாநாட்டில் தலைவர் யார் என்பதைப்பற்றிய கவலை சிறிதும் வேண்டியதில்லை என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில், எந்தத் தலைவர் வந்தாலும் பொதுஜனங்களை மீறி அவர்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் ஒன்றையும் செய்துவிட முடியாது. ஆதலால் அதைப் பற்றி அதிகக் கவலைப்படவேண்டியதில்லை.

ஆனால், பார்ப்பனர்களைசேர்த்துக்கொள்ளுவது என்கின்றவிஷயம் நிறைவேறாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது தான் மிகவும் முக்கியமானதாகும். இந்த ஆபத்தான பிரச்சினை வருகின்ற முக்கியமான காலத்தில் இம்மகாநாடு தெலுங்கு நாட்டில்கூடுவது நமக்கு மிக்க பலவீனமென்றே தோன்றுகின்றது. ஏனெனில் தெலுங்குநாட்டுமக்களுக்கு இவ்விஷயம் அவ்வளவு தூரம் கவலைப்படத்தக்கதாக இல்லை. அவர்களுக்கு இன்னும் சரியானபடி பார்ப்பனர்- பார்ப்பனரல்லாதார் என்கின்ற விஷயம் அர்த்தமானதாகவே சொல்வதற்கில்லை. இதற்கு முக்கிய உதாரணம் என்னவென்றால், ஆந்திர தேசத்தில் இன்னும் காங்கிரசுக்கு மதிப்பும் ஆதரவும் இருப்பதேயாகும். காலஞ்சென்ற தலைவர் பானகல் அரசர் மதுரை மகாநாட்டில் பார்ப்பனர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவந்ததும், கோயமுத்தூர் மகாநாட்டில் பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் சேரவேண்டும் என்கின்ற தீர்மானம் கொண்டு வந்ததும், பார்ப்பனர்- பார்ப்பனரல்லாதார் விஷயத்தின் உண்மைத் தத்துவத்தை உணராததேயாகும். காரணம் என்னவெனில், மத சம்பந்தமான வலையில் சிக்கி இருந்ததுடன் புராணங்களிலும், மூடப்பழக்க வழக்கம் ஆகியவைகளிலும் அவருக்கு குருட்டு நம்பிக்கை இருந்து வந்ததேயாகும்- அன்றியும் அவர்தன்னை க்ஷத்ரியர் என்று நம்பிக் கொண்டிருந்தவர்! ஆனால் அவர் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவத்தை உணர்ந்த பிறகும் பார்ப்பனரல்லாதவ லிபர் இயக்கத்தின் தத்துவத்தைஉணர்ந்தபிறகுமே தான்பார்ப்பனபார்ப்பனரல்லாத வித்தியாசத்தையும் அறிந்ததுடன்பார்ப்பனர்களை இவ்வியக்கத்தில்ஏன் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்பதற்குத் தக்க காரணங்கள் இருப்பதையும் ஒருவாறு உணர்ந்தார். ஆந்திர தேசத்து பார்ப்பனரல்லாதார்கள் இனியும் மத சம்பந்தமான புராணங்களிலும் குருட்டு நம்பிக்கைகளிலும் ஈடுபட்டவர்களாவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு குருட்டு நம்பிக்கையிலும் புளுகுப் புராணங்களிலும் ஈடுபட்டிருக்கின்றார்களோ; அவ்வளவுக்கவ்வளவு அவர்களை மேதாவிகள் என்றும் பெரியவர்கள் என்றும் நினைத்துக்கொண்டிருப்பவர்கள் மத சம்பந்தமாய் எப்படி அவர்கள் குருட்டு நம்பிக்கையில் ஈடுபட்டு பார்ப்பனர்களையும் அவர்களது கட்டுப்பாடான சூட்சி இயக்கங்களையும் வழிகாட்டியாகவும் ஆதாரங்களாகவும் கொண்டு பின்பற்றுகின்றார்களோ; அதே போல் அரசியல் விஷயத்திலும் குருட்டு நம்பிக்கை உடையவர்களாகி அவர்களது கட்டுப்பாடான கொள்கைகளிலும் சூழ்ச்சி இயக்கங்களிலும் நம்பிக்கை வைத்து அவர்களை வழிகாட்டியாக ஏற்று கண்மூடித்தனமாகப் பின்பற்றி வருகின்றார்கள். எனவே மூட நம்பிக்கையிலிருந்தும், கண்மூடி பின்பற்றும் குருட்டு நடவடிக்கைகளிலிருந்தும் என்று ஆந்திர தேசத்தார்கள் விடுதலைபெறுகின்றார்களோ அன்றுதான் அவர்கள் பார்ப்பனர்களின் மதப்புரட்டுகளிலிருந்தும் அரசியல் புரட்டுகளிலிருந்தும் விடுதலையடைய முடியும். ஆதலால் அது வரையில் நாம் எந்த வகையிலும் ஆந்திர தேசத்தார்களை பின்பற்றுவது மறுபடியும் குழியில் போய் விழுவதையே ஒக்கும்.

பத்துப் பன்னிரண்டு வருஷமாக எவ்வளவோ ஆபத்துக்களினிடையிலும் தொல்லைகளினிடையிலும் காப்பாற்றப்பட்ட இந்த அருமையானதும், ஒப்பற்றதானதும், இன்றியமையாததானதுமான இயக்கத்தை நெல்லூரில் சாவடிக்காமல் காப்பாற்ற வேண்டியது தமிழ் நாட்டு பார்ப்பனரல்லாத மக்களின் முக்கிய கடமையாகும். இந்த பத்து வருஷகாலமாய் இவ்வியக்கத்தை தோற்றுவித்து அதிலேயே இரவும் பகலும் உழைத்து வந்த ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களைவிட இந்த நான்கைந்து வருஷமாக இவ்வியக்கத்தில் மேல் மினுக்கியாய்கலந்துகொண்டிருக்கு' ஒருவருக்கு எப்படி அதிகமாகத்தெரியக்கூடும் என்றும், எப்படி உபதேசம் செய்ய யோக்கியதை உண்டாகும் என்றும் சில நண்பர் நம்மை கேள்விகேட்கலாம், அது சரியான கேள்வியேயாகும்.

ஆனாலும் அதைப்பற்றி நாம் இங்கு அதிகம் விவரிக்கும் வேலையில் ஈடுபடாமல் நமக்கும் சிறிதளவாவது பாத்திய முண்டு என்று பொதுவாக சொல்லிக் கொள்வதுடன், எந்தக்காரணத்தை முன்னிட்டும் பார்ப்பனர்களை இவ்வியக்கத்தில் சேர்த்தால் இவ்வியக்கம் அன்றே தேன் கூட்டில் நெருப்பு வைக்கப்பட்டது போல் இயக்கம் செத்து பார்ப்பன ஆதிக்கத்திற்கு மற்றொரு சாதனமாய் மாறிவிடும் என்பதைமட்டும் அழுத்தம் திருத்தமாக உறுதியாய்ச் சொல்லுவோம். பார்ப்பனரல்லாத தலைவர்களில் சிலர் இவ்வியக்கத்தில் பார்ப்பனர்களை சேர்த்துக்கொள்ள வேண்டியதற்கு பலவிதமான அரசியல் காரணங்களைச்சொல்லி நம்மை வசப்படுத்த முயற்சிக்கக் கூடும். அரசியல் காரணங்களோ நமக்கு முக்கியமல்ல. அன்றியும் பார்ப்பனர்களுக்குள்ள அரசியல் பங்கை மோசம் செய்ய வேண்டும் என்றும் நாம் சொல்வதில்லை. நமது கொள்கைக்கும் நன்மைக்கும் விரோதமில்லாத பார்ப்பனர்களுக்கு அவர்களது பங்கைக் கொடுக்கநாம் தயாராகவே இருக்கின்றோம். அரசியலில் நன்மையான காரியங்களுக்கு அவர்களுடன் ஒத்துழைக்கவும் அவர்களது ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ளவும் தயாராயிருக்கின்றோம். எந்தக்காரணத்தைக் கொண்டும் நமதியக்கத்தில்பார்ப்பனர்களை சேர்த்துக்கொள்ளாததாலேயே அரசியல் தத்துவம் கெட்டுப்போவதாயிருந்தால் நமக்கு அதைப்பற்றி சிறிதும் கவலையில்லை. அவர்கள் இல்லாமல் அரசியலைக் கைப்பற்ற முடியுமா முடியாதா என்பதை ஒருகை பார்த்துவிடலாம்.

வெள்ளைக்காரன் இல்லாமல், அவர்களுடைய சம்பந்தமே இல்லாமல் அரசாங்கத்தையே நடத்தலாம், நடத்தவேண்டும் என்கின்ற கொள்கை உடையதான காங்கிரசில் சேரவேண்டும் என்று கருதுகின்ற பார்ப்பனரல்லாத தலைவர்கள், பார்ப்பனர்கள் இல்லாமல், அவர்களைச் சேர்க்காமல் அரசியலை நடத்தமுடியாது, அரசியலைக்கைப் பற்ற முடியாது, என்று சொல்ல வருவார்களானால் அதை நாம் எப்படி நம்பவோ ஏற்கவோ முடியும் என்று கேட்கின்றோம். அன்றியும் 12 வருஷ காலமாக இந்தக் கொள்கையுடனேயே இந்த மாகாணத்தில் எவ்வளவோ எதிர்ப்புக்கிடையில் அரசியலை சரிவர நடத்தியாய்விட்டது. அன்றியும் இந்த மாகாணத்தைப்போல் இந்தியாவில் வேறு எந்த மாகாணமும் அரசியலை நடத்தவில்லைஎன்கின்ற பெருமையும்பெற்றாய் விட்டது. இதற்குவிரோதமாய்இருந்த இயக்கங்களின் சமூகங்களின் ஆதிக்கங்களையெல்லாம்அடக்கியுமாய் விட்டது.

இன்னிலையில் இனி வரப்போகும் காலத்தில் இதற்கு பேற்கொண்ட எதிரியும் சூட்சியும் யாராலாவது செய்ய முடியும் என்று நினைப்பதற்கில்லாத மாதிரியான எதிர்ப்பை அனுபவித்து தேர்ச்சியும் பெற்றாய்விட்டது. எனவே இனி எதற்காக பயப்பட வேண்டும் என்பது நமக்கு புலனாகவில்லை, ஆகையால் இது விஷயத்தில் இனி வாதித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. தமிழ்நாட்டு மக்கள் நெல்லூர் மகாநாட்டுக்கு பிரதிநிதிகளாக தாராளமாய் ஆயிரக்கணக்காய் செல்ல வேண்டியதும், அங்கு சென்று இவ்விஷயத்தை தலைகாட்டாமல் ஒரே அடியாய்அடிக்க வேண்டியதும் தவிர வேறு எவ்வித யோசனையும் செய்ய வேண்டியதில்லை எனறே தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இப்போது அலட்சியமாய் ஏமாந்து இருந்துவிட்டு பிறகு கவலைப்படுவதிலேயோ, அப்படி மீறித் தீர்மானிக்கப்பட்டு விட்டால் இயக்கத்திலிருந்து பிரிந்து போய்விடலாம் என எண்ணிக்கொண்டிருப்பதிலேயோ எவ்வித புத்திசாலித்தனமும் ஏற்பட்டு விடாது. ஏனெனில் இப்போதே அந்தத்தொல்லை ஏற்படாமல் தடுக்கசவுகரியமான வழி இருக்கும்

போது அதைவிட்டு நாளைக்கு ஒரு வழியைக் கண்டுபிடித்துக் கொள்ளலாம் என்று கருதுவது மிக்க மடமையான காரியமாகும்.

கடைசியாக நாம் ஒன்று சொல்லுகின்றோம். அதாவது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டு விட்டால், அது தென் இந்திய நலவுரிமைச் சங்கத்தை மாத்திரம்பாதிப்பதென்பதல்லாமல் சுயமரியாதை இயக்கத்தையும் பார்ப்பனரல்லாத வாலிபர் இயக்கத்தையும் சிறிதாவது பாதிக்காமல் போகாது என்பதே. மேற்கண்ட இவ்விரண்டு இயக்கங்களிலும் பற்றுள்ளவர்களும் நெல்லூர் மகாநாட்டுக்குச் சென்று பார்ப்பனர்களை சேர்க்காமல்பார்த்துக் கொள்ளுவதுடன் மேற்கண்ட இரண்டு இயக்கக் கொள்கைகளையும் அதாவது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளையும் வாலிப இயக்கக் கொள்கைகளையும இதில் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டியது முக்கிய கடமையாகும்.

நெல்லூர் மகாநாட்டில் ஜில்லா வாரியாக ஓட்டு எடுக்கப்படுமாதலால், ஒவ்வொரு ஜில்லாவிலும் நூற்றுக்கணக்கான அங்கத்தினர்கள் இப்பொழுதே தங்களை அங்கத்தினர்களாக பதிவு செய்துகொண்டு கூட்டம் கூட்டமாக வரவேண்டியது அவசியத்திலும் அவசியமே.

மீண்டும் படேல்

திரு. படேல் அவர்கள் தமிழ் நாட்டிற்குள் வந்து செய்துவந்த பார்ப்பனப் பிரசாரத்தைப்பற்றி 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்', 'குடி அரசு', 'குமரன்', 'தமிழ்நாடு' 'தமிழன்' 'சென்னை வர்த்தமானி' 'நாடார் குலமித்திரன்' முதலிய பல பத்திரிகைகள் கண்டித்தெழுதி இருந்தது வாசகர்களுக்குத் தெரிந்த விஷயமாகும். ஆனாலுமவை இவைகளெல்லாம் தமது பார்ப்பனர்கள் திரு. படேல் தகவலுக்குக் கொண்டு போகப்படாமல் சூழ்ச்சிகள் செய்திருந்தாலும் ஆங்காங்கு சென்ற இடங்களிலெல்லாம் கேட்கப்பட்ட கேள்விகளாலும், ஆங்காங்கு இவருக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகளாலும் ஒருவாறு அறிந்துதான் இருக்க முடியுமென்று சொல்லுவோம். எப்படியெனில் திரு. படேல் மேற்கண்ட பத்திரிகைகள்மீது பாய்ந்து தனது முழு விஷத்தையும் கக்கி அவைகளை யாரும் படிக்கக் கூடாதென்றுசொல்லி வருவதால், அவற்றிலுள்ளது இன்னது என்பதை உணராமல் இப்படிச் சொல்லியிருப்பாரென்று நினைப்பதற்கில்லை. தவிரவும் தமிழ் நாட்டில் பல இடங்களில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சமாதானம் சொல்ல முடியாமல் கஷ்டப்பட்டு தனது வருத்தத்தை தெரியப்படுத்தி யிருப்பதாலும் ஒருவாறு விஷயங்கள் தெரிந்திருக்கலாம். தவிரவும் மதுரையில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த பல நண்பர்களைக் கண்டு சம்பாஷித்திருப்பதுடன், சுயமரியாதை இயக்கத்தின் ஆங்கிலப் பத்திரிகையாகிய "ரிவோல்ட்" பத்திரிகையின் பிரதிகளில் 10, 15 வாரப் பிரதிகளையும் வாங்கிப் பார்த்ததாகவும் தெரியவருகின்றது. இவ்வளவும் தெரிந்த பிறகு தமிழ் நாட்டை விட்டு வெளியேறி மைசூர் ராஜ்யத்திற்குச் சென்றதும் பெங்களூரில் ஒருபெரிய கூட்டத்தில் பழையபடியே பேசியிருக்கின்றார்.

"தாழ்த்தப்பட்டவர்களின் நன்மைக்கு உழைப்பதாகச் சொல்லிக்கொண்டு ஒரு சிலர் சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்றை ஆரம்பித்து இந்திய நாட்டிற்குப் புனிதமானவைகளை அழிப்பதும், ஸ்திரீகளின் மேன்மைக்குப்பங்கம் விளைவிப்பதும், இந்த மதத்தைத் தாக்குவதும், கோடிக்கணக்கான மக்களால் பூஜிக்கப்படும் இராமனையும் சீதையையும் குற்றம் சொல்லுவதும், பிராமண சமூகத்தின்மீது துவேஷம் உண்டு பண்ணுவதுமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். இதை யோக்கியமான அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாது"

என்றும்,

"பிராமணர் மற்றும் பிராமணரல்லாதார் பிளவுகளைசர்க்காரே உண்டாக்கி யோக்கியதையும், சக்தியுமற்றவர்கள் தலையில் சுயராச்சியப் பொறுப்பு பெறுமாறு செய்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்கின்றார்கள்"

என்றும்,

"தற்போது தென்னிந்தியாவில்ஏற்பட்டிருக்கும் பிராமண-பிராமணரல்லாத சச்சரவுக்கு மேற்கண்ட இருசமூகத்தாரைச் சேர்ந்தவர்களின் அதிகாரப் பதவி போட்டியே மூல காரணம்"

என்றும்,

"ஜனத் தொகையில் சிறுபான்மையான பிராமணர்களைக் கண்டு பெரும்பான்மை ஜனத் தொகையாளரான பிராமணரல்லாதார் அச்சப்படுவது அவமானம்"

என்றும்,

"பிராமணரல்லாதார் இயக்கம் தென் இந்தியாவில் முதல் முதல் மைசூரில்தான் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகின்றது"

என்றும்,

"சர்க்கார் ஊழியம் சுயமரியாதைக்கு ஏற்றதல்ல"

என்றும்,

"யோக்கியதையும், திறமையுமுடையவர்கள் சர்க்கார் உத்தியோகம் பெறவேண்டும்"

என்றும், மற்றும் ஏதேதோ உளறியிருக்கின்றார். இவைகள் அநேகமாக திரு. படேல் தமிழ் நாட்டில் இருக்கும்போதே சொன்ன வார்த்தைகளே தவிர, பெங்களூருக்குச் சென்றபிறகு புதிதாகச் சொன்னவைகளல்ல. இவைகளுக்கெல்லாம் முன்னமேயே பதில் சொல்லப்பட்டிருப்பதை திரு. படேல் சிறிதாவது கவனித்து அதற்கு எவ்வித சமாதானமும்சொல்லாமல்திருப்பித்திருப்பி அதையே சொல்லிக் கொண்டிருப்பது யோக்கியப் பொறுப்புடைய செய்கையாகுமா? என்பதைக் கவனித்து செய்யக்கூடிய முடிவை வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம்.

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் இன்னது என்பது செங்கற்பட்டு மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களாலும், ஆங்கு நிர்ணயிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளினாலும் யாவரும் தெளிவாக உணர்ந்திருக்கலாம். அப்படியிருக்கும்போது சுயமரியாதை இயக்கத்திலுள்ள குற்றம் இன்னது என்பதாக ஏதாவது ஒன்றை திரு. படேல் குறிப்பிட்டுக் காட்டி ருஜுப்பித்து வந்திருக்கின்றாரா என்று கேட்கின்றோம்.

இவ்வியக்கம் இதுவரை தாழ்த்தப்பட்டவர்கள் விஷயத்தில் எவ்வித கவலையும் எடுத்துக்கொள்ளவில்லையா? என்றும் கேட்கின்றோம்: இதை திரு படேல் அறிய முடியாமற்போனாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்திருப்பார்களென்பது மாத்திரம் உறுதி. அதாவது தென்னாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் இது சமயம் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ள மறுத்து தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டிருப்பதும், வேறு மதத்தில் சேர வேண்டுமென்பதாக தீர்மானித்துக் கொண்டிருப்பதும் சுயமரியாதை இயக்கத்தினாலல்லவா? என்பதை பொது ஜனங்களே சிந்தித்துப் பார்க்கட்டும்.

மற்றும் இந்து மதத்தையும், இந்திய நாட்டிற்குப் புனிதமானவைகளையும், ஸ்திரீகளின் மேன்மைகளையும், இராமனையும், சீதையையும் தாக்குவதாக அவர் சொல்லுவதற்கு ஒரு ஆதாரத்தையும் அவர் எடுத்துக் காட்டவே இல்லை.

'இந்து மதம் என்றால் என்ன?'
'இந்து மதம் என்றால் என்ன?'
'இந்து மதம் என்றால் என்ன?'

என்று மும்முறை திரு படேலைக் கேட்கின்றோம். இதற்கு திரு. படேல் பதில் சொன்னாலும் சரி, அல்லது அவர் தலைவர் திரு. காந்தி பதில் சொன்னாலும் சரி, இதைப் பற்றி திரு. காந்தியையே பெங்களூரில் நேரில் கேட்டதற்கு, "இந்து மதம் என்பதாக குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஒன்றும் இல்லையானாலும், இந்து மதம் என்று சொல்லிக் கொண்டு நமக்கு வேண்டியபடி சீர்திருத்தங்கள் செய்வதற்கு வசதி இருப்பதால் அப்படி ஒன்றை வாயளவில் சொல்லிக் கொள்வது நல்லது" என்று அவரே பதில் சொன்னார். இதைச் சொல்லும்போது திரு. எஸ். இராமநாதன் அவர்களும் பக்கத்தில் இருந்ததுடன் திரு. காந்தி ஆங்கிலத்தில் சொன்னதை திரு. ராமனுஜன்தான் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார். அப்பொழுதே நாம் அப்படியானால் இந்துமதம் என்பதாக ஒரு போலி பெயரைச் சொல்லிக்கொண்டு திரு. காந்தி ஒரு சீர்திருத்தத்தைச் செய்வதும், கொஞ்சநாள் பொறுத்து அதே இந்துமதம் என்பதாகச் சொல்லிக் கொண்டு திருவாளர்கள் சத்தியமூர்த்தி, எம். கே. ஆச்சாரி போன்றவர்கள் மற்றொரு "சீர்திருத்தத்தைச் செய்வதுமாயிருந்தால், மக்களுக்கு என்றைக்குத்தான் உண்மைச் சீர்திருத்தம் ஏற்படுவது? ஆதலால் இந்து மதம் என்று சொல்லிக்கொண்டு யாரும் எவ்வித புரட்டும் செய்யாமலிருக்கச் செய்வதற்காக இந்துமதப் புரட்டையே வெளியாக்கி அதை அடியோடு ஒழித்துவிட வேண்டும்" என்பதாக பதில் சொன்னகாலத்தில், திரு. காந்தியவர்கள் ஒன்றும் மறுமொழி பேசாமல் "மறுபடியும் சந்தித்துப் பேசலாம்" என்று சொன்னார். இதை உடனே அங்கேயே திரு. சி. இராஜகோபாலாச்சாரியாரிடம் சொல்லிவிட்டு வெளிவந்ததுடன் இனியும் இதைப்பற்றி திரு காந்தியுடன்பேசுவதில் பயனில்லை என்று திரு. எஸ். இராமனுஜனிடமும் சொல்லிவிட்டு ஈரோடிற்குத் திரும்பி விட்டோம். அவர்களை இன்றும் எழுதிக்கேட்டுக் கொள்ளலாம். ஆகவே, அன்றுமுதல் இன்றுவரை திரு. காந்தி முதல் வேறு யாரும் பதில் சொல்லாமலே இருந்துவிட்டு "சுயமரியாதை இயக்கம் இந்து மதத்தை தாக்குகின்றது" என்று சொல்வதில் சுடுகளவாவது யோக்கியப் பொறுப்போ நாணயமோ இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம். மற்றும் "இந்தியாவுக்கு புனிதமான" எதை நாம் காப்பாற்றமுயற்சிக்கின்றோம்என்பதைப் பற்றியாவது திரு. படேல் ஆதாரம் எடுத்துக்காட்டியவரல்ல. திரு காந்தி இந்தியாவுக்கு வந்தபோது வருணாசிரம தர்மம் இந்தியாவுக்குப் புனிதமானது என்றார். திரு. மாளவியா ஜாதி வித்தியாசமும், அதற்கேற்ற இட வித்தியாசமும் இந்தியாவிற்குப் புனிதமானது என்றார்.

டாக்டர் மூஞ்சி வைத்திய சாஸ்திரப்படி 18 வயதில்தான் பெண்களுக்குக் கலியாணம் செய்ய வேண்டியது அவசியமானாலும் பெண்களை 12 வயதில் கலியாணம் செய்வதுதான் இந்தியாவுக்குப் புனிதமானது என்றார்.

திருவாளர்கள் எம். கே. ஆச்சாரியாரும், சி. ராஜகோபாலாச்சாரியா

ரும் மனுதர்ம சாஸ்திரமே இந்தியாவுக்குப் புனிதமானது என்றார்கள்.

திரு. எஸ். சத்தியமூர்த்தி சாஸ்திரியோ பராசரஸ்மிருதியும், பெண்களுக்கு பொட்டுக்கட்டி சாமிகள் பேரால் விபசாரத்திற்கு விட்டு அதன் தாகு மூலம் கோயில் குருக்கள்கள் வயிறு வளர்ப்பதுந்தான் இந்தியாவுக்கு புனிதமானது என்றார். எனவே இவைகளில் திரு. படேலுக்குத் தெரிந்த வரையில் இந்தியாவுக்கு புனிதமானது என்ன என்று கேட்கின்றோம்.

திருவாளர்கள் எஸ். சீனிவாசய்யங்கார், மகாகனம் சீனிவாச சாஸ்திரி, சி. ராஜகோபாலாச்சாரி ஆகிய மூவர்களும் இந்தியாவுக்கு புனிதமானது என்பதை உலகம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்கிறாரா? என்று கேட்கின்றோம்.

இந்தப் புனிதங்களைத் தவிரவேறு எந்தப் புனிதத்தை சுயமரியாதை இயக்கம் தாக்கிற்று; அல்லது தகர்க்குகின்றது என்று திரு. படேல் தைரியமாய் வெளியிலெடுத்துச் சொல்வாரானால் அவருக்குத் திரு. காந்தியால் அளிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சர்தார் பட்டத்திற்கு உண்மையான யோக்கியதை உண்டு என்று சொல்லுவோம். தவிர இராமனையும் சீதையையும் சுயமரியாதை இயக்கம் இழித்துச்சொல்லுகின்றது என்று திரு. படேல் சொல்லி இருக்கின்றார். எந்தஇராமனையும் சீதையையும் என்று திரு. படேல் சொல்லி இருந்தால் யோக்கியமாக இருந்திருக்கும். பார்ப்பனன் காலில் விழுந்த ராமனையா—மாமிசம் சாப்பிட்ட ராமனையா—கொலை செய்த ராமனையா-பார்ப்பனரல்லாதவனுகிய "சம்பூகன் என்னும் சூத்திரன்" கடவுளை தோத்திரம் தபசு செய்ததற்காகக் கொன்ற இராமனையா, சுயநலத்திற்காக தம்பி பேச்சைக் கேட்டுக்கொண்டு நியாய அநியாயம் பார்க்காமல் பாரபட்சமாய் அண்ணனைக் கொன்ற ராமனையா, வருணாசிரமத்தை ஆதரித்த ராமனையா, தன் பெண்ஜாதியை ஒரு பாமரன் பேச்சைக் கேட்டு கர்ப்பத்துடன் காட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டுவந்த ராமனையா, கடைசியாக பெண்ஜாதி நடவடிக்கைமீது சந்தேகப்பட்டு நெருப்பிலும், குழியிலும் இறக்கிய இராமனையா? எந்த ராமனை எந்த ராமனை என்று திரு. படேலை கேட்கின்றோம். திரு. காந்தி ஒருசமயத்தில் மேற்கண்ட ராமன்களையெல்லாம் ஒப்புக்கொள்ளுவதில்லை என்றும் தன்னுடைய ராமன் வேறு என்றும் சொன்னார். ஆனால் திரு. படேல் சொல்லும் ராமன்மேல் கண்ட ராமாயண ராமனா அல்லது திரு. காந்தி சொல்லும் வேறுராமனா என்றுசொல்லிவிட்டாரானால் ராமனைப்பற்றிய தகராறு ஒருவார்த்தையில் ஒழிந்து போகும். அதுபோலவே, நாம் கூறும் சொல்லும் சீதையும் ராமாயண சீதையா அல்லது திரு. காந்தியுடைய "வேறு சீதையா" என்பதையும் சொல்லிவிட்டால் சீதை விஷயமும் ஒருவரியில் தீர்ந்துபோகும். அதுவரை ராமர் இழிவும் சீதை குற்றமும் மூடிவைக்க முடியாதென்று கண்டிப்பாய்ச் சொல்லுவோம். இதைச்சொல்லி பாமர மக்களை கிளப்பி விடுவதற்காக சுயமரியாதை இயக்கம் சிறிதும் பயப்படாது என்றும் சொல்லுவோம். சுயமரியாதை இயக்கம் கோயில்களை இடிக்க வேண்டுமென்று சொல்வதாக ஒரு இடத்தில் சொன்னதாகத் தெரிகின்றது. எந்தக் கோயிலை சுயமரியாதை இயக்கம் இடிக்க வேண்டுமென்கின்றது என்பதைச் சொன்னாரா? திரு. காந்தியே கோயில்களை விபசாரிகள் வீடுகள் என்று சொல்லியிருக்கிறார். திரு. காந்தியால் போற்றப்படும் இயேசுநாதர் கோயில்களை கள்ளர் குகை என்று சொன்னதாக சொல்லுகிறார்கள். மற்றும் மகமது நபி விக்கிரகங்கள் வைத்து வணங்கும் கோயில்களை இடித்தால் புண்ணியமுண்டு என்று சொல்லி இருக்கிறாராம்.

இன்னும் எத்தனையோபெரியோர்கள் சித்தர்கள் ஞானிகள் என்பவர்கள்கோயில்களைப்பற்றி எவ்வளவோ கண்டித்திருக்கின்றார்கள். அப்படியிருக்க திரு. படேல் காப்பாற்ற ஆசைப்படும் கோயில் எது? சுயமரியாதை இயக்கத்தால் இடிக்கும் கோயில் எது? என்று சொன்னால் நலமாயிருக்கும். நிற்க, சர்தார் படேல் சுயமரியாதை இயக்கத்தை அழிக்க சர்க்காரை தஞ்சமடைகிறார். சர்தார் படேலின் வீரமே வீரம். இவர் சர்தார் படேலா அல்லது கோழை பேடி படேலா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை அவரை இங்கு அழைத்து வந்த பார்ப்பனர்களுக்கே விட்டுவிடுகின்றோம். இது முன் ஒரு சமயம் இதே மாதிரி பேசியதிருவாளர்கள் சத்தியமூர்த்தி, சீனிவாசய்யங்கார் ஆகியவர்களின் செய்கைக்கு ஒரு உதவி படேலின் செய்கையாயிற்றே ஒழிய மற்றபடி இதில் சர்தார்தனம் எங்கே என்று கேட்கின்றோம். தவிர ஒரு இடத்தில் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் சண்டைக்கு இரு வகுப்பாரினுடையவும் உத்தியோகப் போட்டியே காரணம் என்று சொல்லிவிட்டு மற்றொரு இடத்தில் பார்ப்பனரல்லார் சுயநலத்தினால்ஏற்பட்ட இயக்கம்என்றும், மற்றொருஇடத்தில் சர்க்காரால் பார்ப்பனரல்லாதாரை தூண்டிவிட்டு ஏற்படுத்தப்பட்ட இயக்கமென்றும், முன்னுக்குப் பின் விரோதமாய் உளறிக்கொட்டி இருக்கிறார். இதிலிருந்து இவ்வியக்கத்தைப் பற்றி திரு. படேல் எவ்வளவு தூரம் தெரிந்து கொண்டிருக்கின்றார் என்பது விளங்குகின்றது. கடைசியாக திரு. படேல் தன்னை பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக்கொண்டு பார்ப்பனரல்லாதார் அரசியலை நடத்தவும், உத்தியோகம்பெறவும் யோக்கியதை இல்லையென்று சொல்லி விட்டதுடன் இந்த மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் உத்தியோகம் பார்க்காமலும் அரசியலை நடத்த விடாமலும் தாங்கள்பார்த்துக்கொள்வதாய் பந்தயம் கூறுகிறார். இதிலிருந்து அவரது பார்ப்பனரல்லாதார் தன்மையும் அவருக்கு இருக்கும் பார்ப்பனரல்லாதார்வகுப்பு அக்கரையும் தானாகவே விளங்கும். இதுவே வடநாட்டுத் தலைவர்களின் யோக்கியதையை தாராளமாய் விளக்குகின்றது.

உடுமலைப்பேட்டை
டி. மு. கோர்ட்டாரவர்கள்
சமுகத்திற்கு

1925ஃஸு Claim No. 901
1928ஃஸு E.P.R.No. 784
19-9ஃஸு C.M.P.No. 389
192 ஃஸு C.M.P.No. 608

The President of the Ponneri Co-operative credit Society by Karupana Mudaliar	வாதி.

இராமசாமிக்கவுண்டர் —பிரதிவாதி.

நோட்டீஸ்.

ஷை நெம்பரில் ஏலத்திற்கு கொண்டுவரும் பிரதிவாதியின் சொத்தின் மதிப்பை குறைக்க வேணுமாய் மனுக்கொடுத்து அது 27-9-1929உ வாய்தா போட்டிருக்கிறது. ஏதாவது ஆக்ஷேபணை இருந்தால் தெரிவித்துக்கொள்ளவும்.

ஏ. ஆர். குருமூர்த்தி நாயுடு,
வாதி வக்கீல்.

உடுமலைப்பேட்டை,
16-9-29.

நோட்டீஸ்.

ஈரோடு டி. மு. கோர்ட்டு

O S. 467 of 1929

சென்னிமலைக் கவுண்டன்	வாதி
ஈரோடு தாலூகா திங்களூர் கிராமம், மந்திரிக்கவுண்டம் பாளையம் புதூரிலிருக்கும் நஞ்சபோயன் மகன் கருப்பபோயன்	1-ம் பிரதிவாதி

இதனால் மேற்படி பிரதிவாதிக்குத் தெரிவிக்கிற தென்னவெனில் மேற்படி நம்பரில் வாதி அடமானப்படி ரூ 351-8-0க்கு தாவா செய்து 24-9-29ல் வாயிதா ஏற்பட்டிருக்கிறது. அன்று மேற்படி பிரதிவாதி நேரிலாவது வக்கீல் மூலமாவது ஆஜராகி ஆக்ஷேபணை தெரிவிக்காவிடில் எக்ஸ்பார்டி தீர்ப்பு பெறப்படும் என்ற விபரம் இதனால் தெரிவிக்கப்படுகிறது.

அ. தெய்வசிகாமணி,
வாதி வக்கீல்

ஈரோடு,
19-9-29.

தேவை

வட ஆற்காடு ஜில்லா மதுவிலக்குக் கமிட்டிக்கு மாதம் ரூ. 75 சம்பளத்தில் ஒரு காரியதரிசியும், ரூ. 35 சம்பளத்தில் ஒரு குமஸ்தாவும், பிரயாணச் செலவு உள்பட ரூ. 55, சம்பளத்தில் மூன்று பிரசாரர்களும் தேவை.

காரியதரிசி வேலைக்கு மனுச் செய்பவர் நன்றாய் ஆங்கிலமும் தமிழும் பயின்றவராகவும், இந்த இயக்கத்தை நன்றாய் ஒழுங்குபெற வகுத்து நிர்வகிக்கத் தக்கவராகவும், வேலூரில் வசிப்பவராகவு மிருக்க வேண்டும். அவர் காரியதரிசி வேலையும், நிருவாக வேலைகளும் செய்யத் திறமையுள்ளவராயிருக்கவேண்டும். குமஸ்தா வேலை அபேட்சகர் எஸ். எஸ் எல். சி. பாஸ் செய்தவராகவும் டைப் அடிப்பதிலும் ஆபீஸ் வேலையிலும், அனுபோகமுள்ளவராகவும், கணக்கு வேலை பார்க்கத் திறமையுள்ளவராகவும் இருக்க வேண்டும் பிரசார வேலை அபேட்சகர்கள் நன்றாய்த் தமிழ் தெரிந்தவர்களாகவும், ஊக்கமும், வாக்குவன்மையுடன் பேசும் ஆற்றலுள்ளவர்களாகவும், பொதுக்கூட்டங்கள் கூட்டவும், சங்கங்கள் ஸ்தாபிக்கவும் தக்க திறமையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

மனுக்கள் அடியிற் கையொப்பமிட்டிருப்பவருக்கு 1929 செப்டம்பர் 26-ந் தேதி அல்லது அதற்கு முந்தி வந்து கிடைக்கத்தக்கதாய் அனுப்பப்படவேண்டும். மேலும் அவர்கள் தங்கள் சொந்த செலவில் 27-9-29-ந்தேதி பிற்பகல் 2-மணிக்கு நடக்கும் கமிட்டிக் கூட்டத்துக்கு வந்து ஆஜராகவேண்டும்.

ராவ் சாகிபு,
தாமஸ் கதிர்வேலு நாயினர்,
ரிட்டயர்ட் தாசில்தார்,
ஜில்லா மதுவிலக்குக்கமிட்டி தலைவர்,
வேலூர்.

வேலூர்,
16-9-1929.

சரிகை பட்டு டயமன் நூல் வியாபாரம்

பிரான்ஸிலும், இந்தியாவிலும் செய்யப்பட்ட எல்லா சரிகை நிறுஸுகளும், வெள்ளையிலும் எல்லா கலர்களிலும் 2/64 நெ. 2/84 நெ. டயமன் நூல் நிறுஸுகளும், நெக்குபட்டு 2/160 நெ. நிறுஸுகளும் கீழ் விலாசதாரரிடம் எப்போதும் கிடைக்கும். தேவையுள்ளவர்கள் வேண்டிய நிறுஸுகளுக்கு ஆர்டர் அனுப்ப கோரப்படுகிறார்கள். எந்த ஆர்டரும் சிரத்தையுடன் கவனித்து கிரமமான விலைப்படி அனுப்பலாகும்.

என். ஆர். குப்புஸ்வாமி,
நயனப்ப நாயக்கன் வீதி, பீ. டி.,
மதராஸ்.
12, மைனதெப்பகுளத் தெரு,
மதுரை.

இந்து என்பவர் யார்?

(திரு. டி. டி. கார்வ்)

பம்பாய் கிரானிகல் பத்திரிகையில் எழுதுவதாவது:—இந்த துரதிர்ஷ்டமுள்ள நாட்டில் "விசேட உரிமைகளைக்" காப்பாற்றும் பொருட்டும், "போதிய பிரதிநிதித்துவம் வகித்துக் கொள்ளும் பொருட்டும்" நிகழும் சண்டை சச்சரவுகளில் உபயோகிக்கப்படும் 'இந்து' என்னும் பதத்தின் அர்த்தம் இன்னதென்பதே எனக்குப் புலப்படவில்லை.

'இந்து' என்றால் என்ன அர்த்தம் என்று வினவியதற்கும் எனக்கு இது வரையில் ஒருவரும் திருப்திகரமான பதில் அளிக்கவுமில்லை எனவே யார் தன்னை இந்து என்று கூறிக்கொண்ட போதிலும் அவர் ஒரு 'இந்து' வாதல் வேண்டும்.

மதம் என்பது சமூகங்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டியதற்காக நிறுவப்பட்ட சில வரையறைகள் என்று கூறுவோமாயின், சமூக நன்மைக்காகவே ஏற்பட்ட பல்வேறு மதங்களும் ஒன்றுக்கொன்று முரண்கொண்டு சண்டையிட்டுக் கொள்ளவும் வேண்டியதில்லை.

சேத்துப்போம் மதம் சாவதுதானே

ஆனால் மதம் என்பது சில மனிதர்களால் பல நூற்றாண்டுகட்கு முன்னர், பிற்கால சந்ததிகள் கண்மூடித்தனமாக தங்கள் பகுத்தறிவை அடமானம் வைத்து அநுசரிப்பதற்காக நிறுவிய சில சட்டங்களாகும் என்று தான் நான் கருதுகின்றேன். ராய் பகதூர் சாரதாவின் மிகச் சாதாரணமான மசோதாவைப்பற்றி சில பிடிவாதம் பிடித்த அங்கத்தினர்கள் சின்னாட்கட்கு முன்னர் இந்தியா சட்டசபையில் நிகழ்த்திய வாதங்களிலிருந்து மேற்கூறிய உண்மை உறுதி செய்யப்படுகின்றது.

14 வயதுக்கு ஒரு பெண்ணின் மண வயதை உயர்த்தின மட்டில் செத்துப்போகக்கூடிய ஒரு மதம் சமூக நலனுக்குத் தீமையை இழைக்கக்கூடியதும், ஒழுக்க ஈனமுமானது என்பதில் தடையில்லை.

மதம் ஒழிதல் வேண்டும்

இதனை இக்கணத்தே ஒழித்து விடுதல் வேண்டும். மரத்தாலும், லோகத்தாலும், கல்லாலும் செய்யப்பட்ட கடவுள்களை நம்பி வணங்கும் ஒரு மனிதன்; சாதிபேதத்தில் உறுதியான பற்றுடைய ஒரு மனிதன்; அருவக் கடவுளை நம்பும் ஒருமனிதன்; மிருக கோடிகளில் ஒருவகை மிருகந்தான் தெய்வீகமுள்ளதென்று அதனை வழிபடும் ஒரு மனிதன்; சில குறிப்பிட்ட நாட்களில் விரதங்கள் அநுட்டிக்கும் ஒரு மனிதன்-இதனை நெடுக, வளர்க்கலாம் இவைகளில் எவன் 'இந்து' எனப்படுவோன் இவ்விந்தியாவில் இப்பொழுது கூறப்பட்ட இத்தனை விஷயங்களும் அல்லது அவற்றில் ஒன்றேனும் ஒரு இந்து என்பவனுக்கு அவசியமில்லை என்று கூறும் பல இந்துக்கள் இந்தியாவில் இருக்கின்றனர் என்பதாக நான் திண்ணமாய்க் கூறுவேன். இத்தகைய சான்றோர்கட்குத்தான் நான் முறையீடு செய்து கொள்ளுவதும்:—இவர்கள் அனைவருமே மதம் என்ற ஒன்றைக் கண்டிப்பதுடனின்றி தமக்கு மதமே இல்லையென்றும் பொதுப்படப் பிரசாரம் புரிதல்வேண்டும். கடிதில் ஜனத்தொகை கணக்கு எடுக்கப்படுவதால், அதுகாலை, மதம் என்ற கட்டத்தில் 'ஒன்றுமில்லை' என்று இப்பெருந்தகையார் அனைவரும் எழுதிவிடுதல் வேண்டும். இவர் தம் மத விரோதப் பான்மை பொது விளம்பரத்துடன் நின்றுவிடுவதுடனில்லாமல் எழுத்து மூலமாகவும் பதிவு செய்யப்பெறுகட்டும்.

[பம்பாய் கிரானிகல்-திராவிடன்]

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

சாமிகளின் அடிமைகள்

சாமிகளின் அடிமைகள் என்னும் மொழி பெயர்ப்பு நூல் இப்பொழுது விற்பனைக்குத் தயாராய் உள்ளது. இதன் விலை 1-8-0 ரூபாய் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் பலர் இவ்விலையைச் சிறிது குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் நாம் பிரதி ஒன்றை 12 அணாவிற்கே கொடுப்பதாக உத்தேசித்துள்ளோம்.

விலை ரூபாய் 0—12—0.

திராவிடன் புத்தகாலயம்,

14, மௌண்ட் ரோட், சென்னை.

தனிப்பிரதி விரும்புவோர் 14-அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்: —

சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:

அனுமதிக்கப்பட்ட மூலதனம்	... ரூ.	6,00,00,000.
பதிவு செய்யப்பெற்ற ,,	... ரூ.	3,56,05,275.
வசூலான ,,	... ரூ.	71,21,055.

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,

4, முதல் லைன்பீச், சென்னை.

(28)

ரூ. 2-15-0 ரூ. 2-15-0

பௌண்டன் பேனா

நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்தது மாட்சிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழப்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர்டு W. B. பவுண்டன் பேனா, தங்கப் ப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனாமாய் அனுப்பப்படும். சென்னை இராஜதானியில் இந்தப் பவுண்டன் பேனாவைப் பிரபலப்படுத்துவதற்காக லீவர் பாக்கெட் வாட்சுகளை ஏராளமாகத் தருவித்து ஒவ்வொருவருக்கும் இனாமாக அனுப்பிக்கொண்டு வருகிறோம். ஸ்கூல் உபாத்தியாயர்கள், வக்கீல்கள், வக்கீல் குமாஸ்தாக்கள், இன்னும் ஏனைய உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் எழுதப்பேனாவும், மணி பார்க்கக் கடியாரமும் இந்த சொற்ப விலையில் கிடைக்கிறது ஆச்சரியமல்லவா?

W. B. பவுண்டன் பென் விலை ரூ. 2-15-0 இதற்கு மேற்சொல்லிய பாக்கெட் வாட்சு இனாம். ஒரே காலத்தில் இரண்டு பேனாக்களுக்கு ஆர்டர் கொடுத்தால், பாக்கெட் வாட்சுக்குப் பதிலாக ரோல்டு கோல்டு ரிஸ்டு வாட்சு எந்த ஷேப் வேண்டுமோ இனாம்.

முக்கிய குறிப்பு:—எங்களிடமிருந்து ¼ டஜன், ½ டஜன் இப்படிப் பவுண்டன் பேனாக்களைத் தருவித்துப் பிறகு, பேனாக்களையும், கடியாரங்களையும் தனித்தனியாக அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிக்கவும் வழியுள்ள இத்தருணத்தைக் கைவிடாதீர்கள்.

(30) The Laxmi Trades Co., Sowcarpet, Madras.

"திரிமூர்த்திகள் என்ற பெயரே" புராணப் புரட்டு.

(சித்தாக்காடு கே. ராமையா எழுதியது)

சில மதஸ்தர் சிவனையும், விஷ்ணு மதஸ்தர் விஷ்ணுவையும், ஸ்மார்த்தர்கள் பிரம்மாவையும் வழிபடுவதின் மூலம் ஏற்படும் சமயக்குறிச் சண்டைகள் கீழ்மன்றம் வரை நிகழ்ந்தாலும், மேற்படி மூன்று கடவுளின் பெயரால் கொள்ளைகொண்டுவரும் ஒரு சாரார், தங்கள் சுயநலத்திற்கு ஆதரவாகவும், சண்டையிட்டுக் கொள்ளுகிறவர்களுக்குச் சாந்தியாகவும் இம்மூன்று பெயரைக்கொண்ட கடவுள்களும் ஒருவரே என்று தத்துவார்த்தம் புரிந்துகொண்டு மக்களை பாழ்படுத்தி வருகிறார்கள். என்ன தத்துவார்த்தம் புரிந்தாலும் திரிமூர்த்தி என்றபெயர் பாமர மக்களை ஏமாற்ற படித்தகூட்டத்தார் தங்கள் தங்கள் மனோபாவப்படியும், கொள்கைப்படியும் எழுதி விளம்பரப் படுத்திக்கொண்ட புரட்டு என்பதை அடியில் வரும் விவரங்கள் ருசுப்பிக்கும்:-

வராக புராணத்தில் ஆண் திரிமூர்த்திகளிலிருந்து ஒரு சக்தியுண்டாகி மூன்று பகுதிப்பட்டு லட்சுமி, சரஸ்வதி, காளியென்ற பெண் திரிமூர்த்திகளுண்டானார்கள் என்று வரையப்பட்டிருக்கிறது. இப்புராணத்திற்கு நேர்முரணாய் "மார்க்கண்ட புராணத்தில் மேற்படி அம்மன் திரிமூர்த்திகளிலிருந்து சாமி திரிமூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவனுற்பத்தியானதாக எழுதப்பட்டிருக்கிறது லிங்க புராணத்தில்; சிவனுடைய இடது பக்கத்திலிருந்து விஷ்ணுவும், லட்சுமியும், வலது பக்கத்திலிருந்து பிரம்மாவும், சரஸ்வதியும் தோன்றினார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே லிங்க புராணத்தில் பிரிதோரிடத்தில் சிருஷ்டிப்பு கிரியை நடத்த சக்தியில்லாமல் பிரம்மா அழுத கண்ணீரிலிருந்து சிவனுற்பத்தியாகி அவ்விருவர்களுமாக சிருஷ்டிப்பு கிரியை நடத்தினார்களென்றும் புகல்கின்றது. மச்ச புராணத்தில் பிரம்மாவிலிருந்தே சிவனுற்பத்தியானதாக அறியக்கிடக்கின்றது. எல்லாவற்றையும் பொய்மைப் படுத்தக்கூடிய வகையில், நாரத புராணத்தில், நாராயணனுடைய வலது பக்கத்தில் பிரம்மாவும், இடது பக்கத்தில் விஷ்ணுவும், நடுவில் சிவனும் தோன்றினதாக புகல்கின்றது. நாராயணன் என்ற பெயரே பிரம்மாவுக்கு ஏற்பட்ட காரணப் பெயர் என்பதாக மனுஸ்மிருதி அ. 1. 10ல் புகல்கின்றது. பிரம்மா ஜலத்தில் அசைவாடிக் கொண்டிருந்ததால், (நாரம்—ஜலம், அயனம்- அசைவாடிக்கொண்டிருத்தல்) நாராயணனென்ற பெயர் உண்டாயிற்றாம்! விஷ்ணுவுக்கும் நாராயணன் என்ற பெயரிருப்பதாக பல புத்தகங்கள் வெளியிடுகின்றன. மேலே லிங்க புராணீகர் சொல்லியபடி சிவனுடைய இடது பக்கத்தில் தோன்றிய லட்சுமியும், மகாபாரதத்தில் அமுதங் கடையும் தருணத்தில் அமுதம் பிறப்பதற்கு முன் தோன்றிய சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, இரதி, அகலிகை, இந்திராணி, அறுபதினாயிரம் ரம்பாஸ்திரீகள், காமதேனு, கற்பகவிருட்சம், அயிராவதம், வெள்ளைக் குதிரை முதலானவர்களோடு தோன்றியலட்மியும் ஒன்றா? வேறா? என்பதை ஆஸ்திகர்கள் தான் சொல்ல வேண்டும். அண்ணாமலை புராணத்தில், சிவனிடத்தில் குடிலை என்னும் ஒரு சக்தி தோன்றி அதில் பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன், முதலிய பஞ்சகிருத்தியங்களுக்குரியவர்கள் தோன்றினார்களாம்! அப்படியானால் சிவனும், ருத்திரனும் தனித்தனி தெய்வங்களாகிறதே! விஷ்ணுவை தங்களுடைய தாயென்றும், மகளென்றும் சொல்லப்படுகிற அதிதியின் குமாரரிலொருவராக சில புத்தகங்கள் வெளியிடுகின்றன. விஷ்ணுவின் உந்திக்கமலத்திலிருந்து (தொப்பியில் தோன்றிய தாமரைக்கொடியிலிருந்து) பிரம்மா தோன்றினதாக மகாபாரதம் புகல்கின்றது. பிரம்மாவை சிருஷ்டிகர்த்தாவென்று சொல்வதற்கு முரணாக; பூர்வீக இருக்கு, அதர்வண, வேதங்களில் சிருஷ்டி கர்த்தாவுக்கு விஸ்வகர்மா, இரண்யகர்ப, பிரஜாபதி என்ற பெயர்களிடப்பட்டிருக்கிறதே தவிர பிரம்மா என்கிற வார்த்தையே வேதங்களிலும், பிராமணங்களிலும் காணப்படவில்லை. மேலும் இருக்கு வேதத்தின் நிர்கருத்த வியாக்கியானத்தில் அக்கினி, இந்திரன், சூரியன் என்ற மூவர்களை தேவர்களாக சொல்லப்பட்டிருக்கிறதே தவிர தேவர்களுள் முக்கியஸ்தர் ஜாப்தாவில் விஷ்ணுவின் பெயரைக் காணோம். எந்த வேதத்திலும் பயங்கரமான ஊளை சப்தமிடுகிற ருத்திரனுடைய பெயர் வருகிறதே யொழிய சிவன் என்ற வார்த்தையே கிடையாது. பரமசிவனுக்கு விநாயகர் சிரேஷ்ட புத்திரர் என்பது உலகமறிந்த ரகசியமாய் இருக்கிறது. பிள்ளையார் புராணத்தில் விக்கிர ஜண்ட விநாயகருக்கு இராசதம், தாமதம், சாத்வீகம் என்ற முக்குணங்களிருப்பதாகவும் இராசத குணத்தில் பிரமாவும், தாமத குணத்தில் விஷ்ணுவும், சாத்வீக குணத்தில் சிவனும் தோன்றினதாக அறியக்கிடக்கின்றது. மற்றொரு புராணத்தில் ஆதி சக்தியிலிருந்து திரிமூர்த்திகளும் தோன்றினார்களென்றும், அப்பால் இந்த ஆதிசக்தி இம் மூவர்களையும் புருஷர்களாக வைத்துக் கொண்டாளென்றும் தெரியவருகிறது. இத்திரிமூர்த்திகளில் ஒருவராகிய விஷ்ணு 10 அவதாரமெடுத்ததாக புகலும் பல புத்தகங்களுக்கு முரணாக, "பாகவத புராணத்தில் 21 என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிவனுக்கு 5 தலை இருக்கும்போது 10 கண் கள் இருக்கவேண்டியதை மறந்து முக்கண்ணன் என்று சொல்வதெப்படியோ! இராமாயணக்கதையில் சிவனை விஷ்ணுவுக்கு அடுத்த ஸ்தானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மகாபாரதத்தில் சில இடத்தில் விஷ்ணுதான் பெரியவரென்றும், சில இடத்தில் சிவன்தான் பெரியவரென்றும், முன்னுக்குப் பின் முரணாக சொல்லப்பட்டிருக்கிறது. பிரபஞ்ச சிருஷ்டிக்கு சிவனே மூல கர்த்தா என்று புகலும், லிங்க புராணம்-அண்ணாமலை புராணம் போன்ற சிவபுராணங்களுக்கு புறம்பாய் மகாபாரதம் ஆதிபர்வம் பிரபஞ்ச சிருஷ்டி சருக்கத்தில் பிரமாவே சகலத்தையும் சிருஷ்டித்ததாக புகலப்பட்டிருக்கிறது. மானிடர்களைப் போல் திரிமூர்த்திகளாகிய தெய்வங்களுக்கும், நட்சத்திரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. பிரமாவுக்கு ரோகணியும், விஷ்ணுவுக்கு திருவோணமும், சிவனுக்கு திருவாதிரையும் ஜென்ம நட்சத்திரமாமே! சிவனுக்கு பிரமஹத்தி சனியன் பிடித்து 12 வருஷம் சுடலை சுற்றி திரிந்து பலவித கோரணிகளும் செய்தாராமே! திரிமூர்த்திகளும் சேர்ந்து செய்த துர்கிர்த்தியத்தால் அநசூயையின் சாபமடைந்து சிறிய பாலகர்களாய் அவளண்டையில் அநேக காலம் தங்களுடைய சிருஷ்டி, திதி, சங்காரமென்னும் தொழிலை இழந்து விட்டு இருந்ததும்; கண்டகி நதியால் இம் மூர்த்திகள் இரண்ய கர்ப்பம்-சாளக்கிராமம்-சிவனென்ற கல்லுகளாக சபிக்கப்பட்டதும்; நாகவல்லியாலும் கல்லாக சபிக்கப்பட்டதும், அரிகரன் பிறந்தது போன்ற பல ஆபாசக்கதைகள், புராணங்களில் காணப்படுகின்றன. அக்கதைகளில் அடங்கி இருக்கும் வார்த்தைகளை, இக்காலத்திய ஒரு இழிதன்மையுடையவன்கூட வாயில் வைத்துப் பேசவே மாட்டான். தமிழ்நாட்டு சகோதரர்களே! மேலே எழுதப்பட்டிருப்பவைகளெல்லாம் தெய்வீகத் தன்மை பொருந்திய புராண இதிகாசங்களிலிருப்பவைகளே தவிர என்னால் எழுதப்பட்டதல்ல. இத்தியாதி காரணங்களால் திரிமூர்த்திகள் என்றபெயரே புராணீகர்களுடைய புரட்டுகளுக்குக் கீழ் சிருஷ்டிக்கப் பட்டதென்பது தெற்றென விளங்க வில்லையா? திரிமூர்த்திகள் என்ற பெயருடன் ஊர் தவறாது கோயில்களிலும், வீடுகளிலும், உலவிக்கொண்டு, "தமிழர்களுடைய இரத்தத்தை உருஞ்சி" அடிமைக்கு ஆளாக்கிவிட்டதென்பதற்குச் சாட்சியாக திரிமூர்த்திகளுக்குக் கோவில் கட்டிய அரசர்கள் அரசுரிமை இழந்ததும், திரிமூர்த்திகளுக்கு புறம்பாய் உள்ள அன்னிய மதங்கள் வலுவடைந்து வருவதும், வயிற்றுக் கஞ்சிக்கு வகையில்லாமல் தினந்தினம் ஆயிரக்கணக்கான மக்கள் அன்னியநாடு சென்று வெள்ளைத் தோட்டத்தில் சாவதும், திரிமூர்த்திகள் அவதரித்திருக்கும் இந்நாட்டில் 100க்கு 75 பேர்கள் பிச்சை எடுப்பதுமே போதிய சான்றாகும். திரிமூர்த்திகள் என்ற பெயரையே ஜனசமூகம் அறியும்படி சுயநலங்கொண்ட ஒரு சாரார் எழுதிய புரட்டு புராணங்கள், நாட்டில் மலிந்து கிடப்பதின் உட்கருத்தை கல்வி நாகரீக மடைந்த இக்காலத்தியவர்கள்கூட வெளியிடாமல், பாமரமக்கள் திரிமூர்த்திகளின் பெயரால் அறியாமை காரணமாக செலவுசெய்யும் லட்சக்கணக்கான பொருளையும், பார்ப்பனர்களுக்கு அடிமைப்பட்டு கெட்டுப்போன பண்டைய ராஜாக்களின் அறியாமை காரணமாக எழுதிவைக்கப்பட்ட சர்வ மான்யங்களையும், தன்னலத்துக்கு உபயோகப்படுத்தக் கருதி மனதறிந்த வஞ்சகம் செய்து வருகிறார்கள். கஷ்டப்படும் இளைத்தகூட்டத்தாரை, வலுத்த பணக்கார, படித்த கூட்டத்தார் அமுக்குவதற்கு இத்திரிமூர்த்திகள் என்ற புரட்டுக் கடவுளையும் தெய்வீக சாஸ்திரமென்றதும், மேலே எழுதப்பட்டதுமான ஆபாச புரட்டு புராணங்களையும் கருவியாக உபயோகப்படுத்தி வரும் சூழ்ச்சியை நன்கறிந்த ஈரோடு திரு. ராமசாமிப் பெரியார் குடி அரசின் மூலம் தனக்குத்தானே நாயகனாக இருக்கவேண்டுமென்றும் புராணக்கட்டுக்கும், கோயில் கட்டுக்கும் தலைவணங்காமல் தன் மதிப்பைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று ஜன சமூகத்திற் கெடுத்துரைக்கிறார். அதற்காகவே சுயமரியாதை இயக்கத்தையும் தோற்றுவித்திருக்கிறார். திரிமூர்த்திகள் என்ற பெயரே புராணப் புரட்டு என்பதையும் பார்ப்பனர்கள் பிழைக்கச்செய்த சூழ்ச்சி என்பதையும், அறிந்து கொள்வதற்கு மேலே எழுதப்பட்டிருப்பவைகளைக்கூர்ந்து கவனித்து சுயமரியாதை இயக்கத்திற்குத் தக்க போராதரவு கொடுத்து பிறநாடுகளைபோல் ஆகவேண்டுமாய்கேட்டுக் கொள்கிறேன்.

ஒரே மணி நேரத்தில்
ஆச்சரிய குணமுண்டு.

மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும்.

டப்பி 1 ரூபாய் 2—0—0

ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
(3) தபால்பெட்டி 119, மதராஸ்.

வங்காளத்தில்

சுயமரியாதை தாண்டவம்

இந்துமிஷன் தலைவர் முன்ஷி காஞ்சத்தியாக்கிரகத்தைப்பற்றி எழுதியுள்ளதில் கூறுவதாவது:—

முன்ஷிகான்ஞ்காளி கோவிலில் நான் சத்தியாக்கிரகம்ஆரம்பித்ததின் நோக்கங்களையும் கொள்கைகளையும் தப்பாக நினைத்துக்கொண்டு சிலவிடங்களில் தப்பான வியாக்கியானங்கள் கூறப்படுகின்றன.

நெடுங்காலமாகவே வங்காள சமுதாய சீர்திருத்தம், அரசியல், மதம், அறிவு வளர்ச்சி முதலியவைகளில் பீக்ராம்பூர் முதன்மையாக வேலை செய்துவருகின்றது. முன்ஷிகான்ஞ் சப் டிவிஷனல் ஆபீசர் இருக்குமிடம். பிக்காரம்பூருக்குச் மத்தியஸ்தலமாகும். இக்காரணத்தினாலேயேநான் இந்துமிஷன்சார்பில் இந்த சத்தியாக்கிரகத்தை நடத்த இந்தவிடத்தை தேர்ந்தெடுத்தேன்.

தீண்டாமை என்னும் கொடுமையை போக்குக

தற்போதிருக்கும் இந்து சமூக வாழ்க்கை நிலையை சீர்திருத்த வேண்டுவது அவசியமென்றும், பெருந்தீமைகளில் ஒன்றான தீண்டாமையை உடனே அகற்றவேண்டுமென்றும், எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், எப்படி இத்தீமைகளை போக்கித் தாழ்ந்த வகுப்பாரை உயர்த்துவது என்பது தான் கேள்வியாய் இருக்கின்றது. உணவிலும் குடிப்பதிலும் ஒவ்வொருவரும் விரும்புவதும் விரும்பாததுமிருக்கின்றது. தீண்டாமை யகற்றல் என்பதற்கு கட்டாயமாய் சமபந்தி போஜனம் சாப்பிட வேண்டும், கலப்புவிவாகம் செய்து கொள்ள வேண்டும் என்பது பொருளாகாது. இந்தியாவைப் போன்றதோர் நாட்டில் மதம், மதக்கிரிகைகள், திருவிழாக்கள் முதலியவைகளே தான் ஜனங்களை உண்மையில் ஒன்றாகச் சேர்த்து பிணைக்கும் கயிறாகும். தாழ்ந்த வகுப்பார் ஆலயங்கட்குப்போய் உயர்ஜாதி இந்துக்களுடன் வீற்றிருக்கும் உரிமை பெற்றுவிடுவார்களானால், ஜாதி வித்தியாசம் மிகவும் குறைந்துபோம். இந்து சமூகத்தை சார்ந்த எவரும் இந்தச் சாதாரணமான உரிமையுடையவரென்று நான் கருதுகின்றேன். எனவே தாழ்ந்த வகுப்பாருக்குள்ள இந்தச் சாதாரண உரிமையை நிலைநாட்ட நான் ஆரம்பித்துள்ளேன். அதற்கு ஆலயப்பிரவேசம் முதற்படியாகும். நான் இந்துமதத்தையும் சமூகத்தையும் அழிப்பவனல்லன். காளி கோயிலின் தற்போதைய மானேஜ்மெண்டை மாற்றவோ அல்லது அங்குதற்போதிருக்கும்ஏற்பாடுகளைக் கலைக்கவோ நான்எண்ணவேஇல்லை. நான் விரும்புவதெல்லாம் வெளியிலிருந்து கடவுளை தொழுபவர்கள் ஆலயத்திற்குள் சென்று பூஜை முதலியன செய்யவேண்டுமென்பதே.

முன்ஷிகான்ஞ் சத்தியாக்கிரகத்திற்குஎனக்குநாமசூத்ராசமூகத்தினர்களிடமிருந்தும் அவர்களின் தலைவர்களிடமிருந்தும் எனக்கு நான் எதிர்பாராத அளவிற்கு ஆதரவு கிடைத்துள்ளது.

தீண்டப்படாதார் அங்கீகரிக்கப்படல்

முன்ஷிகான்ஞ்சில் சத்தியாக்கிரக நிலை இன்னும் முன்னிருந்தது போலவே இருக்கின்றது. போலீசார் யாரையும் வைதிகப் பிராமணர்களையும் கூட ஆலயத்திற்குள் விடுகின்றார்களில்லை. சத்தியாக்கிரகிகள் போலீஸ் லயனுக்குமுன் உட்கார்ந்திருக்கின்றார்கள்.

நேற்று திருவாளர்கள் மனோரஞ்சன் பானர்ஜி, பிரபல சந்திராகவகுலி, எம்.எல்.சி., நாளினி, கிஷோர் ராஜா, மோஹினிமோகன்தாஸ் முதலியோர்முன்ஷிகாஞ்சிற்கு வந்தனர். அவர்கள் முதலில் சத்தியாக்கிரக ஆபீசிற்குச் சென்று சில தொண்டர்களைக் கண்டு பேசினர். பின்னர் நிலைமையைப்பற்றி வாதிக்க வக்கீல்மார் லைப்ரரிக்குச் சென்றனர்.

இம்மாதம் 5ந் தேதியன்று வக்கீல்மார் சங்கத்தார் காளிகோயிலுக்குள் போக பார்ப்பனர்கள், வைசியர்கள், பறையர்கள் மற்றைய எல்லா தீண்டப்படாதார்கட்கும் உரிமை உண்டென்பதை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

மனோரஞ்சன் மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி அவர்கள் காலப்போக்கிற்கு ஏற்றபடி நடக்கத் தயாராயிருப்பதாய் காட்டி விட்டதாயும், மூன் பார்ப்பனர்கள் மட்டுமே ஆலயத்திற்குள் போகலாமென்றிருந்த உரிமையை எல்லா வகுப்பினர்கட்கும் அளித்துள்ளதாயும், கூறினார். அவர் இந்து மதத்தை தழுவியவர்கட்கும் அவ்வுரிமையை வழங்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொண்டார். ஆலயப்பிரவேசத் தகராறை சாந்தமாய்முடிவுசெய்யும்படியும் வக்கீல்மார்களை அவர்கள் கேட்டுக்கொண்டனர். அவர்கள் திரும்பவும் சத்தியாக்கிரக ஆபீசிற்குச் சென்று அங்கு தொண்டர்களுடன் நிலைமையைப்பற்றி வாதித்தனர். இருதரப்பாருக்கும் திருப்தியை தரக்கூடியவாறு சாந்தமாகவே விரைவில் முடிவு செய்துகொள்ளப் பார்க்குமாறு அவர்களையும் கேட்டுக்கொண்டனர். மற்றும் அவர்களை பலாத்காரம் எதுவும் செய்யாதிருக்கும்படியும் கேட்டுக்கொண்டனர்.

மலஹரி

மலச்சிக்கலுக்கு வெறும் மூலிகைகளினாலேயே செய்யப்பட்ட அருமையான இனிய குளிகைகள். மலம் குடலில் சிக்கிக்கொண்டு நாளளவில் உயிருக்கு உயிரான இரத்தத்தைக் கெடுத்து தலைவலி, இடுப்புவலி, கைகால் சோர்தல், அஜீர்ணம், அன்னத்துவேஷம், வாதம், சூலை முதலிய நோய்களை உண்டாக்குகிறது. இந்த குளிகையை 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஷை வியாதிகள் ஒழிந்து தேகபுஷ்டி, வலிமை, உற்சாகம், சுறுசுறுப்பு, முகதேஜஸ் உண்டாகும். நித்தம் சுகமாக மலசுத்தி ஆகும். முதல்நாளே குணமறியலாம்.

30 குளிகைகள் விலை ரூபாய் 1-0-0.

4 அணா ஸ்டாம்புகள் அனுப்பினால் மாதிரிக்குளிகைகள் அனுப்பப்படும்.

ரஸ்மக்

முகப்பருக்களுக்கு ஆச்சரியமான மருந்து டப்பி 1 அணா 12. வி. பி. சார்ஜ் வேறு.

ஏஜெண்டுகள் தேவை:—

கேஷவலன் கம்பெனி,
வேலூர், வட ஆற்காடு.

“பாபுலர் எலெக்டிரிக் கைவிளக்கு”

(எந்த சமயத்திலும், சைகிளுக்கும் உபயோகிக்கக் கூடியது)

உயர்ந்த பவருள்ள பாட்டெரியுடனும், அழுத்தமான பூதக் கண்ணாடியுடனும் உயர்ந்த மாதிரியிலுள்ளது. வெகு தூரத்திற்குப் பிரகாசத்தைக் கொடுப்பதாயும், வெகு நாளுழைக்கக் கூடியதாயும், பளிச்சென்ற பிரகாசமும் கொடுப்பதாயுமுள்ளது. கையிலெடுத்துப் போக மிக சௌகரியம். நீங்களும் ஒன்று வைத்துக் கொள்ளுங்கள்.

விலை ரூ. 3—0—0 தான்.
வி. பி. தனி.

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி.
173. தங்கசாலை, மதராஸ்.

பழநி சி. எம். சாமி,

குருதாம்பர பஸ்பம்

இது அபூர்வ சக்திவாய்ந்தது. திமிர், குஷ்டம், மதமதட்பு, குறைநோய், வீக்கம், பெருவயறு, மகோதரம் ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம், சொரிகள், பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆராத குழிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அனுபவத்தில் கைகண்டது.

50 வேளை பஸ்பம் ரூபா 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அன்னிய நாட்டார் ரூ. 5. முன் பணம் அனுப்பவேண்டும்.

சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்திய சாலை, பழநி.
(பி)

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஞன்'' எனக்கூறி, அவர்கள் தானம் பெற வந்தமை குறித்தார்!

தாரை வாலிமேல் வீழ்ந்தழுதான் என்று கூற வந்த கம்பர் தம் இயற்கை தோன்றத் தகாத வகையான் விவரித்துக் கூறினர். அது வருமாறு:—

“குங்குமம் கொட்டியன்ன குவி முலைக்கு வட்டுக்கொக்கப் பொங்கு வெங்குருதியோர்ப்ப புரிகுழல் சிவப்பப்பொற்றேள் அங்கவன் அலங்கல் மார்பிற் புரண்டனள்” செத்துக் கிடந்த கணவன்மேல் வீழ்ந்தழும்ஒரு பெண்மணியை இச்சிலையிற்றான் புனைந்துரைப்பது புலவர் புலனே?

வாலிமேல் தைத்த அம்பை தாரை மேல் வீழ்ந்தழ இடர்ப்படுவதாக கூற, நீலன் பிடுங்கி எறிகிறான் என வால்மீகி கூறுகிறார். கம்பரோ வாலிபற்றிய பிடியைவிட்டு மடிதலும் அவ்வம்பு மறுபுறங்கண்டு ஓடி கடலுட் குளித்து அமரர் மலர் சூடி இராமனது அம்பறாத் தூணிபுக்கது என்று கூறுகின்றார். இராமனுக்குத்தான் கம்பர் தெய்வத்தன்மை யேற்றினர்; அவனுடைய அம்புக்குமா இவ்வாறு தெய்வத்தன்மை ஏற்றி தமிழ் மக்களை மயக்கி மாறான கொள்கைகளை அவர் மனத்திடைப் புகுத்த அவர் முயல வேண்டும்? இனிமேற்சொல்லுதும்.

ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது;20,000சந்தாதாரர்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், வயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனம்

வருட சந்தா தபால்கூலி யுள்பட

உள்நாடுகளுக்கு ரூபா 1—0—0

வெளிநாடுகளுக்கு ,, 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

(5)

திருப்பூர் பனியன்கள்

முதல்தரம் கார்டிகன் 32 இஞ்சு டஜன் 1-க்கு 6-8-0. வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்.

The General Knitting Factory,
TIRUPUR

(6)

நூதனம்! அதிசயம்!!
குறைந்த விலைக்கு விற்பனை!!!
எலெக்டிரிக்

மேஜை விளக்கு



இந்த விளக்கு மேஜையின்மேல் வைக்கக் கூடியதாய் பல்புடனும், மேல் மூடனும் இருக்கிறது. சுவிச்சைப் போட்டவுடன் பளிச்சென்று நல்ல பிரகாசத்தை நாலா பக்கமும் பரப்புகிறது. விசேஷ சமயங்களிலும், சபைகளிலும், கூட்டங்கள் மத்தியிலும், இந்த விளக்கை வைத்துக் கொண்டால் ஒருவிதகஷ்டமுமில்லா திருப்பதோடு மிக அழகாகவு மிருக்கும். மாணக்கர்கள் மேஜையின்மீது வைத்துப் படிக்கச் சௌகரியம். உடனே எழுதுங்கள். இந்த தினுசில் கொஞ்சம்தான் கையிலிருக்கின்றன.

குறைந்த விலை ரூபாய் 4-8 0
தபால் செலவு தனி.

லகஷிமி ட்ரேட்ஸ் கம்பேனி,
173, தங்கசாலை, மதரான்.

படக்காட்சி

ரூ 20 ஆகயிருந்தது ரூ. 5-0-0 தான்

அமெரிக்கன் சிறிய சினிமா மெஷின்



வெகு நூதனமான இந்த மெஷினுல்பொதுப் படக்காகஷிச் சாலையில் அனுபவிக்கும் ஆனந்தத்தை உங்கள் வீட்டிலேயே அடையலாம். நர்த்தனமாடுவது, நீரச்செயல்,கள் மோட்டார், ரயில், ஏரோப்ளேன் விபத்துகள், பாரிஸ் மாதர் லீலைகள், மலைகள், ஆறுகள் முதலிய காகஷிகள் ஓடுவதும் அசைவதும் மிகத் தெளிவாகத் தெரியும். பிலிம் டேப் ஒரு கஜம்கூட அனுப்பப்படும். உபயோகிக்கும் முறையும் மெஷினுடன் உண்டு.

மெஷின் குறைந்த (அசல்)
விலை ரூ. 5 0 0
தனி பிலிம் டேப் 1 கஜம் 0 6 0
3 கஜங்கள் 1 0 0

முந்துங்கள்!

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பேனி,
173, தங்கசாலை வீதி, சென்னை.

(30)

மாதர்களுக்கு வரப்பிரசாதம்

கர்ப்பத்துக்குப் பின்னர் இளம்பெண்கள் பலவீனமேற்பட்டு, உடல் தளர்ந்து,சரியான உழைப்புக்குச் சக்தியின்றி,இல்வாழ்க்கையில் ஈடுபட யோக்கியமில்லாமல் போவதை அநேக குடும்பங்களில் பார்த்திருக்கிறோம். பலவீனம் காரணமாய் பல வியாதிகளும் ஏற்படுகின்றன. இதைத் தடுக்கும் பொருட்டே நாம் பிரத்தியேகமாக நூற்றுக்கு மேலான சத்துவகைகள் சேர்த்து பெண்களுக்குத் துணையாக,

“வதூ வீர்” லேகியம்

என்பதை தயாரித்திருக்கிறோம். ஒரு மண்டலம் சாப்பிட ஒரு டின் விலை ரூ. 3—0—0 தான்.

தபால் செலவு வேறு.

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,

(30) மருந்து வியாபாரிகள் 173. தங்கசாலை, மதராஸ்.

நான் யார் தெரியுமா?

ஒரு வருஷத்திற்குள் 8000 பிள்ளைகளைப் பெற்றவன் நான்!

என்னைப்பற்றி எந்த ஊரிலே வேண்டுமானாலும் கேளுங்கள். எங்கப்பன் மாதா மாதம் வந்து எங்களைக் குதூஹலப்படுத்தி விட்டுப் போகிறானென்று பெருமையோடு சொல்லிக் கொள்வார்கள். தினசரி முப்பது அல்லது நாற்பது புதிய பிள்ளைகளைப் பெற்று வருகிறேன். நின்னும் சலிக்காமல் இருக்கிறேன். குறைந்த பட்சம் 30,000 பிள்ளைகளையாவது பெற வேண்டுமென்பது நோக்கம். ஆனல், அப்பனைப் பார்க்கவேண்டுமானுல் காசு கொடுத்துத்தான் பார்க்கவேண்டும். வருஷா வருஷம் 1 ரூபாய் கொடுத்தால் என்னை வருஷத்திற்குப் பன்னிரண்டு முறை பார்க்கலாம். ஒரு தடவை மாதிரியாகப் பார்க்கவேண்டுமானால் அரையணு செலவு செய்து ஒரு கார்டு எழுதுங்கள். மறுநாளே உங்கள் இருப்பிடம் தேடி வந்து குதித்திடுவேன். என் பெயர் படத்தில் பாருங்கள். என் இருப்பிடம்,

(3) 244, தங்கசாலை வீதி, சென்னை.

முந்துங்கள்! முந்துங்கள்!!

விலை ரூபா 2—12—0 தான்



130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி சாமான்கள் விவரம்.

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனு; ரோல்டுகோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை ஷர்ட்டு பொத்தான்கள் செட் 12; டை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணுடி 1, அழகிய தந்தச் சீப்பு 1, நேர்த்தியான கத்தி 1; காமிநேஷன் நூதனசாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; கணிபார்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 34; அழகிய பலரக சேப்டி பின்கள் 24; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0.

தி. கிருஷ்ணு ஏஜன்ஸி,
தபால்பெட்டி 119, மதராஸ்.

(3)

சுயமரியாதையே சுகவாழ்வு

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சைவர்களுக்கு இவர் வார்த்தையில் நம்பிக்கையும், பார்ப்பான் தந்திரம் படாமலுமிருக்கவும் மெய்கண்ட தேவர் கச்சியிலிருந்தவ ரென்றும், தத்துவஞானப் பிரகாச முனிவர் ஆணைப்படி தெம்பரப்பாட்டியல்செய்ததாகவும் பாயிரப்பாடலில் சொல்லியிருக்கிறது. இந்ததமிழ் இலக்கணத்தில் எழுத்துக்கள்கூட பிராமணன் சூத்திரனை விரும்பது சோழவந்தான் இலக்கணப்பண்டிதர்திரு: சண்முகம் பிள்ளைக்குக்கூடத் தெரியவில்லை சிறிது கண்ணை விழித்துப்பார்த்த சுவாமி வேதாசலம் அவர்கள் வேளாளன் சூத்திரனல்ல வைசியன் யென்று கூடச் சொல்லப்படாதோ என்று கேட்டதற்கும், கா. சுப்பிரமணிய பிள்ளை தமிழிலும் நான் மறை முன்னிருந்தது என்று சொன்னதற்குமே, மா. சாம்பசிவம் பிள்ளையால் எழுதப்பட்ட திருநான் மறைவிளக்க ஆராய்ச்சி என்னும் நூலுக்கு அபிப்பிராயம் சொன்ன சைவப் பெரியார்களும் வசைக் குருக்களும் இன்னும் சிலரும் சுவாமி வேதாசலத்தையும், கா.சுப்பிரமணிய பிள்ளையையும் நாத்திகப் பிரசாரகர்களென்று சுட்டிக் காட்டி எழுதியிருக்கையில்; நம்முடைய வார்த்தைகளை கேட்க சைவப் பெரியார்களென்று சொல்லப்பட்ட பண்டிதர்களுக்குச் செவிதிரும்புமா? அவர்கள்செவிப்புறமெல்லாம் நீபிறரை அடித்தால் அந்த அடி உன்மீது தவறாமல் திரும்பி விழுமென்னும் நமது பெரியோர்கள் கண்டுபிடித்த மிகப்பெரிய தரும விதியைச் சொல்லி நிறப்புவோம்.

நமது லௌகிக காரியங்களின் நவீனப் போக்கும், உலகப்பொது அறிவின் மேன்பாடும் நம்மை இருபக்கமும் சூழ்ந்து கொண்டிருக்கின்ற தென்பதைப் பண்டிதர்கள் இப்பொழுது உணர்ந்துகொண்டு வருகிறார்கள். ஒரு ஜாதியின் ஆவிக்கும், காலத்தின் சக்திக்கும் இசைதவரக் கூடாதென்பதைப் பண்டிதர்கள் உணரவேண்டும். இல்லையேல் அவர்கள் படிப்பும் நாட்டு இலக்கிய இலக்கணங்களும் பலனற்று நாடும் சீர்கெட்டுப் போய்விடும். நவீனம் உலகமெல்லாம் இருக்கிறது. அவை நமக்குள்ளும் புகுந்து கொண்டது பண்டிதர்களை அது விடுவதில்லை; அதற்குப் பண்டிதர்களும் ஆசைப்படுகிறார்கள் மூலத்தின் பொருளைக் கருதாமல் எழுத்தைக் கருதுவது நவீனமன்று. கவிராயத்தனத்திற்கும் கவித் வத்துக்கும் பேதமிருப்பதுபோலகவீனத்தனத்திற்கும்கவீனத்தனத்திற்கும்பேதமுண்டு ஐரோப்பியரின் உடையிலும் ருசி பேதங்களிலும் பாடம் படிக்கும் பள்ளியாலும் தட்டையான நேர் வரிச் சுவர்களுடையனவும் சம தூரவரிசையில் உள்ள ஜன்னல் வரிசைகளை உடையனவுமான அவர்கள் ஆடம்பர ஆட்டங்களாடும் விளப்புகளிலும் சுந்தர விடுதிகளிலும் பெண்கள் தலையிலே தாறுவித இறகுகளைச்சுமந்தி வைக்கும் தொப்பிகளிலும் இப்பொழுதுபண்ணிக்கொள்ளும் கிராப்புகளிலும்நவீனங்களில்லை. அதைநவீனமென்று நாங்கள் வற்புறுத்துவதுமில்லை. அறிவிலும் தொழிலிலும் விடுதலையடைவதேநவீனம்; அதையேநாங்களும் வற்புறுத்துகிறோம் •சாஸ்திரங்களை ஒரு மூடபக்தியாக்கி அஸங்கதமாக அது உதவிய தருமப் பொதுவிதிக்குக்கூட நாடுகிற வழமையிலிருந்து நாம் விடுபட வேண்டுமென்றே பண்டிதர்களைச் சுயமரியாதைச் சங்கத்தார்கள் கேட்டுக் கொள்ளுகிறார்கள். நீங்கள் எல்வாரனிடத்தில் வரங்கள் கேட்பது போலவே தாழ்ந்தவர் இவர் உங்களிடமும் கேட்கிறார்கள். நீங்கள் இவர்களுக்கு உதவாவிட்டால் கடவுள் உங்களுக்கு உதவ மாட்டார்.

அறிவிப்பு

சுயமரியாதை மாகாணச் சங்கம்

சுயமரியாதை மாகாணச் சங்கத்து ரசீது புத்தகங்கள் தயாராகி விட்டன. இச்சங்கத்தில் அங்கத்தினராக இருக்க விரும்புபவர்கள் மானேஜர், ‘குடியரசு’ என்ற விலாசத்துக்கு எழுதி அங்கத்தினர்களாக அமைந்து கொள்ளுவார்களாக.

செய்தித்திரள்

விழுப்புரம்:—தென்னிந்திய ஆதித்திராவிட பொதுசன ஊழியச் சங்கத்தார் தமது 4-வது கூட்டத்தை அக்டோபர் 10-ந்தேதிக்குள் நடத்த வேண்டுமென்றும், கூட்டத்திற்கு திரு. நடேசமுதலியார். எம். எல். சி. அவர்களைத் தலைவராகவும், திருவாளர் ஈ வே. இராமசாமிப் பெரியாரையும், திரு. சனக சங்கர கண்ணப்பர் அவர்களையும் சொற்பொழிவாளர்களாயும் இசைந்து நிற்கக் கேட்டுக் கொள்ளுவதென்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக காரியதரிசி திரு. எம் சாமிநாதன் அறிவிக்கின்றார்.

பொன்மலை:—‘ சூழ்ச்சிக்காரர்களின் புரட்டுகளை வெளிப்படுத்தி, உண்மையை விளக்கிப் பரவுதல் செய்யும்படிக்கு’ பொன்மலைத் தொழிலாளர்கள் திரு. எர்னஸ்டு கிங் என்பவரது தலைமையில் 7, 8-ந் தேதிகளில் ஒரு மகாநாடு கூடினர்.

சிலாமா மலேயா நாடு:— 8-9-29ல் செல்வி உருக்குமணி அம்மாளுக்கும், திரு. ராஜகோபாலுக்கும் இனிது நடைபெற்ற திருமணக் காலத்தே பினாங்கு செல்வி பண்டித சானகியம்மாள் அவர்கள் ‘ஆண்மை அழியவேண்டு மென்றால் ஆத்திரப்படுவதேன்’ என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு அழகாக அறிவுரையாற்றினார். மற்றொரு மணமக்களின் ஒருவராய மணமகள் செல்வி உண்ணாமுலையம்மாளும் ஓர் சொற்பெருக்காற்றினார்.

வலியுள்ளவர்கள்!

சீக்கிரம் குணந்தரும் மருந்துக்கு ஆசைப்படுவார்கள்

அதுதான்

தேகரக்ஷாமிர்தம்

தீரும் வியாதிகள்

தலைவலி	வீக்கம்	வண்டு கடி
பிடரிவலி	சுரம்	தேள் கடி
முதுகுவலி	சளி	மேக ஊறல்
இடுப்புவலி	இருமல்	தேமல்
குடைச்சல்	மூக்கடைப்பு	வெட்டுக்காயம்
கை கால் பிடிப்பு	மார்சளி	பல்வலி
நெஞ்சடைப்பு	ஜன்னி	செவி நோய்

நிமிடத்தில் குணப்படுத்த ஒரு துளி அமிர்தம் போதுமானது.

ஒருமுறை பரிட்சிக்கவும்.

புட்டி 1க்கு விலை ரூ. 1—8 0 (தபால் செலவு வேறு)

நல்ல கமிஷன்; ஏஜண்டுகள் தேவை:—

தேகரக்ஷாமிர்தம் கம்பெனி,

(54) அம்மாபேட்டை, சேலம் (தென் இந்தியா.)

குடி அரசு புத்தகாலயம்

வெளியாக்கும்,

ஞானசூரியன் 2-ம் பதிப்பு ...	0—8—0
இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம்	0—4—0
சுயமரியாதைப் பாடல்கள். ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு ...	0—2—0
சோதிடப்புரட்டு ...	0—2—0
சாமிகளின் அடிமைகள் ...	0-12-0

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

(எப்) 14,மவுண்ரோட், மதராஸ்.

அதிநூதனம்! மிக ஆச்சரியம்!!

மாதம் 100ரூபாய் முதல் 500 ரூபாய்வரை சம்பாதிக்கக்கூடிய

சிறிய சைஸ் தையல் இயந்திரம்



இது சாதாரண மெஷின்களைப் போலவே மேஜையின்பேரில் முடுக்கி, தையல் வேலை செய்பவர்களும். பெண்களும், குழந்தைகளும், எல்லா தையல் வேலையும், சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியவை தைக்கலாம். இதைச் சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் பாக்கிங் செய்தனுப்பப்படும்.

5 வருட காரண்டியுள்ளது.

விலை ரூ. 3-14—0

பினாங், சிங்கப்பூர் முதலிய மலாய் நாட்டு நண்பர்கள் ரூ. 5—4—0.

முன் பணம் அனுப்பவேண்டும்.

(3) டாரிஸ் எம்போரியம், ஜி. டி. மதராஸ்.

வியாபாரத்திற்கு அழகு

விளம்பரம்செய்தல்

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

ஜெபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிம்பு, தூர்க்கந்த மடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 } தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1—0—0 }

பார்சவாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)

கைத்தொழில் முறைகள்

திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு
மாதம் 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பாதிக்கத்தக்க அரிய போதனைகளடங்கியது.

முதற்பதிப்பு வெளியான மூன்று மாதத்திலேயே செலவழிந்துவிட்டது. ஆயிரத்துக்கு மேற்கொண்ட இரகசிய முறைகளடங்கியது. கூந்தல் தைலங்கள், பாணவேடிக்கை மருந்துகள், இங்கி முலாம்கள், சோப்புகள், நாற்கால் பிராணிகளுக்குள்ள சிகிச்சைகள், ஜான் டானிக் பஸ்பங்கள், விஷக்கடிகளுக்குச் சிகிச்சை, வார்னிஷ்கள், பென்சில்கள், நிக்குச்சிகள், மெழுகுவர்த்திகள் இன்னும் பலவிதமுறைகளுடனும், இப்பதிப்பில் புதிதாக அதிர்ஷ்ட நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள், மேல்நாட்டுச் சகுனங்கள், வீடுகட்டு முறையும் விரிவாய் குறிப்பிட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொரு இந்திய மக்கள்களிடமும் இந்நூல் இருக்கவேண்டிய அவசியம். 300 பக்கங்கொண்ட எரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது, தனிப்பிரதி ரூபா 1—8—0 தான். தபால்செலவு அணா 5. உள்நாட்டிலிருந்து ஒரே தடவையில் 2 பிரதிகளுக்கு ஆர்டர் செய்வோருக்கு தபாற் செலவு இனாம்.

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்	ரூ. 2 0 0
கர்ப்பாட்சி அல்லது சுவாதீன கர்ப்பம்	0 8 0
ஸ்ரீவீரராகவர் கனகவல்லியின் மணக்கோலம்	0 8 0
மாயாமேயோ அல்லது மேயோவுக்கு சவுக்கடி	2 0 0
முத்துமாமா: 4-ம் பதிப்பு	0 4 0
விகடவினோத கொத்துகள்	0 10 0
காலத்தின் கோலம்	0 4 0
ஆனந்தவிகடன் அறுபத்தும்	0 4 0

வில்லிபாரத வசனம் அல்லது மகாபாரத வசன சங்கிரகம் 750 பக்கங்கள் கிளேஸ் காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு கண்ணைக் கவரத்தக்க ஆப்டோன் படங்கள் கலிகோ பயிண்டுடன் கூடியது. இதன் விலை ரூ. 3 0 0.

வாலஸா புஸ்தகசாலை, 244 தங்கசாலைவீதி, மதராஸ்.

பார்க்கப் பவுன் மோதிரம் தோற்கும்படியான
ஜ்வலிப்புள்ள அற்புத

எலெக்ட்ரிக் மோதிரம்

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பெற்றது!

இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர்வரை ஆண் பெண் இருதாரத்தார்களும் உபயோகப்படுத்தலாம். இம்மோதிரத்திற்குள்ளிருக்கும் எலக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள் நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும் நோயை குணப்படுத்திக் கொள்வதற்கும் இம்மோதிரத்தை உபயோகியுங்கள்!

இம்மோதிரமானது 8-வித லோகங்களைக் கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பெற்றிருக்கின்றது. இதை விரலில் போட்ட மாத்திரத்தில் அதினின்றும் எலெக்டிரிக் பவர் (மின்சார) சக்தி வெளியாகி விரல் மூலம் அது தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளூவன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம் சூலை வெட்டை முதலிய ஸ்திரீ கொடூரமான வியாதிகள் எதுவுமே அணுகாது. நற்சாட்சிப் பத்திரங்கள் பிரதிதினமும் வந்துகொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 8 0
மோதிரம் 3-க்கு விலை ரூபா 3 12 0

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

(3)

சென்னை அரசாங்க சுகாதார மந்திரி அவர்களாலும்,
அநேக ஜமீன்தாரர், பிரபுக்கள், ஜட்ஜுகள், வக்கீல்கள்,
டாக்டர்களாலும் தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்ற
தண்டபாணி வைத்தியசாலையின் மருந்துகள்.

அமிர்தம்

குடலைப்பற்றிய எல்லா வியாதிகளையும்போக்கும். அன்றாடம் மலப் பிரவர்த்தியைக் கிரமமாய் வெளிப்படுத்தி மூலாதார உஷ்ணம், மூல வியாதிகள் முதலிய எல்லா வியாதிகளையும் போக்கும். 1 சேர் டின் ரூ. 2.

பிரமமேக நிவாரணி

எவ்வளவு காலம் பிடித்த வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு வியாதிகளையும் உடனே குணப்படுத்தக் கூடியது

மருந்து புட்டி 1-க்கு ரூ. 2-4-0

அமிர்தரசம்

சகல நோய்களுக்கும், வலிகளுக்கும், உள்ளுக்கும், மேலுக்கும் உபயோகிக்கக் கூடியது. துளிக் கணக்கில் உபயோகிக்க மணிக்கணக்கில் சுகம்பெறலாம். புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

மகாமன்மத சிந்தாமணி லேகியம்

அபாரமான தாதுபுஷ்டியும், ஜீரண சக்தியும், புத்திக் கூர்மையும், பரமானந்த சுருசுருப்பும், ஞாபக சக்தியும் கொடுக்கக் கூடியது.

முதல்நெம்பர் 1-சேர்டின் ரூ 3.

[வி. பி. வேறு.] அர்சிய நாட்டார் தபால் செலவு உள்பட முன்பணம் அனுப்ப வேண்டியது. விபரமான பெரிய காட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

போலி டாக்டர்களிடம், போலி மருந்துகளை வாங்கி ஏமாந்து போகாமல் இருக்கும்படி பொது ஜனங்களை எச்சரிக்கின்றோம்.

தண்டபாணி வைத்தியசாலை,
தபால் பெட்டி 292, சைனாபஜார், மதராஸ்.

Beauty For Ladies!
பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்கைப் கலர்கள். கரைக்கும் முந்திக்கும் பூவேலையினமுள்ள உத்தமமான புடவை.

18 முழம் × 2½ அகலம் ரூ. 4-6
15 முழம் × 2½ அகலம் ரூ. 3-12

The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.
(34)

எங்கு சரசமான விலை? சுயம் சரக்கு?

அயல் நாட்டிலிருந்து இவண் வந்து விற்பதற்கு சரியான பெங்கால், சலர், சில்க், மேச்சஸ்கள், மாவிக்டியர் அடியிற் கண்டவர்களிடம் தேவையானது கிடைக்கும்.

காரியஸ்தர், தீப்பெட்டி கம்பெனி,
(37) பாலக்காடு, (தென்மலபார்.)

குமரன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
(எப்) மாதப்பதிப்பு ரூ. 1—8—0
மானேஜர் குமரன், காரைக்குடி.

முன்னேற்றம்

இஃது
சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே. சி. நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
“முன்னேற்றம்”
(எப்) 155, சிலிகிரோட், சிங்கப்பூர்

திருப்பூர் ஜவுளி தினுசுகள்

அழகான பலரகம் அச்சுவேஷ்டிகள், சால்வை ரகங்கள், துண்டு மடிகள், ஷர்ட்டிங் பீஸ்கள் மிக மலிவாகவே தயார் செய்யப்படுகிறது. வேண்டியவர்கள் நேரே எங்கட்கு ஆர்டர் செய்யவும். விலை விவரஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. Karuppanna Chettiar,
Khaddar Merchant
Tirupur, (S. India).,
(6)



இதுவரையில் தமிழில் வெளிவராத
“மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும்”
அதன்
“அநுபோகப் பயிற்சிமுறையும்”
(ஆப்டோன் படங்களுடன்)

(தபால் சார்ஜ் வேறு) விலை ரூபா 1—8—0

சிலோன், பினங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும். ஏஜண்டுகளும் தேவை. மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

மோட்டார் பாடசாலை
(1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக்கொள்ளலாம்

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும். மற்ற விவரத்திற்கு எழுதவும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்.
(11) மைலாப்பூர், சென்னை.

A GOLD PLATED LEVER WRIST WATCH FOR. Rs. 6—14—0.

எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு “பிடோ” லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். சிலிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல, 10 வருஷங்கள்கூட ரிப்பேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். வீணிலே சிலிண்டர் கடியாரங்களில் பணத்தை பாழாக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஏற்றுக் கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுள்ளது. இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.

Fancy Watch House,
(3) 119, G, P. O. MADRAS.

நீங்கள் ஷயக்கணக்கில் குணமடையாமல் விட்டு என் கவலைப்படுகிறீர்? அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும் கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ 9.
6 டின் விலை ரூ 5-4. 3 டின் விலை ரூ. 3

F, M. S. முதலிய ஊர்களுக்கு முன் பணம் ரூ. 2-8. அனுப்பவேண்டும்.
முன் பணம் இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவக்கரசு வைத்தியசாலை,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

வாசனை மிக்கது! குணம் பெற்றது!
எங்கள் புகழ்பெற்ற வாசனைச் சாமான்கள்

மூளைக்கு குளிர்ச்சியையும் வலுவையும் கொடுக்கக்கூடிய சந்தனாதித் தைலம் அறைக்கீரை விதைத் தைலம். இன்னும் அநேக வாசனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

ஸ்ரீ கிருஷ்ணா பரிமளா ஸ்டோர்,
23, பவழக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை.

ஒரே மாதம் வரையில் ரூ. 5-14,
ஒரு உண்மையான கிராமபோன்
என்ன விலைக்குக் கிடைக்கிறது பாருங்கள்.

மிக்கி போன் என்று சொல்லப்படும் சிறிய சைஸ் கிராமபோன் இது 200, 300 விலையுள்ள பெரிய கிராமபோன்களுக்கு இணையாக வாசிக்கக் கூடியது.



இதன் இயந்திர அமைப்பு பெரிய கிராமபோனைப்போலவே உள்ளது. இந்த கிராமபோன் பெட்டியில் சவுண்டு பாக்ஸ், ஆரன், இரண்டு டஜன் கொண்ட ஊசிப்பெட்டி எல்லாம் உண்டு. இரண்டு பக்கமும் பாடக்கூடிய ஒரு ரிக்கார்டும் இனாமாகச் சேர்த்தனுப்பப்படும். இங்கிலீஷ் பாண்டுகள், சிரித்தல், விகடம் பேசுதல் முதலிய ரிக்கார்டுகள் தயாராயுள்ளன.

தனி ரிக்கார்டு 1-க்கு ரூ. 1.
ஒரு ரிக்கார்டுடன் கிராமபோன் பெட்டி 1-க்கு ரூ 5-14.
தபால் செலவு ரூ 1-5.
உடனே எழுதுங்கள்.

Sole distributors.—
CANADIAN WATCH PEOPLE,
(3) G. P. O. MADRAS.

படித்தீர்களா?

பிரபஞ்ச உற்பத்தி 560 பக்கங்கள்; கிளோஸ் பதிப்பு; பொன் லிகிட்டு பைண்டு விலை ரூபாய்	4	0	0
அன்புற்ற மங்கை 346 பக்கம்	1	12	0
குடும்ப கதைகள் 800 பக்கம்	2	0	0
பாக்கெட் வைத்தியம்	1	0	0
கொக்கோகம்	1	0	0
மண வாழ்க்கையின் மர்மம்	2	4	0
கர்ப்ப சாஸ்திரம்	1	8	0
மதனகாம லீலை	2	0	0

தபால் கூலி வேறு; விபர ஜாப்தா இனாம்

விலாசம்:—
லக்ஷ்மண பிரசாத் கம்பெனி,
(25) (டிபாட் 19) புதுச்சேரி.

ஈரோடு, மு. கெ. கண்ணப்பா அவர்களால் ஈரோடு “தாரணா” பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.